# புதிய ஜனநாயகம்

(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

ஜனவரி 2026
ரூ. 20.00




# நூறுநாள் வேலைத் திட்டம் முடக்கமும், VB-G RAM-G திட்டத்தின் உள்நோக்கமும்!

பார்ப்பன எதிர்ப்பு மரபை உயர்த்திப்பிடி! திருப்பரங்குன்ற நெருப்புக்கு முடிவு கட்டு!

எஸ்.ஐ.ஆர்: போலி ஜனநாயகத்துக்குப் பதிலாக பாசிச சர்வாதிகாரம்!

நெக்ஸ்ட் தேர்வு: ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவை தகர்க்கும் பாசிச பாஜக!

# மதுரை பொதுக்கூட்டமும், போராட்டமும்!

**திருப்பரங்குன்றம் நில அளவைக்கல் மீது ஆர்.எஸ்.எஸ் - பாஜக நீதிமன்றம் ஏற்ற துடிப்பது தீபமல்ல; மக்களின் வளர்ச்சிக்கும், மத ஒற்றுமைக்கும் வைக்கும் நெருப்பு!** என்ற தலைப்பில் சங்பரிவார கும்பலின் கலவர திட்டத்தை எதிர்த்து பொதுக்கூட்டம் நடத்த 17.12.2025 அன்று திட்டமிட்டு காவல்துறையினர் அனுமதி மறுத்த காரணத்தால் நீதிமன்றத்தில் போராடி அனுமதி பெற்றது மக்கள் அதிகாரம். அனுமதியுடன் சில நிபந்தனையும் விதித்தார் நீதிபதி ஸ்ரீமதி. ஒரு மைக், ஒரு ஸ்பீக்கர் மட்டுமே வைக்க வேண்டும். கூட்டத்தை முழுமையாக வீடியோ பதிவு செய்து ஒப்படைக்க வேண்டும் என கூட்டமே நடத்தக் கூடாது என்பதைப் போல் இருந்தன அவரது நிபந்தனைகள்.

மக்கள் அதிகாரம் தோழர்களின் தமிழ்நாடு தழுவிய பிரச்சாரத்தின் மூலம் மக்களிடம் சங் பரிவார் கும்பலின் சதியை அம்பலப்படுத்த முடிந்தது. 21.12.2025 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். சிறப்புரையாற்றிய தோழர்கள் பார்ப்பன பாசிச கும்பலின் கலவர திட்டத்தையும் அதற்கு துணை போகும் நீதித்துறையையும் தோலுரிக்கும் விதமாக பேசினார்கள்.

கார்ப்பரேட் காவி பாசிசத்தை அம்பலப்படுத்துவது மட்டுமின்றி நேருக்கு நேர் நின்று வீழ்த்துகின்ற போராட்டத்தின் துவக்கமாக இந்தப் பொதுக்கூட்டம் அமைந்தது.






# கம்யூனிஸ்ட் கட்சி (இந்தியா) தொடக்க மாநாட்டின் 100-ஆவது ஆண்டு நினைவு!

1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 முதல் 28 வரை கான்பூரில் இந்தியாவின் கம்யூனிஸ்டுகள் ஒன்று கூடினர். இதுவே இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தொடக்க மாநாடாகும்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டின் 100-ஆவது ஆண்டு நினைவினை முன்னிட்டு, CPI (ML) (New Democracy) அமைப்பு கொல்கத்தா ராஜா சுபோத் மாலிக் சதுக்கத்தில் ஒரு சிறப்பு மாநாட்டை நடத்தியது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளர்கள் இதில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சி, நூறாண்டு காலமாக கம்யூனிஸ்டுகள் ஆற்றிய பங்கு மற்றும் அவர்கள் செய்த தியாகங்களை நினைவுகூர்ந்து, அந்த புரட்சிகர பாரம்பரியத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்ற உறுதியை மீண்டும் வலியுறுத்தியது.

இந்த நிகழ்வில் பல மாநிலங்களிலிருந்து வந்த கலாச்சார அமைப்புகள் பங்கேற்று நிகழ்ச்சிகளை நடத்தின. எமது மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் (PALA) கலைக்குழுவும் இதில் பங்கேற்று நிகழ்ச்சி நடத்தியது. இந்த நிகழ்வானது பாசிசத்துக்கு எதிராக இந்திய அளவில் புரட்சிகர அமைப்புகள் ஒன்றிணையத் துவங்கியிருப்பதை உணர்த்துவதாக இருந்தது.

*மக்கள் கலை இலக்கியக் கழகம் (PALA)*
தமிழ்நாடு








# தமிழகத்தில் காலூன்றத் துடிக்கும் பாசிச பாஜகவை தடுக்க பொருத்தமான வழிமுறைகளை கையாள்வோம்!


**புதிய ஜனநாயகம்**
(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

**தொகுதி : 39 இதழ் : 09**

**ஜனவரி - 2026**

தனி இதழ் நன்கொடை ரூ. 20.00
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

வடிவமைப்பு:
மு.துரை



தொடர்பு முகவரி :
**புதிய ஜனநாயகம்**
M.J.**சுதேஷ்குமார்**
45, பெருமாள் கோயில் தெரு,
மஞ்சங்காரணை,
திருவள்ளூர்,
தமிழ்நாடு - 601 102.
**மின்னஞ்சல்:**
puthiyajananayagam2022@gmail.com
**கைபேசி:**
+91 98844 31949


“எப்படியாவது, எப்பாடுபட்டாவது தமிழகத்தில் நிலவுகின்ற திமுக ஆட்சியை ஒழித்துக் கட்டுவோம்” என்று இந்திய ஒன்றியத்தின் உள்துறை அமைச்சரும் பாசிச பாஜக கும்பலின் கொள்கை வகுப்பாளர்களில் ஒருவரான திருவாளர் அமித்ஷா கொக்கரித்து இருப்பதன் மூலம் தமிழகத்தின் தேர்தல் அரசியல் முன்னிலைக்கு வந்துள்ளது.

தமிழகத்தை ஆளுகின்ற திமுக ஆட்சியை வீழ்த்துவதற்கு தேர்தல் அரசியல் கட்சிகள் என்ற முறையில் பாசிச பாஜகவின் கொத்தடிமைகளாக விளங்குகின்ற அதிமுக மற்றும் அந்த கூட்டணியில் இடம் பிடிப்பதற்கு துடித்துக் கொண்டுள்ள வன்னிய சாதி வெறி அமைப்புகளில் ஒன்றான அன்புமணி தலைமையிலான பாமக மற்றும் சில்லறைக் கட்சிகள் பாசிச பாஜக உடன் ஒன்றிணைந்து நிற்கின்றன.

“கழகங்கள் இல்லாத தமிழகம்” என்று வாய்ச்சவடால் அடித்து வந்த பாசிச பாஜக கும்பல் தற்போது கழகங்களில் ஒன்றான அதிமுகவை ஆதரித்து அவர்களுடன் பேரம் பேசுவதன் மூலமாகவும், அதிமுகவிலிருந்து பிரிந்து சென்ற ஓபிஎஸ் மற்றும் தினகரன் ஆகியோரையும் கூட்டாக சேர்ந்து ஒரே அணியாக நின்று தேர்தலை எதிர்கொள்ளுமாறு சமரசம் பேசியுள்ளனர். இவர்களுடன் கூட்டு சேர்ந்து திமுகவை வீழ்த்தலாம் என்று கணக்கு போட்டுள்ளனர்.

இன்னொரு புறம் பாசிச பாஜகவை எதிர்க்காமல் தமிழகத்தில் திமுக ஆட்சியை மட்டும் குறி வைத்து எதிர்த்து பேசுகின்ற தமிழ் பாசிச அமைப்புகளில் ஒன்றான நாம் தமிழர் கட்சி மற்றும் திடீரென்று முளைத்துள்ள தமிழக வெற்றிக் கழகம் போன்றவை திமுகவிற்கு எதிரான கருத்துக்களை பரப்புவதில் முன்னிலை வகிக்கின்றனர். தொடர்ச்சியான பிரச்சாரங்களின் மூலம் திமுகவுக்கு வாக்களிக்கின்ற மக்களை மடைமாற்ற துடித்து வருகின்றனர்.

இந்த தேர்தல் கூட்டணிகள்; திமுகவை ஒழித்துக் கட்டுவதற்கு செய்கின்ற முயற்சிகள் ஆகியவை அனைத்தும் தேர்தல் அரசியலுக்குள் நடக்கின்ற வழக்கமான நிகழ்வுகள் தான் என்று புரிந்துக் கொண்டால் அதைவிட பாமரத்தனமும், முட்டாள்தனமும் இல்லை என்றே கூற முடியும்.

2021 சட்டமன்றத் தேர்தலில் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் தமிழகத்தில் செவிலியர்கள் பணி நிரந்தரம், ஆசிரியர் பணியில் சம வேலைக்கு சம ஊதியம் வழங்குவது; தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை முற்றிலும் அகற்றுவது உள்ளிட்ட அம்சங்களில் திமுகவின் தோல்வியை விமர்சிப்பது அவசியம் தான் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

அதே சமயத்தில் நாடு முழுவதும் எழுந்துள்ள கீழ்க்கண்ட கேள்விகளுக்கும் நாம் நேர்மையான முறையில் பரிசீலித்து பதில் சொல்ல வேண்டிய அவசியம் உள்ளது.

இந்தியாவிலேயே பார்ப்பன எதிர்ப்பு மரபை தொடர்ச்சியாக கடைபிடித்து வருகின்ற; ஆரிய பார்ப்பன சாம்ராஜ்ய கனவுகளுக்கு தொடர்ச்சியாக பதிலடி கொடுத்து வருகின்ற



ஆரிய பார்ப்பன சாம்ராஜ்யத்துக்கு எதிராக பல நூற்றாண்டுகளாக போராடி வருகின்ற தமிழக மண், பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தோன்றிய பார்ப்பன எதிர்ப்பு மற்றும் பார்ப்பன இந்து மதத்திற்கு உள்ளேயே சீர்திருத்தத்தை கூறிய பல்வேறு சீர்திருத்தவாதிகள் ஆகியோர்களின் கருத்துக்களின் தாக்கத்தினால் தமிழகம் இந்திய ஒன்றிய அரசியலுக்கு வெளியில் எப்போதுமே சிந்தித்து வருகிறது.

போராட்டக் களமாக தமிழகம் திகழ்கிறது. தேர்தல் அரசியலுக்கு வெளியில் பாசிச எதிர்ப்பு பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு போன்றவற்றை பேசுகின்ற இந்திய ஒன்றிய அரசியல் கட்சிகள், மார்க்சிய லெனினிய குழுக்கள் மற்றும் இடதுசாரி அரசியலை விரும்புகின்ற அறிவுஜீவிகள் ஊடகவியலாளர்கள் அனைவரும் ஆச்சரியமாக கேட்கின்ற ஒரே கேள்வி இதுதான். தமிழகத்தில் மட்டும் எப்படி பாஜகவை உள்ளே விடாமல் தடுத்து வருகிறீர்கள் என்பதுதான்.

இதன் தொடர்ச்சியாகவே திமுகவை எப்படி புரிந்து கொள்வது அவர்களின் கொள்கை மற்றும் நடைமுறை ஆகியவை பார்ப்பன இந்திய தேசியத்துக்கு எதிராக உள்ளதா? ஆர் எஸ் எஸ் பாஜக முன்வைக்கின்ற ஏகாதிபத்திய சார்பு, கார்ப்பரேட் ஆதரவு பொருளாதாரக் கொள்கைகளுக்கு மாற்று அவர்களிடம் உள்ளதா என்பதை எல்லாம் அறிந்து கொள்ள விரும்புகின்றனர்.

இந்தக் கேள்விக்கான பதில் ஒன்றே ஒன்றுதான். ஆரிய பார்ப்பன சாம்ராஜ்யத்துக்கு எதிராக பல நூற்றாண்டுகளாக போராடி வருகின்ற தமிழக மண், பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தோன்றிய பார்ப்பன எதிர்ப்பு மற்றும் பார்ப்பன இந்து மதத்திற்கு உள்ளேயே சீர்திருத்தத்தை கூறிய பல்வேறு சீர்திருத்தவாதிகள் ஆகியோர்களின் கருத்துக்களின் தாக்கத்தினால் தமிழகம் இந்திய ஒன்றிய அரசியலுக்கு வெளியில் எப்போதுமே சிந்தித்து வருகிறது.

அதாவது இந்து - இந்தி - இந்தியா என்ற அடிப்படையிலான இந்து ராஷ்டிர கனவுகளுக்கு எதிராக ஒரு சுயேச்சையான, மதச்சார்பற்ற ஜனநாயக உரிமைகளை உயர்த்திப் பிடிக்கின்ற ஒரு பாரம்பரியம் தமிழகத்தில் நிலவுகிறது என்பதுதான் அந்த பதில்.

இந்த பார்ப்பன எதிர்ப்பு போராட்டக் களத்தையும், மரபையும் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ள திமுக காவி பாசிச கும்பலுக்கு எதிராக அவ்வப்போது முனகுவதோடு சரி மாறாக காவி பாசிசத்தை ஆதரித்து இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்துள்ள கார்ப்பரேட்டுகளை வரவேற்பதில் திமுகவும் ஒரே அலைவரிசையில் சிந்திக்கிறது என்பதுதான் எதார்த்த நிலைமை.

அமித்ஷாவின் கனவுகளை அவரது லட்சியத்தை முறியடிப்பதற்கு திமுகவிடம் சித்தாந்த ரீதியாகவோ, மாற்று சுயசார்பு பொருளாதாரக் கொள்கையை முன்வைக்கின்ற திட்டமோ எதுவும் கிடையாது என்பதுதான் தற்போது வரை உள்ள நிலைமை. இத்தகைய சூழலில் திமுகவைத் தேர்தலில் ஆதரிப்பது என்ற வழிமுறைகளுக்கு வெளியிலும் தமிழகத்தின் நீண்ட கால பார்ப்பன எதிர்ப்பு மரபையும் இந்தியாவிற்கே முன்னுதாரணமாக செயல்படுகின்ற அதன் போராட்ட மரபையும் உயர்த்திப் பிடிக்கின்ற வகையில் சிந்திப்பதும், அதை நோக்கி மக்களை அணிதிரட்டுவதும் தான் தற்போதைய அரசியல் சூழலாக மாறி உள்ளது.

இதனை எந்த அளவிற்கு வீச்சாக கொண்டு செல்கிறோமோ அந்த அளவிற்கு தான் தமிழகத்தின் பார்ப்பன எதிர்ப்பு பாரம்பரியத்தையும், இந்தியாவிலேயே ஆரிய பார்ப்பன சாம்ராஜ்யத்திற்கு எதிராக நிமிர்ந்து நிற்கின்ற தமிழகத்தை பாதுகாக்கவும் முடியும். ■

# நூறுநாள் வேலைத் திட்டம் முடக்கமும், VB-G RAM-G திட்டத்தின் உள்நோக்கமும்!

'கிராமப்புறங்களில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட' MGNREGA திட்டம் 2005 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஜான் மேனார்டு கீன்சின் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கவே இந்த திட்டம் கொண்டுவரப்பட்டது என்றாலும் கிராமப்புற மக்களின் பட்டினிக் கொடுமையை இது ஓரளவு நீக்கியது.

இந்த திட்டமானது தற்போது மோடி அரசாங்கத்தால் நள்ளிரவில் ரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக விக்சித் - பாரத் ரோஜ்கார் மற்றும் அஜீவிகா மிஷன் (கிராமின்) (VB-G RAM - G) சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் இல்லாத நேரத்தில் மசோதா வியாழக்கிழமை (டிசம்பர் 18) மாலை 6.40 மணிக்குப் பிறகு தொடங்கிய சுமார் ஆறு மணி நேர விவாதத்திற்குப் பிறகு, அதிகாலை 12.32 மணிக்கு மாநிலங்களவையில் மசோதா நிறைவேற்றப்பட்டது.

காந்தி பெயர் கொண்ட திட்டத்தை மோடி அரசு திட்டமிட்டு மாற்றியுள்ளதாக காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் எதிர்த்தன. காந்தியை கொன்றவர்களுக்கு காந்தியின் பெயர் கொண்ட திட்டத்தின் பெயரை மாற்றுவது கடினமா என்ன? பிரச்சினை பெயரை மாற்றுவது அல்ல. அந்த திட்டத்தின் உள்ளடக்கத்தை மாற்றுவது தான்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புக்கு மூடுவிழா;
மோடியின் ஓய்வற்ற உழைப்பு.




### புதிய பொருளாதாரக் கொள்கையும், ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டமும்

1990-களின் உலகமயமாக்கலும், தாராளமயமாக்கலும், தனியார்மயமாக்கலும் இந்தியாவை சொர்க்க பூமியாக்கிவிடும் என்று காற்றில் சித்திரங்கள் தீட்டினர் முதலாளித்துவ பொருளாதார அறிஞர்களும், முதலாளித்துவ ஊடகங்களும். ஆனால் அவை அமுலாகத் தொடங்கிய பின்பு இந்தியப் பொருளாதாரம் பெரும் நெருக்கடியில் சிக்கியது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் ஆட்சியாளர்கள் மீது எழுந்த அதிருப்தியையும் கோபத்தையும் திசைத் திருப்பவும் கொண்டுவரப்பட்டது தான் கீனிசிய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம்.

2015 பிப்ரவரி 28 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம் முந்தைய அரசுகளின் தோல்விக்கான "ஒரு உயிருடன் நிற்கும் நினைவுச்சின்னம்", "கோடிக்கணக்கான மக்களை குழிகள் தோண்டி வாழ வேண்டிய நிலைக்கு தள்ளுகிறது" எனப் பேசினார். அதாவது மக்கள் இப்படி குழிகள் தோண்டி தான் பிழைக்க வேண்டுமா என இளக்காரமாக திட்டத்தை கிண்டலடித்தார். அதே நரேந்திர மோடி தான் பின்னாளில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க முடியாத தனது கையாலாத்தனத்தை மறைக்க "படித்த இளைஞர்களே! வேலையில்லை என்றால் பக்கோடா போட்டுப் பிழைத்துக் கொள்ளலாமே, அதன் மூலம் தொழில் முனைவோர் ஆகலாமே" என பேசியதை நாம் மறந்திருக்க மாட்டோம்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம் என்று சொல்வதை விட 100 நாள் வேலை திட்டம் என்றால் தான் எளிய மக்கள் இத்திட்டத்தை எளிதில் புரிந்து கொள்வார்கள். இந்த 100 நாள் வேலை 1993 - 94 ஆம் ஆண்டில் தான் முதன் முதலில் முன்மொழிக்கப்பட்டது. அதாவது தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கைகள் இந்தியாவில் புகுத்தப்பட்ட போது அதன் அக்கம் பக்கமாகவே இத்திட்டம் முன்மொழியப்பட்டது என்ற பின்னணியில் இருந்து பார்ப்பது அவசியம். பின்னர் 2005 ஆம் ஆண்டு சட்டமாக ஆக்கப்பட்டது. இது நாடு முழுவதும் ஊரக

**VB-G RAM - G திட்டத்தில் மாநில அரசின் உரிமை பறிக்கப்பட்டு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. வேளாண் பயிர் காலத்தில் 60 நாட்கள் வேலை இருக்காது என அறிவித்துள்ளது. இந்த நாட்களில் விவசாய வேலை கிடைக்காதவர்கள் பட்டினி கிடந்து சாகவேண்டும் என்கிறதா மோடி அரசு.**

**... விவசாயிகளின் நண்பன் என்பது போல் பாசாங்கு செய்துக் கொண்டு விவசாய தொழிலாளர்களின் வாழ்விற்கு சாவுமணி அடித்துள்ளது.**

மக்களுக்கு வருடத்திற்கு குறைந்தது 100 நாட்கள் சம்பள வேலை வழங்க உறுதி செய்யும் சட்டம். இப்போது 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் 12 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் வேலை வாய்ப்பு வழங்க கூடிய ஒரு பெரிய திட்டமாக இது திகழ்கிறது.

கடந்த 20 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த திட்டத்தை தற்போது நிறுத்தியுள்ளது மோடி அரசு. அதற்கு பதிலாக புதிய திட்டத்தை திணித்துள்ளது. புதிய திட்டமான VB-G RAM G 125 நாட்கள் வேலை வழங்குவதாக முன்மொழிகிறது. பழைய திட்டத்திலிருந்து கூடுதலாக 25 நாட்கள் வழங்குவதாகவும் சொல்கிறது. பழைய MGNREGA திட்டத்தில் தொழிலாளர்களின் ஊதியத்திற்கான முழு செலவையும் ஒன்றிய அரசே ஏற்றது. பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செலவில் ஒரு குறிப்பிட்ட பகுதியை (75:25) மாநில அரசுகள் பகிர்ந்து கொண்டன. திட்டத்தின் நிர்வாகப் பொறுப்பில் மாநில அரசுகள் முக்கிய பங்கு வகித்தன.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள புதிய திட்டத்தின் படி மொத்த செலவில் 60 சதவீதத்தை ஒன்றிய அரசும், 40 சதவீதத்தை மாநில அரசும் ஏற்கும் என முன்மொழியப்பட்டுள்ளது. அதாவது கடந்த ஆண்டு 2024 - 25 இல் 100 நாள் வேலைத் திட்டத்திற்கு 85,839 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. அதில் தமிழ்நாட்டிற்கு ரூ.1000 கோடி ஒன்றிய அரசு ஒதுக்கியிருக்கும் என எடுத்துக் கொண்டால் இனிவரும் காலங்களில் 600 கோடியை மட்டுமே ஒன்றிய அரசு வழங்கும். மீதமுள்ள 400 கோடியை மாநில அரசுகளே ஏற்க வேண்டும் என்கிறது புதிய மசோதா.

ஏற்கெனவே தமிழ்நாடு அரசிற்கு ஒன்றிய மோடி அரசு போதிய நிதி ஒதுக்காமல் வஞ்சித்து வரும் நிலையில், புதிய திட்டத்தின் மூலம் மாநில அரசிற்கு நிதி சுமையை அதிகரித்துள்ளது. இதன் மூலம் உழைக்கும் மக்களின் மீது அக்கறை இல்லாத மாநில அரசுகள் நிதி இல்லை என புதிய திட்டத்தினை செயல்படுத்தாமல் ஒன்றிய அரசின் நிதிக்கு காத்திருக்கும் சூழ்நிலையை மோடி அரசு உருவாக்கியுள்ளது.

## நூறுநாள் வேலையை ஒழித்துக் கட்டும் மோடி அரசின் திட்டம்!

ஏற்கெனவே செயல்படுத்தி வந்துள்ள நூறு நாள் வேலைத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் குறைந்துக் கொண்டே வந்துள்ளது. 2021-22 இல் சுமார் 98,468 கோடியும், 2022-23 இல் 90,811 கோடியும், 2023-24 இல் 89,268 கோடியும், 2024-25 இல் 85,839 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளது ஒன்றிய அரசு. அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தை உயர்த்தியும் உள்ளது. சம்பள உயர்விற்கேற்ப நிதியின் அளவு அதிகரித்திருப்பதற்கு பதிலாக குறைந்துள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்தினை முடக்கும் நோக்கிலேயே நிதியை குறைத்து உழைக்கும் மக்களின் வயிற்றில் அடித்துள்ளது பாசிச மோடி அரசு. உதாரணமாக தமிழ்நாட்டில் மொத்தம் 1 கோடியே 9 லட்சம் தொழிலாளர்கள் இத்திட்டத்தில் இணைந்துள்ளார்கள். இவர்களுக்கு ஒரு நாள் ஊதியமாக 2022 - 23 லிருந்து 2025 - 26 வரை முறையே ரூ.281, 294, 319, 336 என சம்பளம் ஆண்டு தோறும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கேற்ப நிதி ஒதுக்கீடு அதிகரிக்கவில்லை.

நடப்பாண்டில் தமிழ்நாட்டிற்கு 12 கோடி மனித வேலை நாட்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்டதை விட மிகக் குறைவு. 2020-21 இல் 33.39 கோடி, 2021-22 இல் 34.57 கோடி, 2022-23 இல் 33.46 கோடி, 2023-24 இல் 40.87 கோடி, 2024-25 இல் 30.61 கோடி மனித நாட்கள் வேலை வழங்கப்பட்ட நிலையில், இந்த முறை மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு மட்டுமே வேலை நாட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் முடிக்கப்பட்ட பணிகளுக்காக ரூ.1251.39 கோடி ஊதியம் இன்னும் வழங்கப்படாமல் ஒன்றிய அரசு நிலுவையில் வைத்துள்ளது. இந்த புள்ளிவிவரங்கள் வைத்துப் பார்த்தாலே நூறு நாள் வேலைத் திட்டத்தை ஒழித்துக் கட்டுவதற்கான மோடியின் சதித்திட்டம் அம்பலமாகிவிடும். தமிழ்நாட்டின் நிலமையே இப்படி என்றால் மீதமுள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் நிலை இன்னும் மோசமாகிவிடும்.

இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தில் பெண்கள் 55 சதவீதம் பணியாற்றுவதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அதுமட்டுமில்லாமல் வர்க்க வாழ்க்கையில் நிலமற்ற கூலி விவசாயிகளாகவும், பார்ப்பன மதத்தினால் ஒடுக்கப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்களாகவும் வைக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரமாகவும் நூறு நாள் வேலைத்திட்டம் இருந்து வந்துள்ளது. சிலர் நூறுநாள் வேலைத்திட்டம் வந்த பிறகு விவசாயப் பணிகளுக்கு ஆள் கிடைக்கவில்லை. சும்மா உட்கார்ந்து போவதற்கு அரசு ஊதியம் தருவதால் தான் யாரும் வருவதில்லை என சீமான் போன்ற திரள்நிதியின்

மூலம் பொறுக்கி தின்னும் கும்பல் பேசிவருவதில் துளியும் உண்மை இல்லை. அவர்கள் விவசாய வேலைக்கு செல்லாததற்கு காரணம் பண்ணையார்கள், விவசாய தொழிலாளர்களை நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு முன்பு வரை அற்ப கூலிக்கு வேலைக்கு அமர்த்தினார்கள். நூறுநாள் வேலைத்திட்டத்தில் அதை விட அதிகமாக சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. அதனாலேயே அங்கு சென்றார்களே தவிர வேலை இல்லாமல் தாயம் விளையாடுவதற்கு அல்ல. இதுபோன்ற பேச்சுக்கள் உழைக்கும் மக்களை இழிவுபடுத்தும் செயல்.

ஏற்கெனவே செயல்பட்டு வந்த MGNREGA சட்டம், 2005-ன் படி, விவசாயத் தொழிலாளர்களுக் கான குறைந்தபட்ச ஊதியத்துக்கு (Minimum Wages for Agricultural Labourers - MWAL) குறைவாக 100 நாள் வேலை ஊதியம் இருக்கக்கூடாது. ஒவ்வொரு மாநிலத்திலும் வாழ்வாதாரச் செலவு உணவு, வீடு, போக்குவரத்து செலவுகள் உள்ளூர் தொழிலாளர்களின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது. அதையே அடிப்படையாக கொண்டு 100 நாள் வேலை ஊதியமும் நிர்ணயம் செய்யப்படுகிறது. அதன்படி ஒருநாள் ஊதியம் அதிகபட்சமாக ஹரியானா மாநிலத்திற்கு 400 ரூபாயாகவும். குறைந்தபட்சமாக இமாச்சல் பிரதேசம் மற்றும் நாகலாந்திற்கு 241 ரூபாயாகவும் நிர்ணயித்திருந்தது ஒன்றிய அரசு. இதன் படி பார்த்தால் தற்போது விவசாயத் தொழிலாளர்களின் வருமானத்தை விட நூறுநாள் வேலையின் கூலி குறைவாகவே வழங்கப்படுகிறது.

இந்நிலையில் புதிய திட்டத்தின் அடிப்படையில் வேலை வழங்குவது இனி ‘‘வேலை கேட்டால் அரசு தரவேண்டும்’’ (Right To Work) என்ற சட்ட உரிமையாக இல்லாமல், முன்கூட்டியே நிர்ணயிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா மற்றும் சத்தீஸ்கர் போன்ற ஏழை மாநிலங்களில், MGNREGA இந்தியாவின் மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உயிர்நாடியாக செயல்பட்டது. மோடி அரசு அறிவித்துள்ள இந்த புதிய திட்டத்தினால் வறுமையின் பிடியில் சிக்கியுள்ள மாநிலத்தின் உழைக்கும் மக்கள் கடுமையான பாதிப்பை எதிர்கொள்வார்கள்.

மேலும் VB-G RAM - G திட்டத்தில் மாநில அரசின் உரிமை பறிக்கப்பட்டு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. வேளாண் பயிர் காலத்தில் 60 நாட்கள் வேலை இருக்காது என அறிவித்துள்ளது. இந்த நாட்களில் விவசாய வேலை கிடைக்காதவர்கள் பட்டினி கிடந்து சாகவேண்டும் என்கிறதா மோடி அரசு. விவசாயத்தில் இயந்திரங்கள் புகுத்தப்பட்டு நாற்று நடுவது முதல் நெல் அறுவடை வரை மனித உழைப்பு அருகி பெரும்பாலும் இயந்திரங்களே பயன்படுத்தப் படுகின்றன. சில விவசாய தொழிலாளர்களுக்கே வேலைக் கிடைக்கிறது. ஆனால் மோடி அரசு என்னவோ விவசாயிகளின் நண்பன் என்பது போல் பாசாங்கு செய்துக் கொண்டு விவசாய தொழிலாளர்களின் வாழ்விற்கு சாவுமணி அடித்துள்ளது.

## உழைக்கும் மக்களை புதைக்குழியில் தள்ளும், மோடி அரசின் புதிய திட்டம்!

பாசிச மோடி அரசின் இத்தகைய போக்கை கண்டித்து, 300க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், குடிமை சமூக அமைப்புகள் மற்றும் களப்பணியாளர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தை ரத்து செய்வதற்குப் பதிலாக, கள ஆய்வு மற்றும் ஆலோசனைகளை மேற்கொண்டு, சட்டத்தில் உள்ள குறைபாடுகளை சரிசெய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளனர். 355 பேர் கையெழுத்திட்ட திறந்த கடிதத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்திற்கு (MGNREGA) பதிலாக வந்த 2025-ஆம் ஆண்டின் விக்சித் பாரத்-உறுதி ரோஜ்கார் மற்றும் ஆஜீவிகா மிஷன் (கிராமின்) சட்டம் பல பிரச்சனைகளை "தவறாகப் புரிந்துக் கொள்வதன்" அடிப்படையில் அமைந்துள்ளது என்று கூறினர். புதிய சட்டமானது, MGNREGA கடந்த இருபது ஆண்டுகளில் கொண்டு வந்த "தீவிர அதிகாரமளித்தலை" செயலற்றதாக்கும் தீர்வுகளையும் மேற்கொள்கிறது என்று அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆண்டு மோடியின் ஆட்சியில் பொருளாதாரம் உயர்ந்ததாக சங்பரிவார் கும்பலும், அதன் ஊடக அடிமைகளும் பெருமை பீற்றிக் கொண்டிருக்கும் வேலையில் தான், இந்தியாவின் சமூக ஏற்றத்தாழ்வு அதிகரித்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. வெறும் 1 சதவீதத்தினர் இந்தியாவின் 40 சதவீத செல்வங்களை வைத்துள்ளனர். அந்த ஒரு சதவீதத்தினரில் மோடியின் நெருங்கிய கூட்டாளிகளான அம்பானி, அதானி, மிட்டல் உள்ளிட்டோர் உலக பணக்காரர் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில் உழைக்கும் மக்கள் வேலை யின்மையிலும் போதிய வருமானமின்றியும் புலம்பெயர் தொழிலாளர்களாய் பஞ்சைப் பராரிகளாய் அலைந்து திரியும் நிலையை புதிய பொருளாதாரக் கொள்கை உருவாக்கியுள்ளது. இப்படியான மோசமான பொருளாதார (Economic), சமூக (Social) ஏற்றத்தாழ்வு அதிகரித்திருக்கும் இந்தியாவில் குறைந்த பட்ச ஆதாரமாய் இருந்த நூறுநாள் வேலைத் திட்டத்தை நிறுத்துவது உழைக்கும் மக்களை உயிருடன் படுகுழியில் தள்ளி சமாதி கட்டிவிடும் கொடூரத் தன்மையுடையதாகும்.

ஏகாதிபத்திய நிதிமூலதனக் கொள்ளைக்காரக் கும்பல் வரைமுறையற்ற சுரண்டலில் ஈடுபடுவும், உலகின் செல்வங்களை மறுபங்கீடு செய்யவும் உருவாக்கப்பட்ட தோல்வியடைந்த மறுகாலனியாக்க கொள்கையின் விளைவாலேயே மக்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனை முறியடிக்காமல் மாற்றுவழித் தேடுவதோ அல்லது மீண்டும் கீனிசிய வழியில் தற்காத்துக் கொள்ள முனைவதோ உழைக்கும் மக்களுக்கு துரோகம் இழைப்பதற்கு சமம். இந்த புதிய பொருளாதாரக் கொள்கையை தூக்கியெறிந்து விட்டு மக்களுக்கான புதிய வகையிலான மாற்றுப் பொருளாதாரத்தை உருவாக்க இந்தியாவில் மக்கள் எழுச்சி அவசியமாயுள்ளது.

● மாரிமுத்து

# தமிழகத்தின் பார்ப்பன எதிர்ப்பு மரபை உயர்த்திப்பிடிப்பதே, ஆர்எஸ்எஸ் பற்ற வைக்கத் துடிக்கும் திருப்பரங்குன்ற நெருப்புக்கு முடிவு கட்டும்!

“ஜெர்மனிய தத்துவார்த்த சிந்தனைகளின் வாரிசாக, ஜெர்மனிய தொழிலாளி வர்க்கம் விளங்குகிறது” என்று முன்வைத்தார் தோழர் ஏங்கெல்ஸ்.

இந்திய ஒன்றியத்தின் பண்டைய தத்துவ மரபுகளை அதாவது வேத மறுப்பு தத்துவ மரபுகளை இன்றளவும் விடாப்பிடியாக பிடித்துக் கொண்டு அதனை விஞ்ஞானபூர்வமான வாழ்க்கை நெறிமுறைகளுக்கு வழிகாட்டியாக கொண்டு செயல்படுகிறது பாட்டாளி வர்க்கம். இதனாலேயே இந்தியாவை ஆட்டிப்படைத்து வரும் ஆர்எஸ்எஸ் - பாஜக முன்வைக்கின்ற சனாதனம் என்று சொல்லக்கூடிய ஆரிய பார்ப்பன மேலாதிக்கத்தை கேள்விக்கு உள்ளாக்கிய மரபை உயர்த்திப் பிடிக்கிறது தமிழகத்தைச் சார்ந்த பாட்டாளி வர்க்கம்..

இந்தியத் தத்துவ மரபு ஒருபோதும், ‘இந்து மரபு அல்ல’ என்ற கண்ணோட்டத்தை இந்தியா முழுமைக்கும் கொண்டு செல்கின்ற முன்னணி செயல் வீரராக செயல்பட்டுக் கொண்டுள்ளது புதிய ஜனநாயகம் மற்றும் அதன் தோழமை அமைப்புகள். இந்த மரபுக்கு சொந்தம் என்ற அடிப்படையிலேயே, “திருப்பரங்குன்றம் நில அளவைக்கல் மீது ஆர் எஸ் எஸ்-பாஜக-நீதிமன்றம் ஏற்றத் துடிப்பது கார்த்திகை தீபம் அல்ல!” என்பதை முன்வைத்து தமிழகமெங்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டது.

திருப்பரங்குன்றம் தீபத்தூண் விவகாரத்தை தொடர்ச்சியாக கையாண்டு வருவதுடன் பார்ப்பன சனாதனத்தையே தனது வாழ்வியலாக கொண்டுள்ள ‘நீதியரசர்’ திருவாளர் ஜி.ஆர். சுவாமிநாதன், அவரது சகபாடிகள் துணையுடன் கார்த்திகை தீபம் ஏற்ற சாதகமான தீர்ப்பினைப் பெற்றுள்ளது. தீபத்தூண் விவகாரத்தை ஆர்எஸ்எஸ்-பாஜக ஏன் இந்த அளவிற்கு கொண்டுச் செல்கிறது என்பதற்கு விடை ஒன்றே ஒன்றுதான்.

இந்தியாவிலேயே ஆர்எஸ்எஸ் - பாஜக முன்வைக்கின்ற பார்ப்பன மேலாதிக்கம் கொண்ட சனாதன இந்து மதத்தை; அதன் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் தற்போது வெளிப்படுகின்ற பார்ப்பன பாசிசத்தை எதிர்த்து போராடுகின்ற மாநிலங்களில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது தமிழகம்.

தமிழகம் பார்ப்பன எதிர்ப்புக் கோட்டையாக திகழ்வதற்கு பல்வேறு அடித்தளங்கள் இடப்பட்டு வந்தன. வரலாற்றுப் பொருள் முதல்வாதப் பார்வையில் இதனை பரிசீலனை செய்தால் இந்திய தத்துவ மரபு என்று ஆர்எஸ்எஸ் - பாஜக முன்வைக்கின்ற இந்து தத்துவ மரபுக்கு, வைதீக மத மரபுக்கு எதிராக தமிழகத்தில் சித்தர்கள், வள்ளுவர் முதல் வள்ளலார், அய்யா வைகுந்தர் அதன் பிறகு தந்தை பெரியார், நக்சல்பாரி புரட்சியாளர்கள் என்று நீண்ட பாரம்பரியம் தமிழகத்தில் நிலவுகிறது. இந்திய தத்துவ மரபுக்கு எதிராக அதாவது இந்து தத்துவ மரபுக்கு எதிராக பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் மாற்று ஒன்றை முன்வைத்து செயல்படுகிறது.

இந்த சித்தாந்தம் உருவாக்குகின்ற பகுத்தறிவு, சுயமரியாதை மற்றும் மான உணர்ச்சி ஆகியவற்றை குழிதோண்டி புதைப்பதற்கும், அடிமைத்தனத்துடன் பார்ப்பன மற்றும் பிற மேல் சாதிகளுக்கு காலாகாலத்திற்கும் அடிமைகளாக வாழ்கின்ற வாழ்க்கையை முன்வைக்கின்ற சனாதன தர்மத்தை தமிழகத்திலும் நிலை நாட்ட வேண்டும் என்பதுதான் ஆர்எஸ்எஸ் - பாஜக மற்றும் இந்து முன்னணி குண்டர் படையின் நோக்கம். இதுவே திருப்பரங்குன்றம் தீபத்தின் பின்னாள் உள்ள பார்ப்பன பாசிச அரசியல்.

இந்த நோக்கத்தை சரியாக புரிந்துக் கொண்டு அதனை ஈரக்குலையில் தாக்குகின்ற போராட்டங்களை முன்வைத்து மதுரை மட்டுமல்ல தமிழகம் முழுவதும் பார்ப்பன எதிர்ப்பு மரபை உயர்த்தி பிடித்து பிரச்சாரம் மற்றும் போராட்டங்களை நடத்தி வருகிறது புதிய ஜனநாயகம் மற்றும் தோழமை அமைப்புகள்.

“சமஸ்கிருதத்தை எதிர்த்து நின்ற தமிழ், பார்ப்பனியத்தை எதிர்த்து நின்ற பவுத்தம், சமணம், சித்தர்கள் ... என்று ஒரு நெடிய மரபைக் கொண்டிருக்கும் தமிழகத்தில், மக்கள் மத்தியில் விரவியிருக்கும் இந்த பார்ப்பன எதிர்ப்புணர்வை வேறு யாரும் புரிந்து வைத்திருக்கவில்லை என்றாலும், தமிழகத்தின் பார்ப்பனக் கும்பல் சரியாகவே புரிந்து வைத்திருக்கிறது” என்று அக்-2007, புதிய ஜனநாயகம் இதழில் எழுதி இருந்தோம். இதனால்தான் தமிழகத்தில் நிலவுகின்ற பார்ப்பன எதிர்ப்பு மரபை ஒழித்துக் கட்டிவிட்டு அடிமைப் புத்தி கொண்ட சனாதன மரபை உருவாக்குவதற்கு ஒரு நூற்றாண்டு காலமாக இயங்கிக் கொண்டுள்ளது பார்ப்பனக் கும்பல். திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியாக தோன்றிய, ‘நான் ஒரு பாப்பாத்தி’ என்று வெளிப்படையாகவே சவால் விட்ட ஜெயலலிதா ஆண்டபோது தமிழகத்தை பார்ப்பன நாடாக்க முயற்சி செய்தது.

காஞ்சி சங்கர மடத்தின் உதவியுடன் தமிழகத்தில் பார்ப்பனக் கும்பல் விரும்புகின்ற பொற்கால ஆட்சியை நிறுவுவதற்கு ஜெயலலிதா தலைமையிலான அதிமுக உதவி புரிந்தது என்றே சொல்ல முடியும். அந்தக் காலகட்டத்தில் ராமர் பாலம் என்று இல்லாத ஒரு கதையை உருவாக்கி இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் ராமன் பாலம்

கட்டியதாகவும், அணில் அதற்கு துணை புரிந்ததாகவும் புராணக்கால புளுகுமூட்டைகளை, உண்மை என்று நிரூபிப்பதற்கு படாத பாடுபட்டனர்.

கன்னியாகுமரி மண்டைக்காடு கலவரம் முதல் பல்வேறு கலவரங்களை நடத்தி தமிழகத்தில் காலூன்றுவதற்கு முயற்சி செய்து வருகின்ற ஆர்எஸ்எஸ் - பாஜகவினர் திருப்பரங்குன்றம் தீபத்தூண் விவகாரத்தை தற்போது ஒரு வாய்ப்பாக மாற்ற முயற்சி செய்து வருகின்றனர்.

இதனை எதிர்த்து முறியடிப்பதற்கு திருப்பரங்குன்றம் அயோத்தி அல்ல என்று பிரச்சாரம் செய்தால் மட்டும் போதாது. தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு தெருவிலும் குடியிருக்கின்ற சொல்லிக் கொள்ளக்கூடிய இந்துக்கள் மத்தியில் நிலவுகின்ற சாதிய உணர்வு படிப்படியாக இந்து உணர்வாக மாற்றப்படுவதை எதிர்த்து முறியடிக்கின்ற வகையில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பண்டைய தமிழர்கள் மத்தியில் வைதீக மதத்தின் தாக்கம் சிறிதும் இல்லை என்பதை நிரூபிக்கின்ற அகழ்வாய்வு முடிவுகள் குறிப்பாக கீழடியின் முடிவுகளை வெளியிடக்கோரி மிகப்பெரும் போராட்டத்தை நடத்த வேண்டும்; அதன் தொடர்ச்சியாக இந்தியாவின் வரலாற்றை தென்னிந்தியாவிலிருந்து எழுத வேண்டும் என்பதை முன்வைத்து ஆரிய பார்ப்பனக் கும்பலுக்கு பதிலடி கொடுக்க வேண்டும்.

கீழடி மட்டுமல்ல! ஆதிச்சநல்லூர், கொற்கை, கொடுமணல், அரிக்கமேடு, மல்லப்பாடி, பொருந்தல் போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகள்; அவை முன்வைக்கின்ற உயர்ந்த தமிழரின் நாகரிக மரபுகள் ஆகியவற்றை முன்வைத்து பிரச்சாரங்கள் நடத்தப்பட வேண்டும்; இதனை பெருமிதமாக கொண்டு செல்வதற்கு தமிழ் மக்கள், குறிப்பாக உழைக்கும் மக்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

இதற்கு சித்தர்கள், வள்ளுவர் முன்வைத்த பார்ப்பன எதிர்ப்பு கருத்தியல்களை தமிழகம் முழுவதும் கொண்டு செல்வது என்பது மட்டுமின்றி, அய்யா வைகுந்தர், வள்ளலார் முன்வைத்த பார்ப்பன எதிர்ப்புக் கருத்தோட்டங்களையும், வைதீக மதம் என்ப்படும் பார்ப்பன மத எதிர்ப்புக் கருத்தியல்களையும் மக்கள் மத்தியில் கொண்டுச் செல்ல வேண்டியுள்ளது.

வேத மதத்தின் யோக்கியதையை திரை கிழித்த, எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணக் காப்பியமான நீலகேசி, ''வேதவாதிகள் கொலை தீது என்பர்; பின்னர் வேள்வியில் கொலை செய்து அதனை அறம் என்பர். காமத்தை விட்டொழிக்க வேண்டும் என்பர்; பின்னர் காமத்தால் வீடு பேறு கிட்டும் என்பர். வேதத்துக்கு புறம்பான சமயங்கள் கூறுகின்ற நெறிகளை தீமையானது என்பர்; பின்னர் உலகில் உள்ள எல்லா சித்தாந்தங்களும் எங்களுடைய வேதத்தில் உள்ளது என்பர். இவ்வாறு பல முரண்களைக் கொண்டதே வேதம்'' என்று நீலகேசியில் வேதவாதிகளுக்கு எதிரான வாதம் முன்வைக்கப்படுகிறது.

> ''பறச்சி ஆவதேதடா பனத்தி ஆவதேதடா?
> இறைச்சி தோல், எலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ?
> பறச்சி போகம் வேறதோ, பனத்தி போகம் வேறதோ?
> பறச்சியும், பனத்தியும் பகுத்துப் பாரும் உம்முளே''

- என்று சாதிய வன்கொடுமைகளை சாடி வீழ்த்துகிறார். சிவவாக்கியர். இதைவிட இன்னும் கூர்மையாக,

> ''நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே
> சுற்றி வந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா?
> நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
> சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவை அறியுமோ?''

- என்று அம்பலப்படுத்தியதன் மூலம் கறி உணவு, சைவம், அசைவம் என்ற வேறுபாடு, வேத மதம் முன்வைக்கும் பூசை, மந்திரங்கள் ஆகியவற்றையும் தூக்கி எறியச் சொல்கிறார் சிவவாக்கிய சித்தர்.

இந்த முற்போக்குத் தன்மை கொண்ட பார்ப்பன எதிர்ப்பு மரபு தான் நமது மரபு; அந்த மரபின் அடிப்படையில் சாதி, மத வேற்றுமைகளை கடந்து ஒற்றுமையாக வாழ்வோம். திருப்பரங்குன்றம் விவகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு தமிழகத்தை கலவர பூமியாக மாற்றுவதற்கு துடித்துக் கொண்டுள்ள ஆர்எஸ்எஸ் - பாஜக கும்பலுக்கு முடிவுக் கட்டுவோம்.

பார்ப்பன மதத்திற்கு உள்ளேயே உள்ள இத்தகைய சீர்திருத்தவாதிகள் முன்வைத்துள்ள கருத்துக்களைக் கொண்டு செல்லும் போதே, பார்ப்பன மதத்திற்கு வெளியிலிருந்து போராடிய, போராடிக் கொண்டுள்ள பெரியாரிய மற்றும் புரட்சிகர கம்யூனிச இயக்கங்களில் மரபை உயர்த்தி பிடித்துக் கொண்டு செல்வதும், மதச்சார்பற்ற ஜனநாயக உணர்வை வளர்ப்பதற்கு போராடுவதும் தான் திருப்பரங்குன்றம் சிக்கலுக்கு நிரந்தரமாக முடிவு கட்டும்.

இத்தகைய பாரம்பரியத்தை தான் ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுக்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும் தோழர் எங்கெல்ஸ் முன்வைத்தார். அவரது வழியில் வரலாற்றுப் பொருள் முதல் வாத கண்ணோட்டத்தில் உயர்த்தி பிடிப்போம். பார்ப்பன (இந்து) மதத்தை எதிர்த்து போர் தொடுப்போம்.

திருப்பரங்குன்றம் விவகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு தமிழகத்தில் நிலவுகின்ற பார்ப்பன எதிர்ப்பு மரபை ஒழித்துக் கட்டுவதற்கும்; பார்ப்பன எதிர்ப்பு மரபை தக்க வைப்பதற்கு போராடுகின்ற புரட்சிகர, ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதற்கும்; பார்ப்பன எதிர்ப்புச் சக்திகளில், 'காலிப் பெருங்காய டப்பாவாகவாவது' எஞ்சியுள்ள திமுகவின் ஆட்சியை தூக்கியெறிவதற்கும்; பல்வேறு வகையான சதித் திட்டங்களையும், அரசியல் கூட்டணிகளையும், கலவரங்களையும் உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது ஆர்எஸ்எஸ் - பாஜக.

சங்கர மடத்தின் வைதீகப் பார்ப்பனர்கள் துணையுடன், துக்ளக் குருமூர்த்தி போன்ற லெளகீக பார்ப்பனர்கள் முதல் ஸ்ரீதர் வேம்பு உள்ளிட்ட ஹை டெக் பார்ப்பனர்கள் வரை ஒன்று சேர்ந்து தமிழகத்தை மதக் கலவர பூமியாக்க முயற்சிக்கின்ற அனைத்து விதமான முயற்சிகளையும் எதிர்த்து முறியடிப்போம்.

● செல்லப்பன்

# சிறப்புத் தீவிரத் திருத்தம் (SIR) போலி ஜனநாயகத்துக்கு பதிலாக பாசிச சர்வாதிகாரம்!

கடந்த அக்டோபர் 27 ஆம் தேதியன்று மேற்குவங்கம், குஜராத், மத்தியப்பிரதேசம் தமிழ்நாடு, கேரளா, சத்தீஸ்கர், இராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், கோவா உட்பட 09 மாநிலங்களிலும், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபர் தீவுகள் மற்றும் இலட்சத்தீவுகள் ஆகிய 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (SIR) பணிகள் தொடங்கப்படும் என இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதில் தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் ஆகியவை எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்திய தேர்தல் ஆணைய அறிவிப்பின் அடிப்படையில் தமிழகத்தில் நவம்பர் மாதம் 04 ஆம் தேதி எஸ்.ஐ.ஆர் பணிகள் தொடங்கின. இப்பணியில் 68 ஆயிரம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (பிஎல்ஓ) ஈடுபடுத்தப்பட்டனர். இப்பணிகள் கடந்த டிசம்பர் - 18 ஆம் தேதி முடிக்கப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியல் மாவட்டம் மற்றும் தொகுதி வாரியாக மாநில தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டது.

வெளியிடப்பட்ட வரைவு பட்டியலில் 97 லட்சத்து 37 ஆயிரத்து 832 பேர் வாக்காளர் நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். அதாவது, தமிழ்நாட்டில் மொத்தமாக 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்கள் இருந்தனர். ஆனால் தற்போது வெளியான வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 5 கோடியே 43 லட்சத்து 76 ஆயிரத்து 755 ஆக குறைந்து உள்ளது. தமிழகத்தின் மொத்த வாக்காளர்களில் ஏறக்குறைய 15.19 சதவீதம் நீக்கப்பட்டுள்ளது. ஒரே கட்டத்தில் இவ்வளவு பெரிய அளவிலான நீக்கம் என்பது தமிழ்நாடு அரசியல் களத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்த காத்திருக்கிறது.

## பாஜக – தேர்தல் ஆணையம் கூட்டு! மக்களின் வாக்குரிமைக்கு வேட்டு!

வெளிநாட்டு சட்டவிரோத குடியேறிகள் இந்தியாவில் வாக்குரிமை வைத்து உள்ளனர். இது தேச பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என பீதியூட்டி வட மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர் அமல்படுத்த வேண்டும் என்று கதையளந்தது பாசிச பாஜக. தென் மாநிலங்களில் போலி வாக்காளர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை நீக்குவதற்கு எஸ்.ஐ.ஆர் தேவை என்று நியாயப்படுத்தியது. இதனை அப்படியே வாந்தி எடுத்தார் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார்.

குறிப்பாக, பீகாரில் சிறப்பு வாக்காளர் திருத்தம் ஜீன்-24 ஆம் தேதி அறிவித்த போது "தகுதியுள்ள அனைத்து குடிமக்களின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் (ER) சேர்க்கப்படுவதை உறுதி செய்வது மற்றும் சட்ட விரோத குடியேறிகள் பெயரை நீக்குவதே எஸ்.ஐ.ஆர் நோக்கம்" என்றார்.




தேர்தல் ஆணையம் நடுநிலை தவறி ஒன்றிய அரசின் கைப்பாவையாக, ஏவல்நாயாக மாறி வாக்காளர் பட்டியலை வெட்டியும், ஒட்டியும் மாற்றியுள்ள நிலையில், தேர்தல் நடக்கும் முன்னரே சொல்லிக் கொள்ளுப்படும் அரை குறை ஜனநாயகத்தின் கழுத்து நெறிக்கப்பட்டு பாசிசம் அரங்கேறி வருவதையே நமக்கு படம் பிடித்து காட்டுகிறது.

இரண்டாம் கட்ட அறிவிப்பு செய்த அக்டோபர் 27 அன்று செய்தியாளர் சந்திப்பில் “போலி பெயர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை நீக்குவதற்காக” சிறப்பு தீவிர திருத்தம் தமிழ்நாடு உள்ளிட்ட 09 மாநிலங்களில் நடத்தப்படுவதாக அறிவிப்பு செய்தார். அதாவது தேர்தல் ஆணையம், பாஜகவுடன் கூட்டு சேர்ந்தே மக்களின் வாக்குரிமை பறிக்க போவதாக அறிவித்தார் என்றால் மிகையல்ல.

பீகாரில் பெண்கள், சிறுபான்மையினர், பட்டியல் மற்றும் பழங்குடி மக்கள் உள்ளிட்டோர் அதிகளவில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். இதே வழிமுறை தமிழகத்திலும் கடைபிடிக்கப்பட்டு உள்ளது. வாக்காளர் பெயர்கள் நீக்கப்பட்டதற்கு காரணமாக இறந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், வாக்காளர் பட்டியலில் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பதிவு செய்தவர்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பெயர் இடம்பெற்றிருந்த வகையில் 3.98 லட்சம் பேர் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் குறிப்பிட்ட ஒரு தொகுதியில், குறிப்பிட்ட வாக்கு சாவடியில் மட்டும் அவரது பெயரை சேர்த்து, கூடுதலாக இடம் பெற்றுள்ள பகுதியில் நீக்கம் செய்யாமல், மொத்தமாக பெயரை நீக்கம் செய்துள்ளது. புலம்பெயர்ந்து சென்றுவிட்டார்கள் என்று நீக்கப்பட்டு உள்ளவர்களில் பட்டியலின வகுப்பை சேர்ந்த மக்கள் அதிகமாக உள்ளனர். அதேபோல், கிருஸ்துவ மற்றும் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த பெண்கள் குறிப்பிட்ட முகவரியில் வசிக்கவில்லை என நீக்கப்பட்டுள்ளனர். இறந்து போனவர்களெனத் தேர்தல் ஆணையம் நீக்கிய பலர் உயிரோடிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எளிமையாக சொன்னால், தகுதி வாய்ந்த வாக்காளர்களை திட்டமிட்டே நீக்கி மக்களின் வாக்குரிமையை பறித்து விட்டது தேர்தல் ஆணையம்.

வாக்காளர் நீக்கம் மட்டுமல்ல புதிய வாக்காளர் சேர்ப்பது என்பதிலும் தில்லு முல்லு செய்துள்ளது தேர்தல் ஆணையம். குறிப்பாக, பீகாரிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் குடியிருக்கலாம் என்றும் பீகார் வாக்காளர் பட்டியலில் அவர்கள் நீக்கப்பட்டதால் தமிழ்நாட்டின் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என எஸ்.ஐ.ஆர். படிவங்களில் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களுக்கான பட்டியலில், “01.07.2025-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட பீகாரின் சிறப்பு தீவிரத் திருத்தத்தின் வாக்காளர் பட்டியலின் பிரதி” என்பது 13-வது ஆவணமாக சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பீகார் மக்கள் தமிழகத்தில் வாக்களிப்பதற்கு வாக்குரிமை அளிக்கிறது தேர்தல் ஆணையம்.

தகுதிவாய்ந்த வாக்காளர்களை நீக்குவது, பாஜகவுக்கு சாதகமாகப் போலி வாக்காளர்களை சேர்ப்பது என்று தேர்தல் ஆணையம் பாஜகவுடன் கூட்டு சேர்ந்து சதி செய்ததன் மூலமே பீகாரில் பாஜக கூட்டணி வெற்றி பெற்றது. அதே பாணியை பயன்படுத்தி தேர்தல் ஆணைய உதவியுடன் தமிழ்நாட்டிலும் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என மக்களின் வாக்குரிமை பறிக்கும் சதியில் இறங்கியுள்ளது பாசிச பாஜக.

**இந்தியாவில் நிலவும் கார்ப்பரேட் காவி பாசிசம் தனது ஒவ்வொரு நடவடிக்கையின் மூலம் பாசிச சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும், அதிகாரம் இல்லாத இடங்களில் சட்டப்பூர்வமாக அதிகாரத்தை உருவாக்கவும் முயற்சித்தே வருகிறது. இந்த வகையிலே எஸ்.ஐ.ஆர் மூலம் இருக்கின்ற போலி ஜனநாயக தேர்தல் கட்டமைப்பை பாசிசத்திற்கு ஏற்ப மாற்றியமைத்து பாசிச அதிகாரத்தை தமிழகத்தில் நிறுவ பார்க்கிறது. எனவே, 2026 சட்டமன்றத் தேர்தலை எப்போதும் வந்து போகும் மாநில தேர்தல் போல அணுகுவது அடி முட்டாள்தனமாகும்.**

## பாஜக தலைவர்களின் சொல்லும்! தேர்தல் ஆணையத்தின் செயலும்!

தமிழக தேர்தல் ஆணையம் வரைவு வாக்காளர் திருத்தப்பட்டியல் வெளியிடுவதற்கு பத்து நாட்களுக்கு முன்பு டிசம்பர் - 09 ஆம் தேதியன்று கோவையில் செய்தியாளர்களை சந்தித்த பாஜக தலைவர்களில் ஒருவரான அண்ணாமலை, “தமிழகத்தில் ஒரு கோடி வாக்காளர்கள் நீக்கப்படுவார்கள். சென்னையில் 25% முதல் 30% நீக்கப்பட வேண்டிய வாக்காளர்கள் உள்ளனர். இது தமிழக தேர்தல் களத்தை நிச்சயம் மாற்றும்” என்று தெரிவித்திருந்தார்.

அதாவது, கணக்கீட்டு படிவம் பெறுவதற்கான அவகாசம் டிச.14-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டு, டிசம்பர் 14 முதல் 18 வரை வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது என தமிழக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள நிலையில், பட்டியல் தயாரிப்பதற்கு முன்பாகவே பாஜக அண்ணாமலை பேசியிருப்பதை பார்க்கும் போது முன்கூட்டியே பாசிச பாஜகவால் தமிழக வாக்களர்கள் எவ்வளவு பேர் நீக்கப்பட வேண்டும், எங்கு நீக்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்ட பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளதா? என்ற சந்தேகம் எழுகிறது.

அதேபோல், பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் பேசுகையில், ‘‘வருகின்ற சட்டமன்ற தேர்தலில் இரட்டை இலக்க தொகுதிகளில் வெற்றி பெறுவோம்’’ என தெரிவித்திருந்தார். இதற்கு ஏற்ப வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதா? என்ற சந்தேகமும் எழுகிறது. குறிப்பாக, பாசிச பாஜக கவனம் கொடுத்து

தீவிரமாக வேலை செய்து வரும் திருநெல்வேலி, மதுரை, கோவை பகுதிகளில் தங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என கருதுபவர்களை திட்டமிட்டு அதிக எண்ணிக்கையில் நீக்கியும், பாஜக வெற்றி பெறும் வகையிலும் வரைவு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் 2.14 லட்சம் வாக்காளர்களும், கோவை மாவட்டத்தில் 6.30 லட்சம் வாக்காளர்களும் மதுரை மாவட்டத்தில் 3.80 லட்சம் வாக்காளர்களும் நீக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தலைநகரான சென்னையில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் பாஜக கூட்டணி கட்சிகள் வெற்றி பெற வேண்டும் என்ற வகையிலும், தனது இருப்பை உருவாக்கவும் ஒவ்வொரு தொகுதியிலும் 20% முதல் 35% வரை என மொத்தமாக 14.25 லட்சம் பேர் வாக்காளர் நீக்கப்பட்டுள்ளனர்.

மேலும், குறைந்தபட்சம் மூன்று முறை சென்று விசாரணை மேற்கொண்டு அதன் அடிப்படையிலேயே வரைவுப் பட்டியலை உருவாக்கியுள்ளதாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார். ஆனால், மக்கள் பலரும் அதிகாரிகள் எங்கள் வீட்டிற்கு இதுவரை வரவில்லை. நாங்கள் காத்துக்கொண்டு இருந்தோம் என சமூக ஊடகங்களில் பதிவிட்டு இருந்தனர் என்பதும் தேர்தல் ஆணையத்தின் யோக்கியதையை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

மொத்தத்தில் தமிழ்நாட்டில் குறிப்பிட்ட தொகுதிகளில் வெற்றி பெறும் நோக்கத்திலும், தங்களது செல்வாக்கு இல்லாத தொகுதிகளில் மக்கள் அடித்தளத்தை உருவாக்கும் வகையில் வட மாநில மக்களின் வாக்குகளை புதிய வாக்காளர்களாக சேர்ப்பதற்கும் மட்டுமே சிறப்பு வாக்காளர் திருத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என்பது பாஜக தலைவர்களின் சொல்லும், தேர்தல் ஆணையத்தின் செயலும் நிரூபித்து விட்டது.

## திமுகவின் சடங்குத்தனமான எதிர்ப்பும்! மாற்று திட்டமும்!

வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டதற்கான காரணங்கள் சரியில்லை என்று ஆட்சேபனைகள் இருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் ஜனவரி 18 ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. ஜனவரி -04 ஆம் தேதி வரை 11 லட்சம் மக்கள் தங்களது பெயர் நீக்கப்பட்டது பற்றி ஆட்சேபனை தெரிவித்து புதிய படிவம் எழுதி கொடுத்துள்ளனர். 18-ஆம் தேதிக்குள் மீதமுள்ளவர்கள் ஆட்சேபனை தெரிவித்து படிவம் எழுதி கொடுத்தாலும் நீக்கப்பட்டவர்களின் அனைவரின் பெயர்கள் வாக்காளர் இறுதி பட்டியலில் சேர்க்கப்படுமா என்பது சந்தேகமே. கடமைக்கு என ஒரு சில லட்சம் பெயர்களை சேர்த்துவிட்டு இதுவே இறுதி பட்டியல் என தேர்தல் ஆணையம் தனது பாசிச சர்வாதிகாரத்தை காட்டும் என்பதே உண்மை.

தேர்தல் ஆணையம் நடுநிலை தவறி ஒன்றிய அரசின் கைப்பாவையாக, ஏவல்நாயாக மாறி வாக்காளர் பட்டியலை வெட்டியும், ஒட்டியும் மாற்றியுள்ள நிலையில், தேர்தல் நடக்கும் முன்னரே சொல்லிக் கொள்ளப்படும் அரை குறை ஜனநாயகத்தின் கழுத்து நெறிக்கப்பட்டு பாசிசம் அரங்கேறி வருவதையே நமக்கு படம் பிடித்து காட்டுகிறது.

இதனை பற்றி சிறிதும் கவலை கொள்ளாமல் பாசிச பாஜகவை தேர்தலில் வெற்றி பெற்று விட முடியும் என பகல் கனவு காண்கின்றன எதிர்கட்சிகள். பீகாரில் வாக்காளர் பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டவுடன் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தீவிரமாக வாக்கு திருட்டு என பிரச்சாரம் மேற்கொண்டனர். ஆனால், சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் ராகுல் காந்தியை தவிர மற்றவர்கள் எப்போதும் போல் கவர்ச்சியான வாக்குறுதி அளித்து தேர்தலை எதிர் கொண்டு தோல்வியை சந்தித்தனர். இதற்கு பிறகும் படிப்பினை எடுக்காமல் இருக்கின்றன இண்டியா கூட்டணி கட்சிகள். இந்த கூட்டணியில் உள்ள திமுகவும் இதற்கு விதிவிலக்கல்ல.

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் மூலம் வாக்களர்கள் நீக்கப்பட்டாலும் தனக்கு பெரிய பாதிப்பு இல்லை. தனது கட்சிக்கான வாக்கு வங்கி தக்க வைக்கப்பட்டுள்ளதாகவே கருதுகிறது திமுக. குறிப்பாக, தேர்தல் அதிகாரிகளுடன் ஒவ்வொரு வார்டிலும் கீழ் மட்டத்தில் உள்ள திமுக நிர்வாகிகள் கூடவே சென்று தங்களது கட்சிக்காரர்களின் வாக்குகள் நீக்கப்படாமல் உள்ளதா என்பதை மட்டும் பார்த்துக் கொண்டனர். இவர்கள் கொடுத்த தகவல் அடிப்படையில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தங்களால் வெற்றி பெற்றுவிட முடியும் என்று தவறாக கணித்து எஸ்.ஐ.ஆர்-க்கு எதிராக பெரிய அளவில் வினையாற்றாமல் ஆர்ப்பாட்டம் நடத்துவது மற்றும் வழக்கு தொடுப்பது என சடங்குத்தனமான எதிர்ப்பை மட்டுமே காட்டுகிறது. திமுகவின் இந்த நடவடிக்கை பாசிசத்தை மறைமுகமாக அனுமதிக்கும் செயலாகும்.

இந்தியாவில் நிலவும் கார்ப்பரேட் காவி பாசிசம் தனது ஒவ்வொரு நடவடிக்கையின் மூலம் பாசிச சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும், அதிகாரம் இல்லாத இடங்களில் சட்டப்பூர்வமாக அதிகாரத்தை உருவாக்கவும் முயற்சித்தே வருகிறது. இந்த வகையிலே எஸ்.ஐ.ஆர் மூலம் இருக்கின்ற போலி ஜனநாயக தேர்தல் கட்டமைப்பை பாசிசத்திற்கு ஏற்ப மாற்றியமைத்து பாசிச அதிகாரத்தை தமிழகத்தில் நிறுவ பார்க்கிறது. எனவே, 2026 சட்டமன்றத் தேர்தலை எப்போதும் வந்து போகும் மாநில தேர்தல் போல அணுகுவது அடி முட்டாள்தனமாகும்.

கார்ப்பரேட் காவி பாசிசத்தை வீழ்த்துவதற்கு தேர்தல் கட்சிகள், ஜனநாயக சக்திகள், பாசிச எதிர்ப்பு சிந்தனை கொண்டவர்கள் என அனைவரையும் குறைந்தபட்ச செயல் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து ஐக்கிய முன்னணி அமைத்தும், ஒட்டு மொத்த மக்களையும் ஒன்றிணைத்து மக்கள் முன்னணி அமைத்தும் மாபெரும் போராட்டங்களை கட்டியமைத்து கீழிருந்து எழுச்சியின் மூலம் மட்டுமே வீழ்த்த முடியும். இவையன்றி வேறு குறுக்கு வழிகள் ஏதும் இல்லை.

● விஜயன்

## இந்தியா:

# அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வு! கம்யூனிசமே ஒளிகாட்டும் தீர்வு!

கடந்த 2025 டிசம்பர் மாதத்தில் *Word Inequality Database* என்ற இணையதளம் வெளியிட்ட உலக சமத்துவமின்மை அறிக்கை 2026 உலக மக்களிடையே வர்க்க ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளதையும், முன்னெப்போதும் இல்லாத அளவில் உலகப் பெருமுதலாளிகளிடம் செல்வங்கள் குவிந்துவருவதையும், அதேசமயத்தில் சாதாரண உழைக்கும் மக்களின் செல்வங்கள் சுரண்டப்படுவதையும் அம்பலப்படுத்தியுள்ளது. அவ்வறிக்கையில் “உலகிலுள்ள 60,000-க்கும் குறைவான கோடீஸ்வரர்களைக் கொண்ட, உச்சத்தில் இருக்கும் 0.001% பேர், மனிதகுலத்தின் கீழ்த்தட்டில் உள்ள மக்களின் மொத்தச் செல்வத்தை விட மூன்று மடங்கு அதிக செல்வத்தை வைத்திருக்கிறார்கள். ஏறக்குறைய ஒவ்வொரு பிராந்தியத்திலும், முதல் 1% பேர் மட்டுமே கீழ்த்தட்டில் உள்ள 90% மக்களின் மொத்தச் செல்வத்தை விட அதிக செல்வத்தைக் கொண்டுள்ளனர்” என்று ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் கோரமுகத்தை திரைகிழித்துக் காட்டியுள்ளது.

உலக அளவிலான புள்ளிவிபரங்கள் இப்படியென்றால் இந்தியாவிலோ காவி பாசிஸ்டுகள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியபிறகு நாட்டில் ஈட்டப்படும் மொத்த வருமானத்தில் மக்கள்தொகையில் மிகவும் ஏழ்மையான 50% பேருக்கு வெறும் 15% மட்டுமே கிடைக்கிறது. அதே சமயம் 10 சதவீதமுள்ள தரகு முதலாளிகளோ 57.7% வருமானத்தை அபகரித்துக் கொள்கின்றனர். நாட்டின் வருமானத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பகுதி 1% பேரிடம் மட்டுமே சென்று சேர்கிறது. வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், மொத்த மக்கள்தொகையில் 0.001% பேர் மிகவும் ஏழ்மையான 50% மக்களை விட 2800 மடங்கு அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள்!.




சொத்தின் அடிப்படையில், இந்தியாவில் உள்ள மிகவும் ஏழ்மையான 50% மக்களின் சொத்து நாட்டின் மொத்தச் சொத்தில் வெறும் 6.4% மட்டுமே ஆகும். அதே சமயம், நாட்டிலுள்ள தேசங்கடந்த, உள்நாட்டுத் தரகு முதலாளிகளான 10% பேர் 60% பங்கைக் கொண்டுள்ளனர். அதாவது மிகவும் ஏழ்மையான 50% மக்களின் சராசரிச் சொத்து மதிப்பு சுமார் ரூ.1.7 லட்சம் ஆகும். ஆனால் அதானி, அம்பானி, அனில் அகர்வால் உள்ளிட்ட தேசங்கடந்த, உள்நாட்டுத் தரகு முதலாளிகளான 10% பேர் சராசரியாக சுமார் ரூ.88 லட்சம் கோடி மதிப்புள்ள சொத்தைக் கொண்டுள்ளனர். மொத்த மக்கள் தொகையில் வெறும் 0.001% மட்டுமே இருக்கும் இவர்களிடம் சராசரியாக ரூ.2261 கோடி மதிப்புள்ள சொத்துகள் குவிக்கப்பட்டுள்ளன. இது மிகவும் ஏழ்மையான 50% பேரை விட ஏறக்குறைய 1.3 லட்சம் மடங்கு அதிகமாகும்.

வருமான ஏற்றத்தாழ்வைப் பொறுத்தவரை இந்தியா தென்னாப்பிரிக்காவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது. தென்னாப்பிரிக்காவில், மக்கள் தொகையில் முதல் 10% பேர் தேசிய வருமானத்தில் 65%-க்கும் அதிகமான பங்கை அபகரித்துக்கொள்கின்றனர். இந்தியாவில் இந்த அபகரிப்பு கிட்டத்தட்ட 58% ஆக உள்ளது. நாட்டின் தேசிய வருமானத்தில் கிட்டத்தட்ட 23% மேற்கண்ட தேசங்கடந்த, உள்நாட்டுத் தரகு முதலாளிகள் உள்ளிட்ட 1% முதலாளித்துவ கும்பலுக்கே செல்கிறது.

செல்வக் குவிப்பைப் பொறுத்தவரை தென்னாப்பிரிக்காவில் கிட்டத்தட்ட 86%இல் வெறும் 10% பேர் கைப்பற்றியிருக்கின்றனர். பிரேசில், அமெரிக்கா மற்றும் சீனாவுக்குப் பின்னர் இந்தியாவில் மொத்த செல்வத்தில் 65%-ஐ இக்கும்பல் கைப்பற்றியிருக்கிறது. இந்திய மக்கள்தொகையில் வெறும் 1% பேர் கொண்ட ஒரு சிறுபான்மைக் கும்பல் நாட்டின் மொத்த செல்வத்தில் 77%-ஐ வைத்துள்ளனர். அதே சமயத்தில் மக்கள்தொகையில் பாதியாக உள்ள 67 கோடி ஏழை உழைப்பாளி இந்தியர்களின் செல்வத்தில் வெறும் 1% மட்டுமே அதிகரித்துள்ளது.

இந்தியாவில் 2000-ல் வெறும் 9 ஆக இருந்த பெரும் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை பாசிச மோடி கும்பல் ஆட்சிக்கு வந்தபிறகு 2017-ல் 101 ஆக அதிகரித்தது. 2018 மற்றும் 2022-க்கு இடையில் இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 70 புதிய கோடீஸ்வரர்கள் உருவாவார்கள் என்று மதிப்பிடப்பட்டது. இந்தக் கோடீஸ்வரர்களின் சொத்து

மதிப்பு கடந்த பத்தாண்டுகளில் கிட்டத்தட்ட 10 மடங்கு அதிகரித்துள்ளது. அவர்களின் மொத்த செல்வம் 2018-19 நிதியாண்டிற்கான இந்திய பட்ஜெட்டின் மதிப்பான 244.22 இலட்சம் கோடி ரூபாயை விட அதிகமாகும்.

### சுரண்டல், சமமற்ற வளர்ச்சி: முதலாளித்துவத்தின் அடித்தளம்!

''நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் அழிவிலிருந்து முளைத்தெழுந்துள்ள நவீன முதலாளித்துவ சமுதாயம் வர்க்கப் பகைமைகளை ஒழித்துவிடவில்லை. ஆனால், பழையவற்றுக்குப் பதிலாகப் புதிய வர்க்கங்களையும், புதிய ஒடுக்குமுறை நிலைமைகளையும், புதிய போராட்ட வடிவங்களையும் உருவாக்கி வைத்துள்ளது'' - என்றார் பேராசான் காரல் மார்க்ஸ்.

அடிமையுடைமை சமுதாய அமைப்பில் உருவான சுரண்டலும், ஏற்றத்தாழ்வுகளும், அதற்கு அடுத்துவந்த நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பிலும், நிலப்பிரபுத்துவதை வீழ்த்தி வந்த முதலாளித்துவ சமுதாய அமைப்பிலும் தொடர்கிறது. சமுதாயத்தின் மேல்மட்டத்தில் ஆளும் வர்க்கங்கள் மாறியபோது சுரண்டல் மற்றும் ஏற்றத்தாழ்வுகளின் தன்மை மட்டுமே மாறியது. ஆனால் சுரண்டலும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் அன்றிலிருந்து இன்றுவரை மாறவில்லை. மாறாக இந்த உழைப்புச் சுரண்டலும், ஏற்றத்தாழ்வுகளும் மதங்களின் துணையோடு ஒரு சமூக நியதியாக, சமூக ஒழுங்குமுறையாக மக்கள் மனதில் ஆழமாக ஏற்றப்பட்டுள்ளன. அதனால்தான் இவற்றைப்பற்றி விளக்கும் முதலாளித்துவக் கைக்கூலிகள் துணிச்சலுடன், ''முதலாளித்துவம் அளிக்கும் வாய்ப்புகளை திறமையுள்ளவன் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு பணக்காரனாகிறான், ஆனால் அத்தகைய வாய்ப்புகளை சரிவர பயன்படுத்திக்கொள்ளாத சோம்பேறிகள் ஏழைகளாகவே வாழ்கிறார்கள்'' என்கின்றனர்.

இக்கருத்தில் முதலாளித்துவம் ஏதோ அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை அளிப்பதாகவும், அதைச் சரிவர பயன்படுத்திக் கொள்ளாதவர்கள்தான் ஏழைகளாக உள்ளார்கள் என்றும், இத்தகைய ஏற்றத்தாழ்வுகளுக்கு அவர்களே காரணம் என்ற சாராம்சம் பொதிந்துள்ளது. ஆனால் உண்மையில் குறையும் வேலைவாய்ப்புகள், இருக்கும் தொழிலாளர்களை வைத்தே 12 மணிநேரத்துக்கும் மேல் வேலைவாங்குவது, தொழிலாளர்களை பணிநீக்கம் செய்வது என்று உற்பத்தியில் ஈடுபடாத விலங்குகள் அடித்துக்கொள்வதைப்போல உற்பத்தியில் ஈடுபடும் சகமனிதர்களிடையே போட்டியை உண்டாக்கி ''வலுத்தவன் பிழைத்துக்கொள்வான்'' என்ற நியதியைத்தான் முதலாளித்துவம் உருவாக்கிவைத்துள்ளது.

எல்லோருக்கும் சம வாய்ப்பை முதலாளித்துவம் வழங்குகிறது என்றால் 140 கோடி மக்கள் கொண்ட ஒரு நாட்டில் எப்படி வெறும் 1 சதவீதம் பேர் மட்டும் எல்லா வசதிகளையும் அனுபவிப்போர்களாக இருக்க முடியும்? பாசிச மோடி குஜராத்தின் முதலமைச்சர் ஆவதற்கு முன்னர் அதானி என்றொரு நபர் யாரென்றே நாட்டுமக்கள் தெரிந்திடாத நிலையில் இன்று உலகப் பணக்காரர்களில் ஒருவராக எப்படி உருவாகியிருக்கக்கூடும்? ஒரு சாதாரண மனிதன் அம்பானி, அதானிக்கு சமமாக சொத்து சேர்க்க வேண்டுமானால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தேவைப்படுகிறதே ஏன்? இன்னும் சொல்லப்போனால் கொரோனா காலத்தில் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான சிறு குறு முதலாளிகள் தொழில் முடக்கத்தால் அழிவின் விளிம்பில் இருந்த நிலைமையில் கூட ''ஆத்மநிர்பார் பாரத்'' என்ற திட்டத்தைக் கொண்டுவந்து இலட்சக்கணக்கான கோடிகளை தேசங்கடந்த, உள்நாட்டுத் தரகு முதலாளிகள் மட்டுமே சுருட்டிக்கொண்டனரே ஏன்?

உலகெங்கும் பெரும்பாலான நாடுகளின் ஆட்சியதிகாரத்தை, நிர்வாகத்தை தங்கள் கையில் வைத்துள்ள ஏகாதிபத்திய முதலாளித்துவம் மனிதர்களிடம்தான் இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குகிறது என்றால் நாடுகளிடையேயும் சுரண்டலையும், ஏற்றத்தாழ்வான வளர்ச்சியையும் உருவாக்கியுள்ளது. அதன் சமீபத்திய வெளிப்பாடுதான் அமெரிக்கா மற்ற நாடுகளின் மீது கூடுதல் வரிவிதித்ததும், தனது ஆயுதபலத்தைக் காட்டி மிரட்டி பணியவைப்பதும். அதேபோல பிற வளரும் நாடுகளையும், ஆப்பிரிக்க ஏழைநாடுகளையும் அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் சுரண்டிவருவதையும், இயற்கை வளங்களை வரைமுறையில்லாமல் கொள்ளையடிப்பதையும் கூறலாம்.

### மக்களுக்கு வரி பயங்கரவாதம், முதலாளிகளுக்கோ வரிச்சலுகை!

முதலாளித்துவ அரசுகள் மக்களைச் சுரண்டும் மற்றொரு வழி வரிகள். புதிய வரிகள் மூலமும், ஏற்கெனவே இருக்கும் வரிகளின் விகிதங்களை அதிகப்படுத்துவதன் மூலமும் மக்களை ஒட்டச் சுரண்டுகின்றன. ஆனால் அதேவேளையில் முதலாளிகளுக்கான வரிகளை குறைத்தும், இரத்து செய்தும், அவர்கள் நிலுவை வைத்திருக்கும் வரிகளைத் தள்ளுபடி செய்வதன் மூலமும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஊக்குவிக்கின்றன.

இந்தியாவில் ஆர்எஸ்எஸ்-பாஜக பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தபிறகு தங்களின் எஜமானர்களான அம்பானி, அதானி போன்ற தேசங்கடந்த தரகு முதலாளிகளின் இலாபம் குறையக்கூடாது என்ற நோக்கத்தில்தான் சர்வதேச அளவில் கச்சா எண்ணையின் விலை குறைந்துள்ளபோதும் மக்களுக்கு அதன் பயன் சென்றடையாத வகையில் எரிபொருட்களின் விலையை இன்றுவரையில் குறைக்காமல் இருப்பதுடன் சுங்கத் கட்டணத்தை அடிக்கடி உயர்த்துவதன் மூலமாகவும் மக்களிடம் நேரிடையாகக் கொள்ளையடிக்கின்றனர். மேலும் GST என்ற பெயரில் மாநிலங்களிடமிருந்து வரிகளைப் பறித்துக்கொண்டு மாநிலங்களுக்கான பங்குத்தொகையை, பேரிடர் நிவாரணங்களை வழங்க மறுத்து எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களைச் சுரண்டுகிறார்கள். பாசிஸ்டுகளின் இந்த அடாவடிப்போக்கால் ஏற்படும் வருமான இழப்புகளை இம்மாநிலங்களும் தமது அதிகாரத்துக்குட்பட்ட வரிகளை அதிகரித்து மக்களின் தலையில் சுமத்துகின்றன.

## அதிகரிக்கும் கடன் சுமையால் தவிக்கும் மக்கள்!

முதலாளிகளின் நலனுக்காக ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் மக்கள் மீது விதிக்கும் வரிகளினால் அதிகரிக்கும் விலைவாசி உயர்வு, அதிகரிக்கும் செலவினங்கள் காரணமாக மக்கள் வேறு வழியின்றி கடன் சுமைக்கு ஆளாகின்றனர். இந்திய ரிசர்வ் வங்கியின் புள்ளிவிவரப்படி 2018 மற்றும் 2024-க்கு இடையில் இந்தியாவில் கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்து 12.8 கோடியிலிருந்து 28.3 கோடியாக உயர்ந்துள்ளது என்றும், ஒரு இந்திய குடிமகனின் சராசரி கடன் ரூ. 3.41 லட்சத்திலிருந்து ரூ. 4.77 லட்சமாக அதிகரித்துள்ளது என்றும் கூறுகிறது. ஆனால், இதே காலகட்டத்தில் பெருமுதலாளிகளுக்கு சுமார் 16.3 இலட்சம் கோடிகள் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதன் மூலம் முதலாளிகளின் கடன்கள் மக்களின் தலையில் ஏற்றப்பட்டுள்ளன. முதலாளிகளுக்கு மட்டும் கடன் தள்ளுபடி செய்யப்படும் நிலையில் மக்களின் கல்விக் கடன்கள், விவசாயக் கடன்கள், குழு கடன்கள், கூட்டுறவு வங்கிக் கடன்கள், நகைக்கடன்கள் கறாராக வசூலிக்கப்படுகின்றன. மக்களின் தலையில் ஏற்றப்படும் இந்தக் கடன் சுமையால் மக்களின் வாங்கும் திறன் குறைந்து அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிறைவேற்ற வழியில்லாமல் தவிக்கும் நிலை ஏற்படுகிறது.

அதே சமயத்தில் மக்கள் நலத் திட்டங்களுக்கான, குறிப்பாக பொது சுகாதாரம், கல்வி, உதவித்தொகைகள், ஓய்வூதியங்கள், மானியங்கள், சேமிப்பின் மீதான வட்டி, சிறு குறு தொழில் நிறுவனுங்களுக்கான கடன்கள் போன்றவைகளுக்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் குறைக்கப்படுகின்றன. இந்த போக்கு உலகம் முழுவதிலும் நிலவிவருகிறது. மிகப்பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ள மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் தங்களுடைய நெருக்கடிகளை மூன்றாம் உலக நாடுகளின் மீது சுமத்தி வருகின்றன. அதே போல முதலாளிகளும் தங்கள் நெருக்கடிகளை மக்கள் தலையில் சுமத்தி வருகின்றனர். அதற்கு ஏற்பவே ஒவ்வொரு நாட்டிலும் ஜனநாயகத்தை முடிவுக்கு கொண்டுவந்து பாசிஸ்டுகளை ஆட்சி பொறுப்பில் வைத்துவருகின்றனர்.

அந்த வகையில்தான் இந்தியாவில் காவி பாசிச அமைப்புகளான ஆர்எஸ்எஸ்-பாஜக சங்கபரிவார் கும்பலை ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனர். பொருளாதார ரீதியில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை உணராத, பொருளாதாரம் பற்றிய எந்தப் புரிதலும் இல்லாத, அதைப்பற்றி எந்தவித அக்கறையற்ற இக்கும்பல் மக்களும் தங்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இச்சிக்கல்களை தெரிந்துகொள்ளக்கூடாது, புரிந்துகொள்ளக்கூடாது என்ற நோக்கத்தில்தான் நாட்டில் மதரீதியான பிரச்சினைகளைக் கிளப்புவதும், வானுயர சிலைகளையும், கோவில்களையும் கட்டிக்கொண்டு மக்களை பக்தியில், மதவெறியில், தேசபக்த வெறியில் மூழ்கடித்து வருகின்றனர்.

## உழைப்புச் சுரண்டல், வர்க்க ஏற்றத்தாழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது கம்யூனிசம் மட்டுமே!

முதலாளித்துவ உற்பத்திமுறையை பற்றி ஆராய்ந்த பேராசான் மார்க்ஸ், ‘‘முதலாளித்துவம் சகல துறைகளிலும் வளர்ச்சியைக் கொண்டுவரும் அதே வேளையில் பெருவாரியான உழைக்கும் மக்களைத் தீராத் துன்பத்திற்கு ஆளாக்கும் என்றும், சகலவிதமான சமுதாயக் குற்றங்களைத் தோற்றுவிக்கும் என்றும், ஏற்றத்தாழ்வான சமுதாயத்தை உருவாக்கும்’’ என்று தனது ‘‘மூலதனம்’’ நூலில் எழுதினார். முதலாளித்துவ சமுதாயத்தின் உண்மையான பிரச்னை பொருட்களின் உற்பத்தியானது அல்லது விநியோகமானது தொழிலாளர்களின் உழைப்பைப் பயன்படுத்தி, அதாவது சமூக அளவில் நடைபெறுவதும், ஆனால் அந்த உற்பத்தியின் பலன் தமது உழைப்புச் சக்தியை செலுத்தும் தொழிலாளர்களுக்கு, அதாவது சமூக அளவில் பகிர்ந்து கொள்ளப்படாமல் முதலாளிகளுக்கு மட்டுமே இலாபமாக சென்று சேர்வதுமே ஆகும் என்று விளக்கினார்.

முதலாளித்துவம் மனிதகுலத்துக்கு ஏற்படுத்தியுள்ள இத்தகைய கேடுகளிலிருந்து மீள்வதற்கு மட்டுமல்ல இந்த நெருக்கடியே மீண்டும் தலையெடுக்காத வகையிலான தீர்வையும் அறிவியல்பூர்வமாக விளக்கியுள்ளார் மார்க்ஸ். இலாபத்துக்காக நடைபெறும் இந்த முதலாளித்துவ உற்பத்திமுறை ஒழிக்கப்பட்டு மக்களின் தேவைக்காக உற்பத்தி திருப்பிவிடப்படவேண்டும். உற்பத்தி சாதனங்கள் தனியார் வசம் இருப்பது முடிவிற்கு கொண்டுவரப்பட்டு சமூக மயமாக்கப்பட வேண்டும்.

சமூக உற்பத்தியின் பலன் ஒருசில முதலாளிகளின் சொத்துக்களாக மாறுவது நிறுத்தப்பட்டு உழைப்பவர் அனைவருக்கும் அவரவரது தேவைக்கு ஏற்ற விதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சமூக அமைப்புதான் கம்யூனிசம் என்பதையும் பரிந்துரைக்கிறார். அச்சமுதாய அமைப்பில் இலாபத்துக்காக அல்ல மக்களின் தேவைக்காகவே பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். மக்களின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் புதுப்புதுத் தொழில்கள் பெருகுவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாவதற்கும், அதன்மூலம் மக்களின் வாங்கும் சக்தி பெருக்கத்திற்கும் வழிவகுக்கும். வேலையின்மைக்கோ, பணவீக்கத்திற்கோ அதன் விளைவான விலைவாசி உயர்வுக்கோ அச்சமூகத்தில் வாய்ப்பேதுமில்லை.

எனவே, முதலாளித்துவத்தின் அடித்தளங்களான சுரண்டலையும், வர்க்க ஏற்றத்தாழ்வையும் எதிர்த்து முறியடிப்பதற்கு ஒரே தீர்வான கம்யூனிச சித்தாந்தத்தின் கீழ் உலக உழைப்பாளி மக்களை ஒன்றுபடுத்துவதற்கு போராடுவோம்! இதனை சாதிக்கும் வகையில் இந்தியாவில் புதிய ஜனநாயகப் புரட்சிக்காக போராடி முன்னேறிச் செல்கையில் இடைமறித்து உருவாகியுள்ள கார்ப்பரேட்-காவி பாசிச பயங்கரவாதிகளை ஆட்சியதிகாரத்திலிருந்து விரட்டியடித்து ஜனநாயக கூட்டரசை அமைப்போம்! அம்பானி, அதானி உள்ளிட்ட தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்து ஏற்றத்தாழ்வை சரி செய்வோம்! ஜனநாயகக் கூட்டரசின் துணையே, புதிய ஜனநாயகம் வழியே, சோசலிச - கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவோம்.

● மதியழகன்

# சில்லறை வர்த்தகத்தை விழுங்கி பகாசுர உணவு கார்ப்பரேட்டாக உருவெடுத்துள்ள ரிலையன்சு!

தமிழ்நாட்டின் பாரம்பரியமான வேளாண் உணவுப் பொருட்களை விற்பனை செய்து வரும் உதயம் அக்ரோ ஃபுட்ஸ் நிறுவனத்தை வாங்குவதற்கு டாடா கன்ஸ்யூமர் புரொடக்ட்ஸ் (Tata Consumer Products), ஐடி ஃப்ரெஷ் ஃபுட் (ID Fresh Food), மற்றும் எம்.டி.ஆர் (MTR) போன்ற நிறுவனங்கள் இடையே கடும் போட்டி நிலவிய போதும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் நுகர்வோர் பொருட்கள் விற்பனை நிறுவனமான ரிலையன்ஸ் கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் லிமிடெட் (RCPL) கடந்த டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி 76% பங்குகளை கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் வாங்கி உதயம் அக்ரோ ஃபுட்ஸ் நிறுவனத்தை தன் வசமாக்கிக்கொண்டது.

உதயம் நிறுவனத்தின் பழைய உரிமையாளர்கள் ஒரு சிறிய பங்கைத் தக்க வைத்துக் கொண்டு ரிலையன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ஆதரவு அளிப்பார்கள் என ரிலையன்ஸ் குழுமம் தெரிவித்து உள்ளது.

### உதயம் நிறுவனத்திற்கு அஸ்தமனம்! ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு உதயம்!

தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பருப்பு வகைகள், அரிசி, மசாலாப் பொருட்கள், திண்பண்டங்கள், இட்லி மாவு உள்ளிட்ட ரெடி-டு-குக் காலை உணவுப் பொருட்கள் வரை தயாரித்து விற்பனை செய்து வரும் உதயம் அக்ரோ ஃபுட்ஸ் ஆண்டுக்கு ரூ.668 கோடி வர்த்தக வருவாய் கொண்டதாகும். தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா என வலுவான விநியோக சந்தை வலையமைப்பை கொண்ட உதயம் அக்ரோ புட்ஸ் நிறுவனம் மக்கள் மத்தியில் பிரபலமாக அறியப்பட்ட பிராண்டாகவும் இருந்து வந்தது.

இந்த பிராண்டு மற்றும் விநியோக சந்தை வலையமைப்பை பயன்படுத்த உதயம் பெயரை மாற்றாமல் ரிலையன்ஸ் ரீடைல் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. அதாவது, சிறு நிறுவனங்களை அடித்து அழிப்பது, அணைத்து அழிப்பது என்ற இரு வழிமுறைகளில் பல சிறு- குறு நிறுவனங்களை விழுங்கி தனது சாம்ராஜ்ஜியத்தை கட்டியமைத்து இருக்கும் ரிலையன்ஸ் குழுமம் இந்த முறை கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் உதயம் நிறுவனத்தை அணைத்து அஸ்தமனம் செய்து விட்டது. இனி ரிலையன்ஸ் நிறுவனத்தின் மூலம் உதயம் பொருட்கள் விற்பனை செய்யப்படும்.




உதயம் பொருட்களை ஒரு தேசிய பிராண்டாக வளர்ந்து இந்தியா முழுவதும் உள்ள நுகர்வோரை திருப்திப்படுத்தும் என பெருமை பீற்றிக் கொண்டது ரிலையன்ஸ் குழுமம். உண்மையில் தென்னிந்தியாவின் உணவுப் பொருட்கள் சந்தையில் ரிலையன்ஸ் தனது பிடியை வலுப்படுத்திக் கொள்ள உதயத்தை கைப்பற்றி உள்ளது என்றால் மிகையல்ல.

உதயம் நிறுவனத்தை கைப்பற்றியதன் மூலமாக "மலிவு விலையில் உலகத் தரம்" என்ற ரிலையன்ஸ் ரீடைல் இலக்கை அடைய உதவும் என்கிறது ரிலையன்ஸ் குழுமம். ஆனால், ஒவ்வொரு மாநில/பிராந்திய மக்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்திய பாரம்பரிய உணவு முறைகளை வீழ்த்த ரிலையன்ஸ் ஏந்தியிருக்கும் ஆயுதமே மலிவு விலையில் உலகத் தரம் என்பது. பாரம்பரியமாக பயன்படுத்திய உணவு பொருட்களுக்கு மாற்றாக மலிவு விலை என்ற பெயரில் வேறு ஒரு பொருளை திணிக்கிறது. அதாவது மலிவு விலை எனும் ஆயுதத்தின் மூலம் ஒவ்வொரு மாநில மக்களின் உணவு, உடை, பழக்க வழக்கங்கள் என அனைத்தையும் மாற்றுகிறது.

### ரிலையன்ஸ் ரீடைல் வளர்ச்சி! சிறு- குறு நிறுவனங்களின் வீழ்ச்சி!

இந்தியாவின் சில்லறை வர்த்தகச் சந்தை உலகளவில் நான்காவது பெரிய சந்தையாக உள்ளது மேலும் அதன் அளவு மற்றும் வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வருகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12% பங்களிப்புடன் மொத்த தொழிலாளர்களில் 8% பங்களிப்புடன் கொண்டுள்ள சில்லறை வர்த்தகத் தொழில் இந்தியப் பொருளாதாரத்தின் தூண்களில் ஒன்றாக

விளங்குகிறது. நகரமயமாக்கல், ஸ்மார்ட் போன் மற்றும் இணையவழி பயன்பாடு அதிகரிப்பு, ஏகாதிபத்தியம் உருவாக்கும் நுகர்வு வெறி ஆகியவற்றின் காரணமாக இந்திய சில்லறை வணிக சந்தை ஆண்டுதோறும் 8% வளர்ச்சியடைந்து வருகிறது. இதன் விளைவாக, 2030 ஆம் ஆண்டுக்குள், இந்தியா உலகின் மூன்றாவது பெரிய சில்லறை சந்தையாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வளவு பெரிய இந்தியாவின் சில்லறை சந்தையை கைப்பற்ற கார்ப்பரேட் நிறுவனங்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இதற்காக புதிதாக நிறுவனத்தைத் தொடங்குவதற்குப் பதிலாக, ஏற்கெனவே பிரபலமாக உள்ள சிறு- குறு நிறுவனங்களை கைப்பற்ற தங்களுக்குள் போட்டி போட்டு கொள்கின்றன. குறிப்பாக, குறைந்த விலை, நேரடி விநியோகம், துரித இணைய வணிகம் போன்ற அம்சங்களுடன் செயல்படும் பிராந்திய மற்றும் முன்னணி பிராண்டுகள் கொண்ட பாரம்பரியமாக இயங்கி வரும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை கையகப்படுத்தி வருகின்றன. இதில் ரிலையன்ஸ் குழுமம் முதலிடத்தில் உள்ளது.

கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு பிறகு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளை பயன்படுத்தி கடந்த 05 ஆண்டுகளில் 10-க்கும் மேற்பட்ட பராம்பரிய சில்லறை வணிக நிறுவனங்களை கைப்பற்றி உள்ளது ரிலையன்ஸ் குழுமம். மக்கள் இணையத்தில் தனக்கு தேவையான பொருட்கள் வாங்க நிறுவனங்களின் விவரங்களை தெரிவிக்கும் ஜஸ்ட் டயல் நிறுவனத்தில் தொடங்கி வீட்டு உபயோக பொருட்களை சில்லறை விற்பனை செய்த ஸ்ரீ கண்ணன் பல்பொருள் அங்காடி; மருந்துகள், தனிப்பட்ட மற்றும் குழந்தை பராமரிப்பு பொருட்களை விற்பனை செய்த ஆன்லைன் நெட்மெட்ஸ் நிறுவனம்; பர்னிச்சர் மற்றும் வீட்டு அலங்கார சில்லறை விற்பனை நிறுவனமான அர்பன் லேடர்; டிஜிட்டல் உள்ளாடை விற்பனை நிறுவனமான ஷிவாமே; ஆன்லைன் மளிகை விற்பனை நிறுவனமான மில்க் பாஸ்கெட்; சில்லறை துணி விற்பனை நிறுவனமான மனிஷ் மல்ஹோத்ரா நிறுவனம் மற்றும் துணிகளை ஃபேஷன் டிசைன் செய்யும் ரிது குமார் டிசைன் ஹவுஸ் நிறுவனம்; உள்ளாடைகளை சில்லறை விற்பனை செய்யும் நிறுவனமான க்ளோவியா; காலணி மற்றும் ஆடை சில்லறை விற்பனை நிறுவனமான V-ரீடெய்ல்; மின்னணு மற்றும் மளிகை சில்லறை விற்பனை நிறுவனமான பிஸ்மி; மின்சாதனப் பொருட்களுக்கான புகழ்பெற்ற பிராண்டான கெல்வினேட்டர் வரை என 05 ஆண்டுகளில் ரிலையன்ஸ் குழுமம் கைப்பற்றிய சிறு குறு நிறுவனங்களின் பட்டியல் நீள்கிறது. ஒவ்வொரு நிறுவனமும் ஏறக்குறைய 25 முதல் 30 கடைகளை நடத்தி வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமின்றி, இந்தியாவில் இயங்கி வந்த வெளிநாட்டு நிறுவனங்களையும் கைப்பற்றி உள்ளது. லண்டனில் பொம்மை தயாரிக்கும் பாரம்பரிய நிறுவனமான ஹம்லிஸ் மற்றும் இலங்கையின் பாரம்பரியமாக சில்லறை விற்பனை செய்து வந்த அம்டே உள்ளாடை நிறுவனத்தையும், ஜெர்மனியை தலைமையிடமாகக் கொண்டு இந்தியாவில் செயல்பட்டு வந்த மொத்த விலை விற்பனை கடைகளான மெட்ரோ கேஷ் அண்ட் கேரி வர்த்தகத்தை மொத்தமாக கைப்பற்றி, ரீடைல் துறையில் மட்டுமே இயங்கி வந்த ரிலையன்ஸ் ரீடைல் மொத்த விலை விற்பனையில் இறங்கி இந்தியாவில் இருக்கும் அனைத்து ரீடைல் கடைகளுக்கும் தேவையான பொருட்களை சப்ளை செய்யும் விநியோக சங்கிலியை தனதாக்கிக் கொண்டது.

மேற்கண்ட நிறுவனங்களை கைப்பற்றியதன் மூலம் 7,000-க்கும் மேற்பட்ட நகரங்களில் 19,340 கடைகளுடன் 2,45,000 தொழிலாளர்களையும் 85 சர்வதேச பிராண்டுகளுடன் இந்தியாவின் சில்லறை வணிகத்தில் முதலிடத்திலும், உலகளாவிய சில்லறை விற்பனையாளர்களில் 53-வது இடத்தையும் பிடித்துள்ளது. உலக அளவில் முதல் 100 இடங்களில் இடம்பெறும் ஒரே இந்திய சில்லறை விற்பனையாளராகவும் உள்ளது.

இதற்காக, தன்னுடன் போட்டி போட்ட உள்நாட்டு தரகு முதலாளிகளை முடக்கி பின்னுக்கு தள்ளியும், பல சிறு - குறு நிறுவனங்களை விழுங்கியும் பல சில்லறை வணிகம் செய்த குடும்பங்களின் மீது ஏறிச் சென்றே இந்த உயரத்தை தொட்டுள்ளது ரிலையன்ஸ் ரீடைல் நிறுவனம்.

### முதலிடத்திற்கான போட்டி! சில்லறை வர்த்தகத்தில் மேலாதிக்கத்திற்கான போட்டி!

சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட்டதன் மூலம் ரிலையன்ஸ் குழுமத்தின் லாபம் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது என்பதால் இந்த துறையில் அதிக கவனம் செலுத்துகிறது ரிலையன்ஸ் குழுமம். அதாவது, ரிலையன்ஸ் பல துறைகளில் ஈடுபட்டு கொள்ளையடிக்கும் மொத்த லாபத்தில் ரிலையன்ஸ் ரீடைல் பங்களிப்பு 2016-17 நிதியாண்டில் வெறும் 4 சதவீதமாக இருந்தது. 2024- 2025 நிதியாண்டில் ஜியோ மற்றும் ரிலையன்ஸ் ரீடெய்ல் பங்களிப்பு 54 சதவீதமாக உயர்ந்து உள்ளது. இதிலிருந்து ரிலையன்ஸ் ரீடைல் நிறுவனத்தின் வளர்ச்சியை புரிந்து கொள்ளலாம். அதிலும்,2024 ஆம் நிதியாண்டின் இறுதியில் ரிலையன்ஸ் ரீடெய்ல் ₹.11,111 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது, இது 2023 ஆண்டை விட 21% அதிகம். 2025 ஆம் ஆண்டில் அதன் நிகர லாபம் ₹.29,082 கோடியாக அதிகரித்துள்ளது. தனக்கு லாபத்தை அள்ளித் தரும் சில்லறை வணிகத்தில் முதலிடத்தை தக்க வைத்து அதில் மேலாதிக்கம் செய்வதற்கு வெறியுடன் கார்ப்பரேட் மற்றும் உள்நாட்டு தரகு முதலாளிகளுடன் போட்டி போடுகிறது ரிலையன்ஸ் குழுமம்.

சில்லறை வணிகம் என்பது மொத்தமாக கொள்முதல் செய்யும் சந்தைகள் அதிலிருந்து சில்லறை விற்பனை என்பது மட்டுமல்ல, இதன் மறுபக்கத்தில் விவசாய உற்பத்தி, நெசவு, தொழிற்சாலை உற்பத்தி போன்ற உற்பத்தி துறையுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

ரிலையன்ஸ் மட்டுமின்றி சில்லறை வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் விவசாயிகளிடம் நேரடியாக பொருட்களை கொள்முதல் செய்தும், தனது மறைமுக தரகர்கள் மூலமும் கொள்முதல் செய்து சில்லறை கடைகளில் விற்பனை செய்கின்றன. சில்லறை

வணிகத்தில் முதலிடத்தை கைப்பற்றிக் கொண்டால் தேவை அடிப்படையில் அந்த நிறுவனம் கொள்முதல் சந்தையிலும் மேலாதிக்கத்தை செலுத்தும். இதன் மூலம் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விலையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை அந்த நிறுவனமே எடுத்துக்கொள்கிறது விவசாயிகளுக்கு ஆதார விலை கூட தீர்மானிக்க முடியாது என்பதே எதார்த்தமாக உள்ளது. விவசாயிகளின் விளை பொருளுக்கு ஆதார விலையை மோடி தர மறுப்பதற்கு முக்கியமான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

மறுபுறம், நாம் என்ன வகையான பொருள் வாங்க வேண்டும் என்பதையும் அந்த பொருளுக்கான விலையையும் அவர்களே தீர்மானிக்கிறார்கள். சமீபகாலமாக உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து வருவதை ஒப்பிட்டுப் பார்த்தாலே சில்லறை வணிகத்தில் ரிலையன்ஸ் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள் வளர்ச்சி எதனை நோக்கி செல்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

### அமைப்பு சாரா கடைகளின் வெளியேற்றமும்! கார்ப்பரேட் நிறுவனங்களின் வளர்ச்சியும்!

2017 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த சில்லறை விற்பனை சந்தையில் உள்ளூர் சிறிய கடைகள், தெருவோர வியாபாரிகள் மற்றும் குடும்பத் தொழில் கடைகள் எனும் அமைப்பு சாரா கடைகளின் (Unorganized Retail) பங்களிப்பு 90% இருந்தது. கடந்த 08 ஆண்டுகளில் 13% குறைந்து 77% என மாறியுள்ளது. அதே நேரத்தில், இந்தியாவில் இருக்கின்ற சுமார் 269 மாநகராட்சிகளை அழகாக்குவதற்கு தெருவோர கடைகளை அகற்றி வாழ்வாதாரத்தை, அழித்திட மோடி அரசு 2014-ல் கொண்டு வந்த ‘‘வெண்டிங் கமிட்டி’’ முறையானது மேலும் உதவுகிறது. இது முதலில் மும்பையில் அமலாக்கப்பட்டு தெருவோர/ தரைக்கடைகள் அகற்றப்பட்டன. பிறகு பாஜக ஆளுகின்ற பல்வேறு மாநிலங்களின் மாநகராட்சிகளில் வெண்டிங் கமிட்டி முறை அமல்படுத்தப்பட்டு தெருவோர/ தரைக்கடைகள் ஒழிக்கப்பட்டதன் விளைவு தான் ரிலையன்ஸ் ரீடைல் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களின் பங்களிப்பு 10% இருந்து 23% உயர்ந்துள்ளதுடன் ஆண்டுதோறும் 35% என்ற விகிதத்தில் வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சி என்பது பாரம்பரிய சில்லறை விற்பனை செய்து வரும் உள்ளூர் சிறிய கடைகள், தெருவோர வியாபாரிகளின் அழிவை நோக்கி நகர்கிறது என்பதே உண்மையாகும்.

அதுமட்டுமின்றி,எப்.எம்.சி.ஜி (FMCG - Fast Moving Consumer Goods) எனப்படும் நுகர் பொருட்களின் வர்த்தகமே இந்திய சில்லறை வணிகத்துறையில் பெரும் பங்கு வகிக்கிறது. நடுத்தர மற்றும் மேட்டுக்குடி வர்க்கத்தினரின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமும், அவர்கள் பொருட்களை நுகர்வதில் ஏற்பட்டுள்ள மாற்றமும் இச்சந்தையின் வளர்ச்சியை பாரிய அளவில் தூண்டியுள்ளது. குறிப்பாக இணையப் பரவலும், திறன்பேசிகளின் (Smartphones) பயன்பாடும் அதிகரித்துள்ள நிலையில் ஆடம்பர நுகர் பொருட்கள் உள்ளிட்டு அனைத்து அத்தியாவசிய நுகர்பொருட்கள் வரை இணையம் மூலமே (இ-வணிகம்) வாங்கும் பழக்கமும் அதிகரித்துள்ளது. இதில் உள்ளூர் சிறிய கடைகள், தெருவோர வியாபாரிகள் ஈடுபட முடியாததால் தொழிலை விட்டு வெளியேறும் நிலைக்கும் செல்கின்றனர்.

செருப்பு முதல் உள்ளாடை வரை அனைத்து பொருட்களையும் இணையதளத்தில் தரப்படும் தள்ளுபடி விலைகளை பார்த்து காலங்காலமாக பயன்படுத்திய பிராண்டுக்கு பதிலாக மாற்று பிராண்டை வாங்குகின்றனர் தள்ளுபடி, இலவச இணைப்பு என்ற பெயரில் நிறுவனம் நிர்ணயிக்கும் விலையை கொடுத்து பொருட்களை வாங்குகின்றனர். இதனால் உள்ளூர் சிறிய கடைகள் மற்றும் தெருவோர வியாபாரிகளின் விற்பனை குறைந்து வருகிறது.

ரிலையன்ஸ் ரீடைல் போன்ற நிறுவனங்கள் நாளுக்கு நாள் இலாபம் என்ற பெயரில் கொள்ளையடித்து வருகின்றனர். உணவு, ஆடை, மளிகை உள்ளிட்ட சாதாரண கடைகளை நடத்தும் ஏழை மக்கள், குடும்பம் குடும்பமாக உழைப்பில் ஈடுபட்டாலும் சொந்த வீடு என்பது பெரும் கனவாகி தினம் தினம் வாழ்க்கை நடத்தவே படாதபாடுபடுகின்றனர். மூன்று வேளை உணவு என்பதை மட்டும் உறுதிப்படுத்திக் கொண்டாலும் பெரும்பான்மையினர் வாடகை வீட்டிலும் வறட்டு கௌரவத்திற்காக கடன் வாங்கியும் தங்களது தொழிலை, வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர் என்பதே எதார்த்தமாக உள்ளது.

### கார்ப்பரேட் காவி பாசிசத்தை வீழ்த்துவோம்! ஜனநாயக கூட்டரசை நிறுவுவோம்!

சில்லறை வணிகம், சிறு தொழில்கள், விவசாயம், நெசவு முதலான எல்லா துறைகளும், நாட்டின் இயற்கை வளங்களும் அம்பானி- அதானி போன்ற தேசம் கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் பன்னாட்டு ஏக போக நிறுவனங்களின் கோரப்பிடிக்குள் சென்று கொண்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் இந்தியாவில் அமல்படுத்தப்படும் மறுகாலனியாக்க பொருளாதார கொள்கைகளே.

மறுகாலனியாக்க பொருளாதாரக் கொள்கைக்கு பின்னால் இந்தியாவின் தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகள் அனைவரும் இருக்கிறார்கள்; பன்னாட்டு நிறுவனங்கள் இருக்கின்றன; உலக வங்கியும் உலக வர்த்தக கழகமும் இருக்கிறது; அரசு எந்திரமும் போலீசும், கோர்ட்டும் ஒன்றிய பாஜக அரசும் இருக்கிறது இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கார்ப்பரேட்- காவி பாசிசமாக நிற்கின்றனர்.

இந்த மிகப்பெரிய எதிரியை எதிர் கொள்ள வேண்டுமெனில், கார்ப்பரேட் காவி பாசிசத்தால் பாதிக்கப்படும் அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும். இதனூடாகவே கார்ப்பரேட்டுகளின் நலன் சார்ந்த மறுகாலனியாக்க பொருளாதாரக் கொள்கைக்கு மாற்றாக சுய சார்பு பொருளாதாரக் கொள்கை ஒன்றை முன் வைக்க வேண்டும். அத்தகைய திட்டத்துடன் ஜனநாயக சக்திகளை பரந்துபட்ட ஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் முன்னணியின் கீழ் ஒன்றிணைத்து புரட்சிகர எழுச்சி மூலம் கார்ப்பரேட்-காவி பாசிசத்தை தூக்கி எறிவதே தீர்வு.

● லூர்துசாமி

# கேள்வி பதில்

***கேள்வி:* நாட்டின் பிரதான எதிரியாக மாறியுள்ள பாசிச பாஜகவை வீழ்த்துவதற்கு ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவுடன் ஐக்கிய முன்னணி என்கிறீர்கள்? இதனால் இந்திரா காந்தி முதல் இந்து தேசியவாதி பாரதியார் வரை தங்கள் அமைப்பு முன்னர் வைத்த நிலைப்பாடுகள் மாறிவிட்டதா?**

***துரைராஜ்,** தஞ்சாவூர்.*

**பதில்:** இந்தியாவில் புதிய ஜனநாயகப் புரட்சி ஒன்றே தீர்வு என்று செயல்பட்டு வருகின்ற மார்க்சிய லெனினிய இயக்கமான எமது அமைப்பு போர்த்தந்திர ரீதியாக இந்த நாட்டில் எதிரிகள் என்று தீர்மானித்தவர்களுடன் ஒருபோதும் சமரசமாகவோ, ஐக்கியமாகவோ செல்ல மாட்டோம். போர்த்தந்திர ரீதியாக அமைக்கப்படுகின்ற ஐக்கிய முன்னணி என்பது வேறு; அதே சமயத்தில் ஒரு குறிப்பிட்ட தருணத்தில் நாட்டையும், மக்களையும் பாதிக்கின்ற மையமான அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளை அவதானித்து செயல்தந்திரம் வகுத்து செயல்படும்போது அமைக்கபடுகின்ற ஐக்கிய முன்னணி என்பது வேறு., இந்த வகையில் நாட்டின் பிரதான அபாயமாக மாறியுள்ள கார்ப்பரேட் காவி பாசிசத்துக்கு எதிராக ஏற்படுத்த இருக்கும் ஐக்கிய முன்னணியைப் போட்டு குழப்பிக் கொள்ளக் கூடாது என்றே கருதுகிறோம்.

“ஆளும் வர்க்கக் கட்சிகள் தவிர மற்றெல்லாக் கட்சிகளையும் சமரசக் கட்சிகளாகவே கருதி புரட்சியின் பிரதான தாக்குதல் திசைவழியில் அரசியல் ஆயுதப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் போது மட்டுமே, அதன் வளர்ச்சிப் போக்கிலேயும் மேலும் அடிப்படை முரண்பாடுகள் கூர்மையடைவதிலேயும் தான் இந்த அரசியல் கட்சிகள் உண்மைச் சொரூபத்தில் வெளிப்படுவதும் ஒரு முனைப்படுவதும் நடந்தேறும். அதுவரை ஆளும் வர்க்கக் கட்சிகள் தவிர, பிறகட்சிகளுடன் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப குறிப்பிட்ட தருணத்தில் வகுக்கப்படும் செயல்தந்திரத்தின் அரசியல் நடத்தை வழியை செயல்படுத்துவதற்கான கூட்டுநடவடிக்கைகளே இருக்கும். கூட்டு நடவடிக்கைகளை செயல்படுத்துவதன் மூலமாகத் தான் பிரதானதாக்குதல் திசைவழி இருக்கும். கூட்டு நடவடிக்கைகளுக்காக அமைக்கும் போராட்ட அமைப்புகளை புதிய ஜனநாயக ஐக்கிய முன்னணியுடன் போட்டு குழப்பிக் கொள்ளக்கூடாது. கூட்டு நடவடிக்கைகளிலும் அதற்கான ஸ்தாபனங்களிலும் ஒற்றுமையும் போராட்டமும், சுதந்திரமும் முன் முயற்சியும் என்ற கொள்கையை பாட்டாளி வர்க்கக்கட்சி வழுவாது பற்றி நிற்கவேண்டும். இவ்வாறு செயல்படுவதன் மூலமாகத் தான் பிரதான தாக்குதல் திசைவழி பிறழாது, எதிரிக்கு எதிரான பிரதான தாக்குதல் அதிக பட்சம் பலனளிக்கக் கூடியதாக இருக்கும்” என்று வழிகாட்டுகிறது இந்தியப் புரட்சியின் அரசியல் பாதை, இராணுவப் பாதைப் பற்றிய மா.லெ அமைப்பின் ஆவணம்.

இந்த அடிப்படையில்தான் 2014 க்கு முன்பு இந்தியாவை ஆண்டு வந்த தரகு முதலாளிகளின் கட்சியான காங்கிரசு மற்றும் பிராந்திய கட்சிகளான திமுக போன்றவற்றை தற்போதைய காலகட்டத்தில் பாசிச எதிர்ப்பு ஐக்கிய முன்னணி என்ற முறையில் ஊசலாடுகின்ற சமரசப் பிரிவுகளாக அவதானித்து அணுகுகிறோம்.

2008 உலகப் பொருளாதார நெருக்கடிக்கு பிறகு காங்கிரஸ் கட்சி இந்தியாவை ஆளத் தகுதி இல்லாத கட்சியாக மாறிவிட்டது என்று ஏகாதிபத்திய நிதி மூலதனத்தைக் கொண்டு நாட்டை மறு காலனியாக்கி வருகின்ற அமெரிக்க மேல்நிலை வல்லரசு உள்ளிட்ட ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகள் முடிவு செய்துவிட்டது.

1994 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட காட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவை தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்கைகளை அமுல்படுத்துகின்ற மறு காலனியாக்கக் கொள்கையை குறிப்பிட்ட பத்தாண்டுகளில் அமுலாக்க வேண்டும் என்ற உத்தரவை காங்கிரஸ் கட்சி முழுமையாக நிறைவேற்றவில்லை என்ற காரணத்திற்காகவே அதனை தூக்கியெறிந்து முழுமையாக மறுகாலனியாக்கத்தை தீவிரப்படுத்தி மறுகாலனியாக்குகின்ற திசையில் வேகமாக கொண்டு செல்கின்ற வகையில் பாசிச பாஜகவை ஆட்சி கட்டிலுக்கு கொண்டு வந்தனர்.

இந்த காலகட்டத்தில் இருந்து காங்கிரஸ் தனது கட்சிக்குள்ளேயே பல்வேறு பிளவுகளை சந்தித்தது. பல்வேறு மாநிலங்களில் இரண்டாக, மூன்றாக சிதறுண்டது. தேசிய அளவில் ஒரே கட்சி என்ற பெயர் இருந்தாலும் பல்வேறு மாநிலங்களில் பிளவை சந்தித்து மிகவும் பலவீனமானது. இந்த காலகட்டத்தில் தரகு முதலாளிகள் காங்கிரஸ் கட்சியை கை கழுவி விட்டு புதிதாக ஆட்சி கட்டிலில் ஏறிய பாசிச பாஜகவை ஆதரிப்பது என்ற நிலைபாட்டை எடுத்தனர்.

இன்றளவும் காங்கிரஸ் கட்சி ஆளும் வர்க்கங்களின் ஒரு பிரிவினரால் ஆதரிக்கப்படும் கட்சியாகவே உள்ளது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. அதுபோலவே இந்திராகாந்தி ஆண்டபோதும் சரி! எமர்ஜென்சி பாசிசத்தை கொண்டு வந்து இந்தியாவில் நெருக்கடி நிலையை அறிவித்த போதும் சரி! பாசிச இந்திராவாகவே செயல்பட்டு வந்தார் என்பதில் எந்த விதமான மாற்றமும் இல்லை.

“அறுபதுகளின் மத்தியிலிருந்து நமது நாட்டு பொருளாதாரத்தில் பெரிய நெருக்கடிகள் தோன்ற ஆரம்பித்தன. குறிப்பாக பணவீக்கம்,

பொருளாதார பின்னடைவு, உற்பத்தி தேக்கம் விலைவாசி ஏற்றம், மக்களிடம் வாங்கும் சக்தி இல்லாமல் இதன் விளைவாக வேலையில்லா திண்டாட்டம் பெருகியது, விவசாயத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி போன்றவை காரணமாக மக்களிடையே பஞ்சம், பசி பட்டினி தலைவிரித்தாடியது. பின் தங்கிய விவசாயப் பொருளாதாரம் நிலப்பிரபுத்துவத்தின் கையில் சிக்குண்டு கிடந்தது, பசுமைப் புரட்சி திட்டத்தின் மூலம் ஏழை, நடுத்தர விவசாயிகள் ஓட்டாண்டியாகினர். கிராமப்புற வேலையற்றோர் தொகை பெருகியது. ஒரு சிலர் கைகளில் நிலங்கள் குவிந்ததால் கிராமப்புறங்களில் பயங்கர நெருக்கடிகளை தோற்றுவித்தது.

1947 முதலான காங்கிரசின் ஆட்சிக் காலத்தில் இந்தியப் பொருளாதாரம் பல்வேறு ஏகாதிபத்தியங்களுக்கு அடகு வைக்கப்பட்டிருந்ததாலும், 1970-களில் ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளில் தோன்றிய உலக தழுவிய பொதுப்படையான பொருளாதார நெருக்கடியை அந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகளின் மீது சுமத்தியது எமர்ஜென்சிக்கு முதன்மையான காரணம். மேலும் இந்திய ஆளும் வர்க்கங்கள் கடைபிடித்த வங்கதேச போர் மற்றும் சார்க் நாடுகளை பிடிக்கும் விஸ்தரிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியில் இறங்கி அதற்கு தேவையான ராணுவ தயாரிப்பில் இறங்கியதாலும், பணமூலதனம் மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடிகள் ஏற்பட்டதாலும் உருவான பொருளாதார நெருக்கடிகளும் எமர்ஜென்சிக்கான பிற காரணங்களாகும்.

இந்த சூழலில் ஆளும் வர்க்கங்களான நிலப்பிரபுத்துவ, தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ கும்பல் தன்னை அழிவிலிருந்து காத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கியது. தான் மட்டும் தப்பித்துக் கொள்ளும் முயற்சியில் மேற்கொண்ட ஒன்றிரண்டு பொருளாதார நடவடிக்கைக்கள் சிக்கலை தீர்ப்பதற்கு பதிலாக நெருக்கடிகள் மேலும் மேலும் கூர்மையாக பொருளாதாரத்தை காப்பாற்ற முடியாத அளவிற்கு நெருக்கடியின் எல்லைக்கே சென்றுவிட்டன.

இத்தகைய சூழலில், 1947 போலி சுதந்திரத்திற்கு பிறகு இந்தியாவை பல்வேறு ஏகாதிபத்தியங்களில் காலடியில் போட்டு தாராளமாக கொள்ளையடிக்க அனுமதித்து வந்த இந்திய ஆளும்வர்க்க கும்பலுக்குள் முரண்பாடு ஏற்பட்டது. இந்த முரண்பாடானது அமெரிக்கா தலைமையிலான ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன் போன்ற நாடுகளை ஆதரிக்கின்ற ஒரு முகாமாகவும், அதற்கு எதிராக 1917-ல் சோசலிச நாடாக உருவாகி, தோழர் ஸ்டாலின் மறைவுக்கு பிறகு ‘‘சொல்லில் சோசலிசம், நடைமுறையில் ஏகாதிபத்தியமாக’, மாற்றமடைந்து சமூக ஏகாதிபத்தியமாக சீரழிந்த ரஷ்யாவை ஆதரிக்கின்ற ஒரு முகாமாகவும் உருவானது.

நாட்டை ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தின் கொள்ளைக்கு திறந்து விடுவதற்கு பொருத்தமான அரசியல், பொருளாதார சூழ்நிலையை உருவாக்குவதற்காக மக்களின் மீது கொடூரமான அடக்குமுறையின் மூலம் திணிக்கப்பட்டதுதான் எமர்ஜென்சி என்று சொல்லப்படுகின்ற அவசர நிலை பாசிசமாகும்’’ என்று பாசிச இந்திரா கொண்டு வந்த அவசரநிலைபற்றி புதிய ஜனநாயகம் தினசரியில் எழுதியிருந்தோம். பின்னர் அதனை ‘‘ஆர்.எஸ்.எஸ்- பாஜகவின் கார்ப்பரேட் காவி பாசிச பயங்கரவாதமும், காங்கிரசின் அவசரநிலை பாசிசமும்’’ என்ற பெயரில் தனி வெளியீடாகவும் கொண்டு வந்துள்ளோம்.

அது போல தான் இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது இந்து தேசியவாத கண்ணோட்டத்தில் பாடல்களை எழுதி பரப்பி வந்த பாரதி பற்றி எமது நிலைப்பாடுகளில் எந்த மாற்றமும் இல்லை.

குறிப்பிட்ட தருணத்தில் செயல்தந்திர ரீதியான போராட்டங்கள் மற்றும் இயக்கங்களின் போது எதிரிகள் மற்றும் நண்பர்கள் மாறுகிறார்கள் என்பதை சர்வதேச புரட்சிகர அனுபவங்களின் ஊடாகவே நாங்கள் கற்றுக் கொண்டுள்ளோம். இந்த இயங்கியல் பார்வையில்லாத வறட்டுவாதிகள் பல ஆண்டுகளாக ஒரே கண்ணோட்டத்தில் ஒரே வரையறை வைத்து செயல்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அதில் என்ன முன்னேற்றம் மக்களுக்கும் நமக்கும் உள்ள உறவில் என்ன மாற்றம் வந்துள்ளது. கட்சி எந்த அளவிற்கு பரந்துபட்ட மக்களுடன் ஐக்கியமாகியுள்ளது என்பதைப் பற்றி எல்லாம் நேர்மையாக பரிசீலனை செய்யாமல், ஒரு சிறு குழுவானது புரட்சி, சமூக மாற்றம் என்ற பெயரில் வார்த்தைகளை வீரியமாக பேசுவதன் மூலமாகவே மாற்றம் வந்து விடும் என்று அரசியல் தற்குறித்தனமாகவும், பாமரத்தனமாகவும் கருதுகின்றனர்.

இத்தகைய போக்குகளை உதறியெறிந்து விட்டு குறிப்பிட்ட தருணத்தில் கடைபிடிக்கப் படுகின்ற செயல்தந்திரத்திற்கு உகந்த வகையில் காங்கிரசு, தமிழகத்தை ஆளும் திமுக உள்ளிட்ட கட்சிகளுடன் பாசிச எதிர்ப்பு-குறைந்தபட்ச செயல்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகிறோம். இந்த அடிப்படையிலேயே காங்கிரஸ், திமுக மற்றும் விடுதலை போராட்ட காலத்தில் இந்து தேசபக்த உணர்வுடன் செயல்பட்ட பாரதி போன்றவர்கள் அனைவரையும் அணுகுகிறோம்.

இதனாலேயே சிலரால் வெறுக்கப்படுகின்றோம்; சிலரால் தூற்றப்படுகின்றோம் என்றாலும் தற்போதைய செயல்தந்திரத்தின் காரணமாக பல்வேறு தரப்பு உழைக்கும் மக்கள், அறிவுஜீவிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் மத்தியிலும் சிறுபான்மை மதத்தைச் சார்ந்த கட்சிகள், மக்கள் மத்தியில் சென்றடைந்துள்ளோம்.

இத்தகைய அரசியல் ரீதியிலான தொடர்புகளை அமைப்பு ரீதியாக அணி திரட்டுவதும், பாசிச எதிர்ப்பு செயல்தந்திரத்தில் குறைந்தபட்ச செயல் திட்டத்துடன் உடன்படும் கட்சிகள், இயக்கங்களுடன் ஐக்கிய முன்னணி உருவாக்கி பாசிசத்தை வீழ்த்துகின்ற போராட்டத்தில் முன்னேறிச் செல்வோம்.

அந்த வெற்றியுடன் புதிய ஜனநாயகப் புரட்சியை நோக்கி நாட்டையும், மக்களையும் கொண்டு செல்வோம் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். இதில் எந்த ஊசலாட்டமும், நிலைப்பாடுகளில் குழப்பமும் இல்லை. ■

# ஆக்கல் - அழித்தல் - காத்தல் அத்துடன் அணுசக்தி கடவுளாகும் அதானி, அம்பானி!

டிசம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் "நிலையான பயன்பாடு மற்றும் இந்தியாவை மாற்றுவதற்கான அணுசக்தி மேம்பாடு மசோதா-2025 (Sustainable Harnessing and Advancement of Nuclear Energy for Transforming India - SHANTI) எனும் மசோதாவை எதிர்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பாசிச மோடி அரசு நிறைவேற்றியுள்ளது.

2008 ஆம் ஆண்டில் எதிர்கட்சியாக இருந்த பாசிச பாஜக, எப்படியாவது காங்கிரஸ் ஆட்சியை கலைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் "அணுசக்தி திட்டத்தை வளர்ப்பது தவறு, காங்கிரஸ் மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டது" என்று கூவியது. ஆனால் இன்று, தனது அமெரிக்க மற்றும் இந்திய எஜமானர்களின் நலன்களுக்காக, "காலம் மாறியுள்ளது, தொழில்நுட்பமும் மாறியுள்ளது, எனவே எங்கள் நிலையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது" என பச்சோந்தியாக மாறி மக்களை கொத்து கொத்தாகக் கொன்று குவிக்க புதிய அணுசக்தி மசோதாவை கொண்டுள்ளது.

ஏற்கெனவே அமலில் இருந்த இந்திய அணுசக்தி சட்டம்-1962 மற்றும் அணுசக்தி சேதங்களுக்கான சமூக பொறுப்பு சட்டம்- 2010 ஆகிய இரு சட்டங்களை முற்றிலுமாக நீக்கிவிட்டு புதிய அணு சக்தி சட்டமாக ஷாந்தி அணு சட்டத்தை நிறைவேற்றி இருப்பதன் மூலம் அணுசக்தி துறையையும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

### நீண்டகால எரிசக்தி மேம்பாடு என்பது பொய்! அணுசக்தி துறை தனியாருக்கு தாரை வார்ப்பதே மெய்!

புதிய அணு மசோதா கொண்டு வர வேண்டிய அவசியம் பற்றி பேசிய ஒன்றிய பாஜக அரசு "உலகம் சுத்தமான எரிசக்தியை நோக்கி நகர்கிறது. உள்நாட்டு அணுசக்தி வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி 2047 ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி திறனை நாமும் இலக்காகக் கொண்டுள்ளோம். இந்தியாவின் வளர்ந்து வரும் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், எரிசக்தி கலவையில் அணுசக்தியின் பங்கை 10 சதவீதமாக அதிகரிக்கவும் இந்த மசோதா அவசியம்" என்கிறது



உலக அளவில் அணு மின்நிலையங்கள் வணிக ரீதியில் தோல்வி அடைந்திருப்பதையும், அவற்றின் கழிவை புதைக்கும் பிரம்மாண்டமான செலவையும் வைத்துப்பார்க்கும் போது அதனால் பெரிய நன்மை இல்லை என்பதே பல நாடுகளின் அனுபவமாக இருக்கும் போது எவ்வித ஆய்வுமின்றி அணு சக்தி மூலம் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்யப் போவதாக கதையளக்கிறது பாசிச பாஜக.

அனல், அணு மற்றும் கற்றாலை, சூரிய ஒளி உள்ளிட்ட மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் இந்தியாவின் மொத்த மின்சார உற்பத்தி நிறுவப்பட்ட திறன் கொள்ளளவு (Installed Capacity) 475 ஜிகாவாட் ஆகும். இதில் அணு மின்சக்தியின் கொள்ளளவு வெறும் 8.7 ஜிகாவாட் மட்டுமே. இதனை தான் 2031-ஆம் ஆண்டிற்குள் 22.3 ஜிகா வாட்டாகவும், 2047-ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகா வாட்டாகவும் உயர்த்த புதிய அணு சட்டத்தை கொண்டு வந்துள்ளது.

எளிமையாக சொன்னால், 2024- 2025 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த மின்சார உற்பத்தி சுமார் 1,824 பில்லியன் யூனிட் (1,82,400 கோடி யூனிட்) ஆகும். இதில் 56 பில்லியன் யூனிட் (5600 கோடி யூனிட்) மட்டுமே அணு மின்சக்தி மூலம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. நிலக்கரி பயன்படுத்தி அனல் மின் உற்பத்தி மூலம் 1,363 பில்லியன் யூனிட் (1,36,300 கோடி யூனிட்) மின்சாரம் தயாரிக்கப் பட்டுள்ளது. அதாவது நாட்டின் மொத்தத் தேவையான மின்சார உற்பத்தியில் 3 சதவீதம் மட்டுமே அணு மின்சக்தி மூலம் பெறப்பட்டிருக்கிறது என்பதே உண்மை. இதனை தான் 2047 ஆம் ஆண்டிற்குள் 10% மாற்றப்போவதாக பீற்றிக்கொள்கிறது பாசிச பாஜக.

**இந்திய ஆட்சியாளர்களின் பெரிய எஜமானன் அமெரிக்க மேல்நிலை வல்லரசு மற்றும் சின்ன எஜமானர்களான அம்பானி- அதானி உள்ளிட்ட தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் கட்டளைக்கு ஏற்பவும், 2008-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்திய-அமெரிக்க அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தம் மற்றும் இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் ஷாந்தி எனும் புதிய அணு மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளது.**

பாசிச பாஜக சொல்வது போல், அணுசக்தி மூலம் 2047 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகா வாட் உற்பத்தி செய்யப்பட்டாலும், மொத்த உற்பத்தியில் அதன் பங்களிப்பு மாறப்போவதில்லை என்பதே உண்மை. அதாவது, 2047-ஆம் ஆண்டின் போது நாட்டின் மின்சாரத் தேவை 705 ஜிகா வாட்டை எட்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

705 ஜிகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டும் எனில், அனல், அணு மற்றும் கற்றாலை, சூரிய ஒளி உள்ளிட்ட அனைத்து மின்சாரத் திட்டங்களின் கொள்ளளவுகளை 2047-ஆம் ஆண்டிற்குள் 2100 ஜிகா வாட்டாக உயர்த்தினால் மட்டுமே முடியும் என்கிறார் ஒன்றிய அரசின் மின்சாரத் துறை அமைச்சர் மனோகர் லாலோ. நாட்டின் மொத்த மின்சார உற்பத்தி கொள்ளளவான 2100 ஜிகா வாட்டில், அணு மின்சக்தியின் மூலம் கிடைக்கும் 100 ஜிகா வாட் கொள்ளளவு என்பது வெறும் 4% மட்டுமே எனும் போது புதிய அணு மசோதா மூலம் எரிசக்தி துறையில் மேம்பாடு ஏற்படும் என்பது மிகப்பெரிய பொய்யாகும்.

இந்தியாவில் பொதுத்துறைகள் மூலம் 24 அணு உலைகள் செயல்பாட்டில் உள்ளன. இவைகள் மூலமே 5600 கோடி யூனிட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. தற்போது புதிய சட்ட திருத்தத்தின் அடிப்படையில் கார்ப்பரேட் முதலாளிகளும் அணு உலைகள் அமைத்து மின்சாரம் தயாரிக்க அனுமதி அளிக்கிறது. இந்திய மக்களின் வரிப்பணத்தை, சேமிப்பை மூலதனமாகவும் அமெரிக்காவின் தொழில்நுட்பத்தை பாஜகவின் ஒப்பந்தம் மூலமும் பயன்படுத்திக்கொண்டு 100 ஜிகா வாட் மின்சாரத்தை அம்பானி அதானி போன்ற தேசங் கடந்த தரகு முதலாளிகள் தயாரிக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தர வழிவகை செய்கிறது புதிய அணு மசோதா என்றால் மிகையல்ல.

இது வெறும் அணு மின் உற்பத்தி சம்பந்தப்பட்டது மட்டும் கிடையாது. கதிரியக்கம் மிகுந்த பேரழிவு அபாயத்தை ஏற்படுத்தவல்ல தனிமங்களைக் கையாளும் கட்டற்ற சுதந்திரத்தைத் தனியாருக்கு வழங்குவது தேசப்பாதுகாப்பிற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் ஏற்றதல்ல. இலாப வெறிபிடித்த முதலாளிகள் தங்கள் தேவைக்காக யுரேனியத்தை எதற்கும் பயன்படுத்துவார்கள் என்ற அபாயமும் இதில் ஒளிந்துள்ளது.

### சிறிய ரக அணு உலைகளும்! ஆபத்தும் - இழப்பீடும்!

புதிய மசோதா சிறிய ரக அணு உலைகள் அமைக்க முக்கியத்துவம் தருகிறது. இந்த சிறிய ரக உலைகள் இயல்பான அணு உலைகளை காட்டிலும் மிகவும் சிறியவை. இவை ஒரு தொழிற்சாலை அமைக்கும் இடத்தில் அமைத்து விடலாம். இதனால், செலவும் குறையும் விரைவாக கட்டுமானம் செய்ய முடியும். ஆனால் அணு உலைகளுக்கு 24 மணிநேரமும் தண்ணீர் தேவை என்பதால் இத்தகைய அணு உலைகளை அமைக்கும் இடத்தில் கண்டிப்பாக ஆறு இருக்க வேண்டும்.

அம்பானி அதானி போன்ற தேசம் கடந்த தரகு முதலாளிகள் சிறிய ரக அணு உலைகள் அமைக்கவே ஆர்வம் காட்டி வருகின்றனர். நாளடைவில் இந்தியாவில் உள்ள பெரும்பாலன தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளுக்கு நிலையான மின்சாரத்தைப் உற்பத்தி செய்யும் வகையிலான சிறிய அணு உலைகளை அமைக்க ஆர்வம் காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதனை கருத்தில் கொண்டே இந்திய அரசும் 2033-ம் ஆண்டிற்குள் ஐந்து சிறிய ரக அணு உலைகள் மூலமே எரிசக்தி மேம்பாடு செய்யப்படும் என தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சிறிய ரக அணு உலைகள் என்பதால் ஆபத்து குறைவு என்கிறது பாசிச பாஜக அரசு. அணுமின் நிலையம் இயங்கும்போது நேரும் விபத்து என்பது அதன் பிரச்சினைகளில் ஒரு அம்சம் மட்டுமே. விபத்து நேராமல் கூடப் போகலாம். ஆனால், இயங்கி முடித்தபின் அந்த மின்நிலையமும், அணுக்கழிவுகளும் தோற்றுவிக்கும் பிரச்சினையிலிருந்து தப்பவே முடியாது. பல்வேறு நோய்களை தோற்றுவிக்கும். அதேபோல், ஆறு அருகில் அணு உலைகள் அமைக்கப்படுவதால் அந்த ஆற்று நீர் நாசமாகும் அபாயமும் உள்ளது. இவைகளை கணக்கில் கொள்ளாமல் கார்ப்பரேட் முதலாளிகளின் இலாப வெறிக்கு மக்களை பலியிடுகிறது பாசிச மோடி அரசு.

இந்தியாவிற்கு அணு உலைகளைக் கொடுக்கும் அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நிறுவனங்கள் எவ்வித இழப்பீடும் தர தேவையில்லை எனவும், அணு உலையை நாட்டில் இயக்குபவர்களுக்கு மட்டுமே இழப்பீடு தரவேண்டும் என்றும் இழப்பீட்டு தொகைக்கும் ஒரு உச்ச வரம்பு வைத்துள்ளது.

பெரிய அணு உலைகள் உள்ள நிறுவனத்தில் விபத்து நடந்தால் ரூ. 3000 கோடியும், நடுத்தர அணு உலைகள் உள்ள நிறுவனத்தில் விபத்து என்றால் 1500 கோடியும், சிறிய அணு உலைகள் உள்ள நிறுவனமென்றால் வெறும் 100 கோடி மட்டும் என வரம்பை அரசு நிர்ணயித்து உள்ளதுடன் அணு உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு கிடையாது என தெரிவித்து

உள்ளது. இதிலிருந்து இழப்பீடுகள் வழங்குவதிலும் பெரிய எஜமானர்களுக்கு முழு சலுகையும் சிறிய எஜமானர்களுக்கு பாதி சலுகையும் அளித்துள்ளது பாசிச பாஜக அரசு

### புதிய அணு மசோதா தேவை! எஜமானர்களின் சேவை!

இந்திய ஆட்சியாளர்களின் பெரிய எஜமானன் அமெரிக்க மேல்நிலை வல்லரசு மற்றும் சின்ன எஜமானர்களான அம்பானி- அதானி உள்ளிட்ட தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் கட்டளைக்கு ஏற்பவும், 2008-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்திய-அமெரிக்க அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தம் மற்றும் இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் ஷாந்தி எனும் புதிய அணு மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளது.

மசோதா ஆண்டு இறுதியில் தாக்கல் செய்யப்பட்டாலும் அதற்கான வேலைகள் இந்த ஆண்டு தொடக்கத்திலே பிள்ளையார் சுழி போடப்பட்டது. குறிப்பாக, பிப்ரவரி மாதம் 01 ஆம் தேதி தாக்கல் செய்த பட்ஜெட்டில் இந்திய அணுசக்தி துறையில் தனியார் முதலீடு ஊக்குவிப்பு, சிறிய இரக அணு உலைகளுக்காக 20,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன.

பட்ஜெட் தாக்கல் செய்த 10 நாட்களுக்குள் அமெரிக்கா சென்ற மோடி, ட்ரம்ப் சந்தித்து பேசியதுடன் கூட்டாக பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தினர். அப்போது, பேசிய டிரம்ப், ‘‘இந்தியச் சந்தையில் மேம்பட்ட அமெரிக்க அணுசக்தித் தொழில்நுட்பத்தை வரவேற்பதற்காக இந்தியாவும் தனது சட்டங்களைத் திருத்தி வருகிறது. இத்திருத்தம் அமெரிக்க சிவில் அணுசக்தித் துறைக்கு பல்லாயிரக்கணக்கான கோடி டாலர்களை ஈட்டித் தரும்’’ என்றார். அதனை தொடர்ந்து பேசிய மோடி, ‘‘இரு நாடுகளிடையே இராணுவ ரீதியாக பத்தாண்டுகளுக்கு பாதுகாப்பு ஒத்துழைப்பு கட்டமைப்பு தயாரிக்கப்படும்’’ என கூறினார்.

பத்திரிக்கையாளர் சந்திப்பில் தெரிவித்தது போலவே, அக்டோபர் மாதத்தில் 10 ஆண்டு கால அமெரிக்க இந்திய இராணுவ கட்டமைப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் தளவாடங்கள் மற்றும் சேவைகள் பகிர்வு, கூட்டு உற்பத்தி, அணுசக்தி துறையில் தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவை இந்த ஒப்பந்தத்தின் மூன்று முக்கிய நோக்கங்களை கொண்டது என அறிவிக்கப்பட்டது.

அதேபோல், இந்திய நாடாளுமன்றத்தில் புதிய அணு மசோதா நிறைவேற்றப்பட்ட சில நாட்களிலே, அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலரை இந்திய அரசுடன் இணைந்து வேலை செய்வதற்கான விதிகளை உருவாக்கவும், இந்தியாவின் உள்நாட்டு அணுசக்தி பொறுப்பு விதிகளை சர்வதேச விதிகளுடன் இணைத்து செயலாற்றவும் வழிவகுக்கும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு அங்கீகாரச் சட்டத்தில் அமெரிக்க அதிபர் டிரம்ப், கையெழுத்திட்டுள்ளார் என்பதுடன் ஒப்பிட்டு பார்த்தால் பெரிய எஜமானரான அமெரிக்க மேல்நிலை வல்லரசின் முதன்மை அடிமை தாங்கள் என்பதை நிருபித்து விட்டது பாசிச மோடி அரசு.

மறுபுறம், இந்தியாவில் உள்ள சிறிய எஜமானர்களான அதானி- அம்பானி உள்ளிட்ட தேசங் கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் நலன்களையும் கவனத்தில் கொண்டே செயல்பட்டுள்ளது பாசிச மோடி அரசு. அதாவது, சென்ற நவம்பர் மாதம் 25 ஆம் தேதிதான் அதானி குழுமம் இந்திய அணு சக்தி துறையில் பங்கு கொள்ள தங்களது விருப்பத்தை தெரிவித்தனர். அவ்வறிவிப்பு வந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை, மோடி அரசு அணுசக்தி துறையில் தனியாரை அனுமதிக்க சட்டமே கொண்டுவந்து விட்டது என்பதிலிருந்து சின்ன எஜமானர்களுக்கும் தனது விசுவாசத்தை காட்டியுள்ளது.

மசோதா நிறைவேற்றப்பட்ட 10 நாட்களுக்குள் அதானியின் அதானி பவர் நிறுவனம் உபி அரசுடன் சிறிய ரக அணு உலைகள் அமைப்பது தொடர்பான ஒப்பந்தம் போடவே தயாராகிவிட்டது. முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், டாடா பவர், ஜிண்டால் ஸ்டீல் & பவர், ஹிண்டால்கோ இண்டஸ்ட்ரீஸ், ஜே.எஸ்.டபிள்யூ எனர்ஜி போன்ற நிறுவனங்கள் பல்வேறு மாநிலங்களில் இடங்களையும் தேர்வு செய்து வருகின்றன.

மொத்தத்தில், இந்தியாவின் எரிசக்தி மேம்பாடு எனும் அணுசக்தி கனவு என்பது அமெரிக்க, பிரான்ஸ், ஜப்பான் உள்ளிட்ட பன்னாட்டு முதலாளிகள் அடையவிருக்கும் கொள்ளை இலாபம், அணு மின் உற்பத்தியில் குதிக்க காத்திருக்கும் அதானி, அம்பானி போன்ற தேசங் கடந்த தரகு முதலாளிகளின் இலாப வெறி, அணு மின்நிலையங்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் துடித்துக் கொண்டிருக்கும் இந்திய அணுசக்தி அதிகார வர்க்கம், அணுசக்தி கனவுடன் இணைந்த இந்தியாவின் வல்லரசுக் கனவு, அதற்குத் தேவைப்படும் அமெரிக்காவின் தயவு போன்ற பல விசயங்கள் அணு திருத்த மசோதாவிற்குள் புதைந்திருக்கின்றன.

### மக்கள் எழுச்சி மூலமாக அழிவைத்தரும் அணுசக்தியை தடுப்போம்!

புதிய அணு மசோதா எதிர்ப்பு என்பது வெறும் சட்டத்திருத்தத்திற்கான எதிர்ப்பு அல்ல. அமெரிக்க மேல்நிலை வல்லரசையும் இந்திய முதலாளிகளையும் முதலாளிகளின் அடிவருடியான பாசிச பாஜக அரசையும் எதிர்ப்பது என்பதாகும். ஒரே வார்த்தையில் சொன்னால் கார்ப்பரேட் காவி பாசிசத்தை எதிர்ப்பது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அணு உலைக்கு எதிரான போராட்டம் தலைமுறைகளைக் காக்கும் போராட்டம் என்பதால் விடாப்பிடியாகப் போராடி நம் மண்ணை, மக்களை, தலைமுறைகளை பாதுகாக்க வேண்டும். இதற்கு கார்ப்பரேட் காவி பாசிசத்தை வீழ்த்துவது முதன்மையாகிறது.

பலமிக்க எதிரிக்கு எதிராக பாசிச எதிர்ப்பு சக்திகளை ஒன்றிணைத்து மக்கள் முன்னணி அமைத்து மக்கள் எழுச்சி மூலம் ஜனநாயகக் கூட்டரசு அமைப்போம்!. ஜனநாயக கூட்டரசு மூலம் அணுசக்தி பயன்பாட்டைத் தடுப்போம்!

● இரணியன்.

# வங்கதேசம்:

# ஷெரீப் உஸ்மான் ஹாடி படுகொலையும், இந்தியாவின் பிராந்திய வல்லரசுக் கனவும்!

வங்க தேசத்தின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி நீக்கம் செய்து, இந்தியாவில் தஞ்சமடைய வைத்த பெரும் கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்த மாணவர் இயக்கத்தின் முக்கியத் தலைவரான ஷெரீப் உஸ்மான் ஹாடி துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டதை அடுத்து வங்கதேசத்தில் பரவலாக வன்முறை வெடித்துள்ளது. அங்கு சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு வரும் பிப்ரவரியில் தேர்தல் நடத்துவதற்கான தேதி அறிவிக்கப்பட்டதற்கு அடுத்த நாளே இந்த சம்பவம் அரங்கேறி உள்ளது.

வங்கதேசத் தலைநகர் டாக்காவின் பிஜோய் நகரில் உள்ள ஒரு மசூதியில் இருந்து டிசம்பர் 12 அன்று வெளியே வந்த போது, முகமூடி அணிந்த மர்ம நபர்களால் ஹாடி சுடப்பட்டார். டாக்காவில் ஆரம்பகட்ட சிகிச்சைக்குப் பின், மேல் சிகிச்சைக்காக சிங்கப்பூர் அனுப்பப்பட்ட அவர் அங்கு சிகிச்சை பலனின்றி டிசம்பர் 18 அன்று உயிரிழந்தார். ஹாடியின் மரண செய்தி வெளியானவுடன் அவரது ஆதரவாளர்கள் தலைநகர் டாக்காவில் உள்ள ஒரு சதுக்கத்தில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன் பிறகு அது மிகப்பெரிய வன்முறைப் போராட்டமாக வெடித்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முக்கிய வங்கதேச செய்தித்தாள்களான தி டெய்லி ஸ்டார் மற்றும் புரோத்தோம் அலோவின் அலுவலகங்களை சூறையாடினர். அதில் ஒரு கட்டிடம் தீ வைத்து எரிக்கப்பட்டது. இதற்குக் காரணம் அவை மதச்சார்பற்ற வகையில், நடுநிலையோடு செய்தி வெளியிடும் பத்திரிகைகளாக இருந்தன என்பதுதான்.

சுட்டுக் கொல்லப்பட்ட 30 வயதான ஹாடி, மாணவர் போராட்டக் குழுவான இன்குலாப் மஞ்சாவின் முக்கியத் தலைவராகவும், அண்டை நாடான இந்தியாவை வெளிப்படையாக, கடுமையாக விமர்சிப்பவராகவும் இருந்தார். வங்கதேசத்தில் உள்ள அரசியல் கட்சிகள் ஹாடியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த இடைக்கால அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.

**வங்கதேசத்தில் நிகழ்ந்த கிளர்ச்சியும், இடைக்கால அரசின் உதயமும்!**

ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் கட்சி தொடர்ந்து 15 ஆண்டுகளாக வங்கதேசத்தில் ஆட்சி புரிந்து வந்த நிலையில், வங்கதேசம் தனி நாடாக உருவாக நடந்த விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு வழங்க ஷேக் ஹசீனா அரசாங்கம் முடிவெடுத்தது.

இதை எதிர்த்து வங்கதேச மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஜூலை 2024 - ல் போராட்டத்தில் குதித்தனர். போராட்டத்தை ஒடுக்க இராணுவம் களமிறக்கப்பட்டது. போராட்டக் களத்தில் சுமார் 1400 பேர் கொல்லப்பட்டனர்.

வங்கதேசத்தில் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்களுக்கு நீதிகோரி, தலைநகர் டாக்காவில் மாணவர்கள் நடத்திய பேரணி.



இதன் காரணமாக போராட்டம் தீவிரமான வன்முறையாக வெடித்தது. போராட்டத் தீயின் வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் ஷேக் ஹசீனா தப்பித்து ஓடிவந்து இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையடுத்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அங்கே அமைக்கப்பட்டது.

இடைக்கால அரசாங்கத்துக்கு தலைமை தாங்கும் முகமது யூனுஸ், ஹாடியின் மரணம் தேசத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்றும், ஜனநாயகத்தை நோக்கிய நாட்டின் பயணத்தை பயங்கரவாதம் அல்லது இரத்தக்களறியின் மூலம் நிறுத்த முடியாது எனவும் தனது தொலைக்காட்சி உரையில் குறிப்பிட்டார். இந்த சம்பவத்தை நினைவு கூறும் வகையில் ஒரு நாளை தேசிய துக்க தினமாகவும் அறிவித்தார்.

மேலும் ஹாடி சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வானது ஒரு திட்டமிட்ட தாக்குதல் என்றும், சதிகாரர்களின் நோக்கம் தேர்தலை நடத்த விடாமல் தடுப்பதாகும் என்றும் அவர் கூறினார். தேர்தலை சீர்குலைக்கும் நோக்கில் எந்த வகையான வன்முறையும் பொறுத்துக் கொள்ளப்படாது எனவும் அறிவித்தார். இந்த துப்பாக்கிச் சூடு தொடர்பான விசாரணைகள் நடந்து வருகின்றன.

### இன்குலாப் மஞ்ச் அமைப்பு விடுத்த எச்சரிக்கை!

உஸ்மான் ஹாடி, ஷேக் ஹசீனாவை எதிர்க்கும் முக்கிய அமைப்பான இன்குலாப் மஞ்சின்(புரட்சிக்கான தளம்) முக்கிய தளபதியாக திகழ்ந்தார். வங்கதேசத்தில் நடைபெற இருக்கும் பிப்ரவரி தேர்தலில் டாக்கா - 8 தொகுதியின் வேட்பாளராக இருந்தார். கடந்த ஆண்டு வங்கதேசத்தில் நடந்த கிளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்த இவர், நாட்டின் பிரதமரான ஷேக் ஹசீனாவின் பதவி விலகலுக்கும், நாட்டை விட்டு தப்பி ஓடுவதற்கும் முக்கியக் காரணமாக விளங்கினார்.

அவரது அமைப்பான இன்குலாப் மஞ்ச், இடைக்கால அரசாங்கம் இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறினால் மேலும் கிளர்ச்சி வெடிக்கும் என்று எச்சரித்துள்ளது. அந்த அமைப்பின் செயலாளர் அப்துல்லா அல் ஜாபர், ஹாடி கொலைக்குக் காரணமான குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை. நாங்கள் இந்த காலதாமதத்தை ஏற்கவில்லை. டிசம்பர் 22 வரையான 24 மணி நேர காலக்கெடு முடிவடைந்த பிறகும், காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே டிசம்பர் 23 முதல் போராட்டங்கள் முழுவீச்சில் தொடரும் என்றார்.

அறிவித்தபடியே போராட்டத்தைத் தொடங்கிய அவர் மற்ற அமைப்புகளையும் இதில் சேருமாறு வலியுறுத்தினார். இந்தத் தேர்தல் நியாயமாக நடக்க வேண்டும் எனில் ஹாடியைக் கொன்றவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். வங்கதேசத்தில் கடந்த காலங்களில் நடந்த பெரிய சம்பவங்களுக்கு சர்வதேச உதவி கோரப்பட்டதை போல இந்த விஷயத்திலும் அணுக வேண்டும். தேர்தலுக்கு முன்பு நீதி கிடைக்க வேண்டும் என்றார்.

**இந்தியாவைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம், பூட்டான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்த வேண்டும் என பாசிச மோடி அரசு விரும்புகிறது. தெற்காசிய பிராந்தியத்தில் தன்னை ஒரு பேட்டை ரவுடியாக நிலை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. மேலும் தனது கார்ப்பரேட் விசுவாசத்தையும் காட்ட எத்தனிக்கிறது.**

### தொடரும் துப்பாக்கிச் சூடும், வன்முறையும்!

உஸ்மான் ஹாடி சுடப்பட்டு கொல்லப்பட்ட சில தினங்களுக்குள் மற்றொரு வங்கதேச மாணவர் தலைவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. தென்மேற்கு குல்னா நகரில் மொத்தலேப் சிக்தர் சுடப்பட்டதாக வங்கதேச செய்தி நிறுவனமான டெய்லி ஸ்டார் செய்தி வெளியிட்டது. சிக்தரின் தலையின் இடது பக்கத்தில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்துள்ளது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அதிகமான ரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளதாகவும், அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பதாகவும் செய்தி வெளியானது.

சிக்தர், மாணவர் கூட்டமைப்புகள் ஒன்றிணைந்து புதிதாக உருவான தேசிய குடிமக்கள் கட்சியின் (NCP) குல்னா பிரிவின் தலைவராகவும், தொழிலாளர் முன்னணியின் மத்திய ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார். வங்கதேசத்தில் அடுத்தடுத்து மாணவர் அமைப்பின் தலைவர்கள் மீது நடத்தப்படும் துப்பாக்கிச் சூட்டுக்கு இந்தியாதான் காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், வங்கதேசத்தில் உள்ள இந்துக்கள் மீது தாக்குதல் நிகழ்கிறது. மைமென்சிங் நகரில் இஸ்லாமிய மதத்தை அவமதித்ததாகக் கூறி தீபு சந்திரதாஸ் என்ற இந்து இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

தொடர்ந்து நடந்த வன்முறையில் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியின் தலைவர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகள், அலுவலகங்கள் தீவைத்து கொளுத்தப்பட்டன. பங்களாதேஷ் தேசிய கட்சியை சேர்ந்த தலைவர் பிலால் ஹுசைனின் வீட்டுக்கு இந்த கும்பல் தீ வைத்ததில் அவரது ஏழு வயது மகள் பரிதாபமாக உயிரிழந்தார். எனவே சங்பரிவார் கூறுவது போல இந்துக்கள் மட்டுமல்ல, பல்வேறு தரப்பினரும் இந்த வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர் என்பதுதான் உண்மை.

### வங்கதேசம் – இந்தியா இடையே மோதல் முற்றுகிறது!

மாணவர் தலைவர்களின் இந்தப் படுகொலைகளுக்குப் பின்னால் இந்தியாவின் சதி இருப்பதாக குற்றச்சாட்டுகள்

எழுந்துள்ளன. இந்தக் கொலையில் தொடர்புடைய இரண்டு நபர்கள் மைமென்சிங் நகரில் உள்ள ஹாலுகாட் எல்லை வழியாக இந்தியாவிற்கு தப்பிச்சென்று மேகாலயாவிற்குள் நுழைந்ததாக டாக்கா பெருநகர காவல் துறை அறிவித்துள்ளது.

செய்தியாளர்கள் சந்திப்பின்போது டாக்காவின் கூடுதல் ஆணையர் நஸ்ருல் இஸ்லாம், சந்தேக நபர்களான பைசல் கரீம் மசூத் மற்றும் ஆலம் கீர் ஷேக் ஆகியோர் மேகாலயாவை அடைந்ததாக தகவல் கிடைத்துள்ளது என தெரிவித்தார். அவர்களை முதலில் பூர்த்தி என்பவர் சந்தித்தார் என்றும், பிறகு சாமி என்ற டாக்ஸி டிரைவர் அவர்களை மேகாலயாவில் உள்ள துரா நகருக்கு அழைத்துச் சென்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சந்தேக நபர்களுக்கு உதவிய அந்த இரண்டு நபர்களும் இந்தியாவில் இப்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சி செய்தியையும் அவர் வெளியிட்டார். அவர்களை தங்களிடம் ஒப்படைக்க இந்திய அதிகாரிகளுடன் பேசி வருகிறோம் என்றும் தெரிவித்தார். ஆனால் மேகாலயாவின் காவல் துறை மூத்த அதிகாரி ஒருவர் வங்கதேசத்தின் இந்த கூற்றுக்களை மறுத்துள்ளார்.

இந்திய தூதரை அழைத்த வங்கதேச அரசு ஹாடியின் கொலையாளிகளை திருப்பி அனுப்பவில்லை என்பதற்காகவும், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவில் இருந்து கொண்டு வன்முறையைத் தூண்டும் வகையிலான அறிக்கைகளை வெளியிட அனுமதித்ததற்கும் தனது கண்டனங்களை பதிவு செய்தது. இருநாட்டு தூதரகங்களும் விசா சேவையை ரத்து செய்தன. வங்கதேசத்தில் இந்திய தூதரகங்கள் முற்றுகையிடப்பட்டன. சிட்டகாங்கில் உள்ள இந்தியத் தூதரகம் மீது கல்வீச்சு சம்பவங்களும் அரங்கேறின.

இங்கு புது டெல்லியில் உள்ள வங்கதேச தூதரகம் முன்பு ஒன்று கூடிய சங்பரிவார் கும்பல் வங்கதேசத்தில் கொல்லப்பட்ட தீபு சந்திரதாஸ் மரணத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியது. இது பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வண்ணம் இருந்ததாக வங்கதேச அரசு கண்டனம் தெரிவித்தது. இந்திய வெளியுறவு அமைச்சகம் மைமென்சிங்கில் இந்து ஒருவர் ஒரு கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை மட்டுமே எழுப்பியதாக விளக்கம் அளித்தது. ஆனால் இந்த விளக்கத்தை ஏற்க மறுப்பதாக வங்கதேச வெளியுறவுத்துறை கூறியது.

### வங்கதேசத்தில் இப்போது உள்ள நிலை!

ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி வரும் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பங்களாதேஷ் தேசியவாத கட்சி (BNP) வெற்றி பெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டதாகும். இந்தக் கட்சியின் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா சமீபத்தில் மரணம் அடைந்தார். அவரது மகன் தாரிக் ரஹ்மான் இப்போது வங்கதேசத்திற்கு திரும்பி உள்ளார். அவர்தான் அடுத்த பிரதமராக வருவார் என எதிர்பார்ப்பு உள்ளது.

இந்தியாவுக்கு எதிரான அரசியல் போக்கு இப்போது அங்கு நிலவுகிறது. இந்த இந்திய எதிர்ப்பு அரசியலால் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாவது இந்தியா அல்ல. மாறாக மதச்சார்பற்ற எண்ணம் கொண்ட தனி நபர்கள், நடுநிலையாளர்கள் மற்றும் சிறுபான்மை வங்கதேச மக்களே ஆவர். ஜமாத் இ இஸ்லாமி போன்ற மத அடிப்படைவாதிகளை விமர்சிக்கும் எவரையும் இந்தியாவுக்கு ஆதரவானவர்கள் என முத்திரை குத்தி அவர்கள் மீதான தாக்குதலை நியாயப்படுத்துவர்.

வங்கதேச மக்களில் ஒரு பகுதியினரும், BNP கட்சியும் ஹசீனாவின் 15 ஆண்டு கால ஆட்சியின் போது, தங்கள் நாட்டில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாக கருதுகின்றனர். ஹசீனா இந்தியாவில் தஞ்சம் புகுந்ததிலிருந்து அவர்களது கோபம் அதிகரித்துள்ளது. சமீபத்தில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவரை வங்கதேசத்துக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என பலமுறை கோரிக்கைகள் வைக்கப்பட்ட போதும் இந்தியா செவி சாய்க்கவில்லை.

### இந்தியாவின் பிராந்திய வல்லரசுக் கனவு!

இந்தியாவைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம், பூட்டான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்த வேண்டும் என பாசிச மோடி அரசு விரும்புகிறது. தெற்காசிய பிராந்தியத்தில் தன்னை ஒரு பேட்டை ரவுடியாக நிலை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. மேலும் தனது கார்ப்பரேட் விசுவாசத்தையும் காட்ட எத்தனிக்கிறது.

வங்கதேசத்தில் தமக்கு ஆதரவான ஷேக் ஹசீனா ஆட்சி அகற்றப்பட்டு, இடைக்கால அரசின் தலைவராக உள்ள முகமது யூனுஸ் பாகிஸ்தான் மற்றும் சீனாவுக்கு ஆதரவாக இருக்கிறார் என்ற அதிருப்தி இந்தியாவுக்கு இருந்து வருகிறது. இந்த நிலையில், அடுத்து அமையப் போகும் அரசும் தனக்கு எதிராகத்தான் இருக்கும் என்பதால் அதை சீர்குலைக்க முயல்கிறது. இந்த திட்டத்தின் படிதான் வங்கதேசத்தில் மாணவர் அமைப்பின் தலைவர்களை தனது கூலிப்படைகள் மூலம் கொன்றொழிக்கும் வேலையில் இறங்கியுள்ளது.

மோடி அரசுக்கு இது ஒன்றும் புதிதல்ல. ஏற்கெனவே கனடா, அமெரிக்கா, பாகிஸ்தான் மற்றும் பிரிட்டனில் இத்தகைய படுகொலைகளை அரங்கேற்றி உள்ளது. ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட எவ்வித உரிமையும் இந்திய அரசுக்கு இல்லை என்பதை ஜனநாயக சக்திகள் அழுத்தமாக பதிவு செய்ய வேண்டும்.

வங்கதேசத்தின் மாணவர் இயக்கத் தலைவரின் படுகொலையானது இந்தியப் பாசிச கும்பல் கையாளுகின்ற வழிமுறைகளுடன் ஒத்துப் போகிறது. பாசிச மோடி கும்பலானது இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்துக்காக எந்த எல்லைக்கும் செல்லும் என்பதில் சந்தேகமே இல்லை.

● அன்புச்செல்வன்

# நெக்ஸ்ட் தேர்வு மூலம் ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவை தகர்க்கும் பாசிச பாஜக!

மருத்துவம் படிப்புக்கு நீட் எனும் நுழைவுத் தேர்வை திணித்து பின்தங்கிய ஏழை மாணவர்களின் மருத்துவக் கனவை பொசுக்கியது காவி பாசிச கும்பல். விதிவிலக்காக நீட் தடையையும் தாண்டி மருத்துவக் கல்வியில் நுழைகின்ற ஒடுக்கப்பட்ட , ஏழை எளிய மக்களை மருத்துவராக தொழில் செய்யவிடாமல் தடுக்க நெக்ஸ்ட் (NExT) தேர்வை திணிக்கிறார்கள்.

### சப்பைக் கட்டு கட்டும் ஒன்றிய அரசு!

மோடியின் அரசாங்கத்திற்கும், தேசிய மருத்துவ ஆணையத்திற்கும் (NMC) இந்தியாவில் மருத்துவ கல்வியின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சீரான பயனுள்ள மற்றும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவ தேர்வு முறையை நிறுவுவதற்கான ஒரு தேசிய தொலைநோக்குப் பார்வை உள்ளது என சாதிக்க நிற்கின்றனர். அத்தகைய தொலைநோக்கைத்தான் நெக்ஸ்ட் தேர்வு பிரதிபலிக்கிறது என பார்ப்பன கும்பலும், கார்ப்பரேட் அடிமைகளும் கூவுகின்றனர்.

ஒருவர் மருத்துவராக வேண்டுமென்றால் நோய் குறித்தும், நோய்க்கான சிகிச்சை குறித்தும் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்களை படித்து, தேர்வுகளை எழுதி முடிக்கிறார்கள். தான் கற்றதை நடைமுறைப்படுத்த ஓர் ஆண்டு மருத்துவமனையில் நடைமுறை பயிற்சியையும் பெறுகிறார்கள்.

இந்த மருத்துவ கல்வித் தேர்வில் தேர்ச்சி பெறத் தவறினாலோ, அல்லது பயிற்சி காலத்தில் தவறு இழைத்து நடவடிக்கைக்கு உள்ளானாலோதான் ஒருவரின் மருத்துவ அங்கீகாரம் என்பது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தற்போது இவர்கள் திணிக்கும் நெக்ஸ்ட் தேர்வுதான் மருத்துவர் தகுதிக்கான அங்கீகாரம் என்றால், நான்கரை வருட படிப்பில் எழுதிய தேர்வுகளையும், ஓர் ஆண்டு பயிற்சியையும் முக்கியத்துவம் இல்லாதது; தகுதியை தீர்மானிக்க உதவாதது என்ற வகையில் இத்தனை ஆண்டு காலம் நடைமுறைப்படுத்தி வந்த தேர்வு முறையை ரத்து செய்கிறார்கள்..

### முதல் தாக்குதல் ஆயுஷ் மீது!

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நெக்ஸ்ட் தகுதி தேர்வு அலோபதி மருத்துவ மாணவர்கள் மீது முதலில் திணிக்கப்படவில்லை. மாறாக, இம்மண்ணின் மருத்துவமான சித்த மருத்துவம், வட இந்தியாவின் ஆயுர்வேதம், யோகா, யுனானி, ஹோமியோபதி, இயற்கை மருத்துவம் உள்ளிட்ட ஆயுஷ் எனப்படும் இந்திய மருத்துவ படிப்புகளை படிப்பவர்களின் மீதுதான் ஏவப்படுகிறது.

2021-2022 ஆம் கல்வியாண்டில் சேர்ந்து மருத்துவம் படிக்கும் மாணவர்களுக்கு 2027 இல் இந்த நெக்ஸ்ட் தேர்வு நடைமுறைப்படுத்தப்படும் என்று ‘‘இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணையம்’’ அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எம்பிபிஎஸ் படிப்பவர்களுக்கு சலுகை காட்டி நான்கு ஆண்டுகள் வரை இத்தேர்வை ஒத்தி வைக்க போகிறார்கள்.

எம்பிபிஎஸ் படிக்கும் மாணவர்கள் இரண்டு படிநிலைகளில் நெக்ஸ்ட் தேர்வை எழுதி தேர்ச்சி பெறலாம். ஆனால் இந்திய மருத்துவ முறையை படிக்கும் ஆயுஷ் மாணவர்களோ இத்தகுதித் தேர்வை ஒரே கட்டமாக எழுதி தேர்ச்சி பெற்றாக வேண்டும். தவறினால் மீண்டும் ஒரு வருடம் பயிற்சி மருத்துவராக இருந்துவிட்டு மீண்டும் தேர்வு எழுத வேண்டும் எனவும் அறிவித்துள்ளார்கள்.

எம்பிபிஎஸ் படிக்கும் மாணவர்கள் நெக்ஸ்ட் தேர்வில் எடுக்கும் மதிப்பெண் அடிப்படையிலேயே பட்ட மேற்படிப்புக்கான மாணவர் சேர்க்கையையும் நடத்தப் போகிறார்கள். ஆனால் இந்திய மருத்துவ முறையான ஆயுஷ் மாணவர்கள் மருத்துவராக தகுதி பெற நெக்ஸ்ட் தேர்வு எழுதுவதோடு, பட்ட மேற்படிப்பில் சேர வேண்டும் என்றால், அதற்கு தனியாக ‘‘முதுகலை நீட்’’ தேர்வையும் எழுதியாக வேண்டும் என வரையறுத்துள்ளார்கள்.



**மருத்துவராக வேண்டும் என்ற கனவோடும் வெறியோடும் விடாப்பிடியாக பள்ளியில் படித்து, நீட் போன்ற தடைகளை தாண்டி, மருத்துவ படிப்பில் சேர்ந்து படிப்பையும் முடித்து ஓராண்டு பயிற்சியும் முடித்து விடவேண்டும். அதைத் தொடர்ந்து மருத்துவராகி உழைத்து, தமது குடும்பத்தின் கடனை கட்டலாம்; தனது பெற்றோரின் பொருளாதார நெருக்கடியை குறைக்கலாம் என்று திட்டமிட்டிருக்கும் மருத்துவ மாணவர்களின் தலையில் இந்த நெக்ஸ்ட் தேர்வானது பேரிடியாகவே இறங்குகிறது.**

MBBS களுக்கு தரப்படும் இந்த சலுகைக்குப் பின்னே, ஆயுஷ் மாணவர்களின் தலையில் திட்டமிட்டு தேர்வுகளின் எண்ணிக்கையை கூட்டும் சதிகளுக்கு பின்னே இருப்பது கார்ப்பரேட் நலனைத் தவிர வேறு எதுவும் கிடையாது.

### புராணப் புளுகுகளை கைவிட்டு பம்மும் அரசு!

ராம லக்ஷ்மணனை காப்பாற்ற அனுமன் சஞ்சீவி மூலிகையை மலையோடு சுமந்து வந்தான் என்று ராமாயண கதையில் சொல்கிறார்களே, அத்தகைய சித்த மருத்துவத்திற்காக சங்கிகள் குரல் கொடுக்கிறார்களா? தொட்டதற்கெல்லாம் புராண, இதிகாசங்களை துணைக்கு அழைக்கும் மோடி வகையறாக்கள் கல்வி விஷயத்தில், குறிப்பாக மருத்துவ கல்வியில் நமது பாரம்பரிய முறைகளை புதைக்குழிக்கு அனுப்பவே முனைப்பு காட்டுகின்றனர். ஏனென்றால் இவர்களின் எஜமானவர்களான கார்ப்பரேட்டுகளுக்கு நமது இந்திய மருத்துவ முறைகள் 'ஒவ்வாமையை' ஏற்படுத்துகிறது.

மருத்துவம் படித்த மாணவர்களுக்கு மீண்டும் புதிதாக ஒரு தகுதித் தேர்வை பாசிச மோடி அரசு திணிப்பது முதல் முறை அல்ல. ஏற்கெனவே தேசிய மருத்துவ ஆணையம் ஆனது 2019 ஆம் ஆண்டில் மருத்துவம் படிக்கச் சேர்ந்த மாணவர்களுக்கு 2023-ஆம் ஆண்டிலேயே தேசிய வெளியேறும் தேர்வான நெக்ஸ்ட்டை நடத்த திட்டமிட்டு இருந்தது. ஆனாலும் அப்போது வெடித்த மாணவர்களின் போராட்டங்களை தொடர்ந்து தற்காலிகமாக பின்வாங்கப்பட்டது. தற்போது இரண்டாவது சுற்றாக இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதற்காகவே 2020 இல் மருத்துவ கார்ப்பரேட்டுகளின் ஆலோசனைக்கேற்ப NCISM சட்டம் 2020, NMC சட்டம் 2020 என்ற புதிய சட்டங்களும், தேசிய கல்விக் கொள்கை 2020 ஆகியவையும் மோடி அரசால் கொண்டு வரப்பட்டு அமல்படுத்தப்படுகிறது. இச்சட்டங்களின் அடிப்படையில் ஆயுஷ் படிப்புகளுக்கு என்று "இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணைய"த்தையும், அலோபதி மருத்துவத்திற்கு என்று "தேசிய மருத்துவ ஆணைய"த்தையும் உருவாக்கினர். இவைதான் தற்போது நெக்ஸ்ட் தேர்வை திணிக்கின்றது.

### நோய்க்கிருமியான பாசிசத்துக்கும் தேவை 'சிகிச்சை'!

மருத்துவராக வேண்டும் என்ற கனவோடும் வெறியோடும் விடாப்பிடியாக பள்ளியில் படித்து, நீட் போன்ற தடைகளை தாண்டி, மருத்துவ படிப்பில் சேர்ந்து படிப்பையும் முடித்து ஓராண்டு பயிற்சியும் முடித்து விடவேண்டும். அதைத் தொடர்ந்து மருத்துவராகி உழைத்து, தமது குடும்பத்தின் கடனை கட்டலாம்; தனது பெற்றோரின் பொருளாதார நெருக்கடியை குறைக்கலாம் என்று திட்டமிட்டிருக்கும் மருத்துவ மாணவர்களின் தலையில் இந்த நெக்ஸ்ட் தேர்வானது பேரிடியாகவே இறங்குகிறது.

பெண் மருத்துவர்களை பொறுத்தவரையில் திருமணம் மற்றும் மகப்பேறு காரணமாக இப்ப புதிய தேர்வுக்கு தயாராவதில் கூடுதலான தடைகள் எழக்கூடும். இவை அனைத்தும் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் மருத்துவராக தொழில் செய்வதில் இருந்து தடுப்பதாக அமைந்துள்ளது.

எனவே அடுக்கடுக்காக திணிக்கப்படும் தேர்வுகளின் சுமையை மேலும் சுமக்க கூடாது. கிராமப்புற ஏழை எளிய மாணவர்களை ஒழித்துக் கட்டும் நோக்கிலும், மருத்துவத்துறையை கார்ப்பரேட்டுகளிடம் மொத்தமாக தாரைவாக்கும் சதியுடனும் புதிதாக திணிக்கப்படும் NExT போன்ற தேர்வுகளை தகர்த்தெறியும் வகையில் மருத்துவ மாணவர்கள் போராட்டக் களத்தில் இறங்கியாக வேண்டும்.

இந்திய ஒன்றிய அரசாங்கத்தை ஆர்எஸ்எஸ் பாஜக கும்பல் கைப்பற்றியது முதல் அதன் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து தனித்தனியாக நடைபெறும் போராட்டங்களை பாசிச பாஜக அரசு எளிமையாக நசுக்கி விடுகிறது.

ஆளும் வர்க்கமான தேசங்கடந்த கார்ப்பரேட்டுகள் மற்றும் காவி கும்பலின் விருப்பத்திற்கு எதிரான மக்களின் போராட்டங்களில் சில வெற்றியை ஈட்டி உள்ளன. உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டு நடத்திய போராட்டங்களான டங்ஸ்டன் போராட்டம், ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டம், ஜல்லிக்கட்டு தடைக்கு எதிரான போராட்டம் உள்ளிட்டவைகள் வெற்றியை சாதித்துள்ளன.

போராடுகின்ற பிரிவினர்கள் இத்தகைய படிப்பினைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு மோடி அரசின் கார்ப்பரேட் நலத் திட்டங்களால் பாதிக்கப்படும் அனைத்து வர்க்கத்தினரையும், அனைத்து துறை மற்றும் பிரிவுகளை சேர்ந்தவர்களையும் ஐக்கியப்படுத்தி போராடுவதற்கான முயற்சிகளை தொடங்க வேண்டும்.

இனி தனித்தனியான போராட்டங்கள் வெற்றியை தராது; கூட்டுப் போராட்டங்களே கார்ப்பரேட் காவி பாசிஸ்ட்களை களத்தில் வீழ்த்தி உழைக்கும் மக்களுக்கான விடிவைத் தரும்.

● கரிகாலன்

## குளோபல் சவுத்-குளோபல் நார்த் பிதற்றல்:

# ஏகாதிபத்திய நிதிமூலதனக் கொள்ளையை மறைக்கும் சதியே!

கடந்த ஜூலை மாதம் பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பின் 17-வது உச்சி மாநாடு பிரேசிலில் நடைபெற்றது. "உலகளாவிய தெற்கு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்" (Strengthening Global South Co-operation) மற்றும் "உலகளாவிய நிர்வாகத்தின் சீர்திருத்தம்" (Global Governance Reform) ஆகிய நோக்கங்களை மையமாக கொண்டே மாநாட்டில் முடிவுகள் அனைத்தும் எடுக்கப்பட்டது.

பிரிக்ஸ் மாநாடு முடிந்தவுடன் பல முதலாளித்துவ அறிஞர்கள் உலகப் பொருளாதாரத்தின் ஈர்ப்பு மையம் ஆசியாவை நோக்கி நகர்வதாகவும், இதனை உணர்ந்ததால் தான் ஆசிய கண்டத்தில் உள்ள 11 நாடுகளை உறுப்பு நாடுகளாக கொண்ட பிரிக்ஸ் கூட்டமைப்பு மிரட்டி பணிய வைக்க ட்ரம்ப் தொடர்ச்சியாக முயன்று வருகிறார் என கூறுகின்றனர்.

பிரிக்ஸ் கூட்டமைப்பு முன்வைக்கும் உலகளாவிய தெற்கு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் உலகளாவிய நிர்வாக சீர்திருத்தம் என்பதை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டால் தனது ஒற்றைத் துருவ மேலாதிக்கம் முற்றிலுமாக பறிபோய் விடுமோ என்ற அச்சத்தில் பிரிக்ஸ் கூட்டமைப்பை மிரட்ட தொடங்கியது மேல்நிலை வல்லரசான அமெரிக்கா என்பதே உண்மை. குறிப்பாக, தனது மேலாதிக்கத்தை தக்க வைத்துக் கொள்ள டாலரின் ஆதிக்கம் மிக முக்கியமானது என்பதால், டாலருக்கு பதிலாக வேறு எந்த நாணயத்தையும் பயன்படுத்த மாட்டோம் என்று பிரிக்ஸ் நாடுகள் உறுதி அளிக்கவில்லை என்றால் பிரிக்ஸ் நாடுகளுக்கு 100% வரி விதிக்கப்படும் என்றும், அமெரிக்காவுடன் எந்தவொரு வர்த்தகத்தையும் செய்ய முடியாது என்றும் பகிரங்கமாக மிரட்டினார் அதிபர் ட்ரம்ப்.

### உலகப் பொருளாதாரத்தின் ஈர்ப்பு மையம் ஆசியாவா? சீனாவா?

உலகின் மக்கள் தொகையில் 60% பேரைத் தன்னகத்தே கொண்டுள்ளது ஆசிய கண்டம். அதாவது அதிக உழைப்பு சக்தியை கொண்டுள்ளதால் உலகப் பொருளாதார வளர்ச்சியில் 70%, உலகப் பண்ட வர்த்தகத்தில் 40%, மற்றும் உலக மொத்த உற்பத்தியில் (GDP) 57% பங்களிக்கிறது என்றால் மிகையல்ல. இதற்காக உலக பொருளாதாரத்தின் ஈர்ப்பு மையமாக ஆசியா உள்ளது என்பது தவறானதாகும். ஆசியாவில் உள்ள நவீன சமூக ஏகாதிபத்தியமான சீனாவின் பொருளாதார வளர்ச்சி ஆசியாவின் வளர்ச்சியாக கட்டியமைக்கப்படுகிறது; காட்டப்படுகிறது என்பதே உண்மை.

எளிமையாக சொன்னால், ஆசிய கண்டத்தில் உள்ள சீனா உலகின் மிகப்பெரிய உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளது. எனவே தான் சீனா "உலகின் தொழிற்சாலை" என்று அழைக்கப்படுகிறது. உலக பண்ட வர்த்தகத்தில் ஆசியாவின் பங்களிப்பு 40% எனும் போது அதில் சீனாவின் பங்கு 19% உள்ளது. அதேபோல், உலக மொத்த உற்பத்தியில் (GDP) ஆசியாவின் பங்களிப்பு 57% எனும் போது அதில் சீனாவின் பங்கு 26% என்பது குறிப்பிடத்தக்கது.

பிரேசிலில் நடைபெற்ற பிரிக்ஸ் கூட்டமைப்பின் 17-வது உச்சி மாநாடு




**உழைக்கும் மக்களை சுரண்டி கொழுக்கும் ஏகாதிபத்திய முதலாளித்துவ பொருளாதாரத்தின் மையமாக அமெரிக்க தலைமையிலான மேற்கத்திய நாடுகளுக்கு பதில் சீனா தலைமையிலான ஆசிய கண்டம் என மாறினாலும் ஒடுக்கப்படும் நாடுகளின் காட்சிகள் மாறப்போவதில்லை.**

உலக ஏற்றுமதி சந்தையில் மூன்றில் ஒரு பங்கை சீனா கொண்டுள்ளது. குறிப்பாக, ஆசிய நாடுகளின் ஏற்றுமதி சந்தையில் 49.8% அமெரிக்கா சந்தையில் 22.4% ஐரோப்பிய நாடுகளின் ஏற்றுமதி சந்தையில் 20.5% சீனா கைப்பற்றி உள்ளது. இதன் மூலம் உலக சந்தையில் தனது பொருளாதார மேலாதிக்கத்தை நிறுவ வெறி கொண்டு முயற்சித்தும் வருகிறது.

2024 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் அடிப்படையில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு மூலதன ஏற்றுமதி செய்யும் நாடுகளில் சீனா அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி இரண்டாம் இடத்தில் உள்ளது. வளரும் ஆசிய நாடுகளுக்கு மூலதன ஏற்றுமதி செய்யும் நாடுகளில் 2.07 லட்சம் கோடி டாலர் முதலீட்டுடன் சீனா முதலிடம் வகிக்கிறது. அமெரிக்கா ஆறாவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நிதி மூலதன ஏற்றுமதி மூலம் சீன முதலாளிகள் உலகின் பல வெளிநாட்டு நிறுவனங்களைக் கையகப்படுத்துகிறார்கள். இதன் மூலம் தயாரிப்புகள்/சேவைகளை பிரீமியம் கார்கள் முதல் பேஷன் ஆடைகள், இறைச்சிகள் மற்றும் ஹாலிவுட் திரைப்படங்கள் என அனைத்து துறைகளிலும் உள்ள புதிய தொழில்நுட்பங்களையும், புதிய நவீன உற்பத்தி முறைகளையும் சீனாவுக்குக் கொண்டு வருகிறார்கள். தனது மேலாதிக்க தேவைக்காக புதிய தொழில்நுட்பத்தை பிற ஆசிய நாடுகளுக்கு கொண்டு செல்கிறது சீனா. மேற்கண்ட புள்ளி விவரங்கள் மூலம் நவீன சமூக ஏகாதிபத்தியமான சீனா ஆசியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாகவும், முதலீட்டு ஆதாரமாகவும் உள்ளது, உலகளாவிய விநியோகச் சங்கிலியில் (Global Supply Chains) மையமாகவும் செயல்படுகிறது என்பது தெளிவாக புரியும்.

சீனா மற்றும் ரஷ்யாவை தவிர்த்து பெரும்பாலான ஆசிய நாடுகள் வளரும் நாடுகளாக மட்டுமே உள்ளது. இந்த நாடுகள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பொருட்களை உற்பத்தி செய்து கொடுக்கின்ற கூடங்களாக (manufacturing hub) மட்டுமே விளங்குகின்றன என்பதும் அமெரிக்கா நடைமுறைப்படுத்தும் வர்த்தக வரியானது இந்த நாடுகளில் உள்ள தொழில், உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றில் மிகப்பெரும் நெருக்கடியை உருவாக்கி உள்ளன என்பது தான் எதார்த்த நிலைமையாகும்.

டிரம்ப்பின் வர்த்தக வரி உயர்த்தும் மிரட்டலுக்குப் பிறகு, பிரிக்ஸ் கூட்டமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் சீனா, ரஷ்யா, பிரேசில் போன்ற நாடுகள் எதுவும் சொல்லாமல் அமைதி காத்து வருகின்றன. பிரிக்ஸ் மாநாட்டு பிரகடனத்திலும், "கட்டற்ற வரிவிதிப்பு சர்வதேச வர்த்தகத்துக்கு ஆபத்தானது" என்று மட்டும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பிரகடனத்தில் வரி விதிப்புடன் தொடர்புபடுத்தி அமெரிக்கா - ட்ரம்ப் என்று வெளிப்படையாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதை தொகுத்து பார்த்தால் பொருட்களை உற்பத்தி செய்து கொடுக்கின்ற கூடங்களாகதான் பிற ஆசிய நாடுகள் உள்ளன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அதேபோல், உலகத்தில் முக்கியமான எண்ணெய், உணவுப் பொருட்கள், மற்றும் இயற்கை வளங்களை பெரிய அளவில் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்வதில் ஆசியா நாடுகள் முக்கிய பங்கு வகித்தாலும், உலக சந்தையை அமெரிக்க மேல் நிலை வல்லரசும், ஐரோப்பிய ஒன்றியமும் தான் நிர்ணயித்து வந்தன. இதில் ஆசிய நாடுகள் பெரிய அளவில் செல்வாக்கு செலுத்த முடியாது. சீன- ரஷ்யாவின் பல்துருவ ஒழுங்கமைப்பிற்கான முன்னெடுப்புகள் மூலமே மேற்கத்திய செல்வாக்கு குறைந்து வருகிறது என்பதே மறுக்க முடியாத உண்மை.

அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கும் கருவிகளான ஐஎம்எப், உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவை காலனி, அரைக் காலனி, நவீன காலனி மற்றும் மறுகாலனிய நாடுகளை கடன் பொறியமைப்பிற்குள் சிக்கவைத்து நிரந்தர கடனாளியாகவும், அடிமைகளாகவும் மாற்றி வருகின்றனர்.இதனால் பாதிப்படையும் நவீன காலனிய நாட்டு அரசாங்கங்கள் அமெரிக்காவை எதிர்த்து பேசுவதற்கோ அல்லது பொருளாதார ரீதியாக தன்னை தக்க வைத்துக் கொள்வதற்கோ பொருத்தமான புதிய கூட்டமைப்புகளை தேடிக் கொண்டிருக்கும் சூழலில் தான் இந்த பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைகின்றன.இந்த கூட்டமைப்பில் இயல்பாகவே சீனாவின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது.

இவைகளை மறைத்து உலகப் பொருளாதாரத்தின் ஈர்ப்பு மையம் ஆசியா மாறுகிறது என்ற முதலாளித்துவ அறிஞர்கள் கருத்து தவறாகும். சொல்லில் சோசலிசமும் செயலில் உலக மேலாதிக்க வெறியும் கொண்ட நவீன சமூக ஏகாதிபத்தியமான சீனாவின் பொருளாதார வளர்ச்சி, ஆசியாவின் வளர்ச்சியாக கட்டியமைக்கப்படுகிறது.மேலாதிக்க வெறியோடு அமெரிக்க- ஐரோப்பிய ஒன்றிய நாடுகளோடு வல்லரசு போட்டியில் இறங்கியுள்ள சீனா உலக பொருளாதாரத்தின் மையமாக மாறுவதற்கான நகர்வில் உள்ளது.

அதே நேரத்தில், தனது ஒற்றைத் துருவ மேலாதிக்கத்தைச் சமாதானப்பூர்வமான வழியில் அமெரிக்கா விட்டுக் கொடுத்து விடாது. அமெரிக்காவின் அரசியல், இராணுவ வலிமையினால் பாதுகாக்கப்படும் அதன் பொருளாதார மேலாதிக்கத்தை சமாதானப்பூர்வமான வழிகள் மூலம் வீழ்த்தி விட முடியாது என்பதைப் புரிந்து கொண்டிருப்பதனால்தான் எல்லாத் ஏகாதிபத்திய நாடுகளுமே தமது இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

### பிரிக்ஸ் கூட்டமைப்பின் உலகளாவிய நிர்வாகத்தின் சீர்திருத்தமும்! உலக வங்கியின் எதிர் வினையும்!

மேல்நிலை வல்லரசான அமெரிக்க தலைமையிலான ஒற்றை துருவ மேலாதிக்கத்திற்கு எதிராக பல்துருவ உலக ஒருங்கமைவை உருவாக்க ஆசிய கண்டத்தில் உள்ள நவீன சமூக ஏகாதிபத்தியமான சீனா மற்றும் இராணுவ மேல்நிலை வல்லரசான ரஷ்யாவும் முனைப்புக் காட்டிவருகின்றன. இதற்காக பிரிக்ஸ் கூட்டமைப்பை பயன்படுத்துகின்றன.

இந்த கண்ணோட்டத்திலே பிரிக்ஸ் கூட்டமைப்பின் 17-வது உச்சி மாநாட்டில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வர்த்தக கழகம், ஐ.நா போன்ற உலகளாவிய நிறுவனங்களில் குறிப்பிட்ட நாடுகளின் ஆதிக்கத்தை தடுப்பதுடன் புதிய உலக நிலைமைகளுக்கு ஏற்றவாறு வளரும் நாடுகளின் குரலை வலுப்படுத்தும் வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என பிரிக்ஸ் கூட்டமைப்பு முன்வைத்தது.

ஏற்கெனவே சீன- ரஷ்யா நாடுகள் இணைந்து அமெரிக்க மேல்நிலை வல்லரசின் ஒற்றை துருவ மேலாதிக்கத்திற்கு எதிராக பல் துருவ ஒழுங்கமைவு கட்டியமைக்கும் நோக்கத்தில் உலகளாவிய நிறுவனங்களுக்கு எதிராக மாற்று நிறுவன அமைப்புகளை உருவாக்க முயற்சித்து வருகின்றன. குறிப்பாக, உலக வங்கிக்கு மாற்றாக ஆசிய உள்கட்டமைப்பு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி; உலக வர்த்தக கழகத்திற்கு மாற்றாக ஒருங்கிணைந்த பிராந்திய பொருளாதார கூட்டமைப்பு (RCEP); டாலருக்கு பதிலாக தங்களுடைய உள்நாட்டு நாணயத்தில் வர்த்தகம் செய்வது சர்வதேச பணப் பரிமாற்ற அமைப்பான ஸ்விஃப்ட்-க்கு (SWIFT) மாற்றாக எஸ்.பி.எஃப்.எஸ். (SPFS - System for Transfrer of Financial Messages) மற்றும் பிரிக்ஸ் பே(BRICS Pay) என உருவாக்கி வரும் நிலையில், பிரிக்ஸ் கூட்டமைப்பு முன்வைக்கும் உலகளாவிய நிர்வாகத்தின் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தால் அமெரிக்கா மற்றும் அதன் வழிகாட்டுதல் அடிப்படையிலே இயங்கும் உலக வங்கியின் மேலாதிக்கம் பறிபோகும் மற்றும் சீன- ரஷ்யா நாடுகள் பின்னால் பல நாடுகளின் அணி சேரும் என்பதை உணர்ந்த உலக வங்கி கடந்த செப்டம்பர் மாதம் சீர்திருத்தங்களுக்கான கூட்டணிகள் குறித்த உலகளாவிய மன்றம் (Global Forum on Coalitions for Reforms) என்ற தலைப்பில் வாஷிங்டன் டி.சி.யில் பல நாடுகளை சேர்ந்த அதிகாரிகளை அழைத்து கூட்டத்தை நடத்தியது.

இதில் ஐ.நா. அமைப்புகள், நிதி கட்டமைப்புகள், வர்த்தக அமைப்புகள் ஆகியவற்றில் வளரும் நாடுகளின் ஒத்துழைப்பை அதிகரித்தல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை உள்ளடக்கிய நிர்வாக முறைகளை உருவாக்குதல் போன்ற விவாதங்களை உருவாக்கி தனது மேலாதிக்கத்தை தக்கவைக்க முயற்சித்து வருகிறது.

உலக வங்கியின் நடவடிக்கை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளுக்கு குறுகிய காலத்தில் பயனுள்ளதாக இருக்கக்கூடிய எதிர்வினை மட்டுமே என்றாலும், பழைய முறையில் உலகை மேலாதிக்கம் செய்து சூறையாட முடியாது என்பதை உணர்ந்த அமெரிக்க மேல்நிலை வல்லரசு பாசிச வழிகளை கையாள ஆரம்பித்துள்ளதுடன், தனது இராணுவத் தொழில் நுட்பத்தின் மூலம் உலக மேலாதிக்கத்தை தொடர முயற்சிக்கிறது. ஆனால் சீன- ரஷ்யா நடவடிக்கைகளால் அமெரிக்காவால் தனது மேலாதிக்கத்தை உலகில் தக்கவைப்பது நாளுக்கு நாள் இயலாததாகவே மாறி வருகிறது.

## தேவை:

## உலக பொருளாதார மையம் இடமாற்றம் அல்ல!

## உலக பொருளாதார முறையில் மாற்றம்!

உழைக்கும் மக்களை சுரண்டி கொழுக்கும் ஏகாதிபத்திய முதலாளித்துவ பொருளாதாரத்தின் மையமாக அமெரிக்க தலைமையிலான மேற்கத்திய நாடுகளுக்கு பதில் சீனா தலைமையிலான ஆசிய கண்டம் என மாறினாலும் ஒடுக்கப்படும் நாடுகளின் காட்சிகள் மாறப்போவதில்லை. ஏகாதிபத்திய பொருளாதாரத்தில் நாடுகளின் வளர்ச்சி என்பது முதலாளிகளின் வளர்ச்சியாக தான் இருக்குமே தவிர உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உண்மையான வளர்ச்சியாக இருக்காது. உழைக்கும் மக்களின் நலன் கொண்ட சோசலிச பொருளாதாரத்தில் மட்டுமே மக்களின் உண்மையான வளர்ச்சி இருக்கும். சோசலிச பொருளாதாரத்தை நோக்கிய மாற்றமே தற்போதைய தேவை. இதற்கு பாட்டாளி வர்க்க முகாம் கட்டியமைக்கப்பட வேண்டும்.

அதே நேரத்தில், ஏகாதிபத்திய நாடுகள் தனது மேலாதிக்கத்தை தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சர்வதேச அளவில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை தீவிரமாக்கி வருகிறது. இதனை சரியாக பயன்படுத்தி அனைத்துலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை முன்னெடுக்க பாட்டாளி வர்க்க முகாம் வேண்டும். பாட்டாளி வர்க்க முகாமின் மூலம் அனைத்துலக பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான பொதுத் திட்டத்தின் அடிப்படையில், ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்துக்கும் காலனி, அரைக்காலனி மற்றும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் தனிச்சிறப்பான நிலைமைகளையும், அந்நாட்டின் அரசியல்-சமூக வளர்ச்சியின் நிலைமையையும் வர்க்க முரண்பாடுகளையும் கணக்கில் கொண்டு புரட்சிக்கான வழிகாட்டுதலை தரவேண்டும்.

இன்றைய நிலைமையில் உலகெங்கிலும் அப்படி ஒரு பாட்டாளி வர்க்க முகாம் இல்லை. இதனை அமைப்பதற்கு உலகு தழுவிய அளவிலான புரட்சிகர கட்சியும் இல்லை. இருக்கின்ற மார்க்சிய லெனினிய கட்சிகளும் பலவீனமாக உள்ளன. எந்த நாட்டிலும் அவை தீர்மானகரமான சக்தியாக இல்லை. மாறாக இருக்கின்ற குழுக்களும் தங்களுக்குள் விவாதித்து சித்தாந்த ஒற்றுமையை ஏற்படுத்த முடியாமல் சிதறி கிடக்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புரட்சிகர சக்திகள் உலக தழுவிய ஒரு பாட்டாளி வர்க்க முகாமை ஏற்படுத்துவது தங்களது கடமையாக கொண்டு வேலை செய்ய வேண்டும். பாட்டாளி வர்க்க முகாம் உருவாக்கப்பட்டு ஒடுக்கப்படும் நாடுகளை ஒன்றிணைந்து ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக சர்வதேச போர்த்தந்திர செயல் தந்திரங்களை வகுத்து செயல்பட வேண்டிய அவசியத்தையே தற்போதைய உலக சூழல் நிர்பந்திக்கிறது. இந்த வேலை நடைபெறாவிட்டால் ஏகாதிபத்திய மேலாதிக்க வெறியால் போர்களும், அழிவும் கேட்காமலேயே வருவதற்கு காத்து நிற்கின்றன.

● தயாளன்




# உலக மேலாதிக்க போர்வெறியன் அமெரிக்காவின் வெனிசுலா மீதான தாக்குதல்:

# சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையே தற்போதைய தேவை!

தென் அமெரிக்கா கண்டத்தில் அமெரிக்க மேல்நிலை வல்லரசுக்கு எதிராக உறுதியாக போராடி வருகின்ற நாடுகளில் ஒன்றுதான் வெனிசுலா.

தனது நாட்டில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும்; எண்ணெய் வளத்தை மக்களின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும் என்று சுயசார்பு பொருளாதாரக் கண்ணோட்டம் கொண்ட வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ மீது போதை மருந்து கடத்தியதாக பொய் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க மேல்நிலை வல்லரசின் உளவுப் படை சிஐஏ துணையுடன் அமெரிக்க ராணுவம் நடத்திய இந்த தாக்குதல் நாடுகளின் இறையாண்மை மற்றும் அரசாங்கத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை ஆகியவற்றுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கையாகும்.

உலக போலீசுக்காரனாக தன்னை அறிவித்துக் கொண்டுள்ள அமெரிக்கா வெனிசுலா அதிபர் மீது நடத்திய இந்த தாக்குதல் பற்றி பல்வேறு விதமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன என்றாலும் வெனிசுலாவுக்குள்ளேயே சி ஐ ஏ உளவு படையை அனுப்பி கடந்த சில மாதங்களாக கண்காணித்து வந்து பொருத்தமான ஒரு தருணத்தில் இரண்டரை மணி நேரத்தில் இந்த தாக்குதல் நடவடிக்கையை முடித்துள்ளனர்.

'ஆபரேஷன் அப்சல்யூட் ரிசால்வ்' திட்டத்தின் ஒரு பகுதியாக 150-க்கும் மேற்பட்ட குண்டுவீச்சு, போர் உளவு விமானங்கள் இரவு முழுவதும் பயன்படுத்தப்பட்டன என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். கராகஸில் உள்ளூர் நேரப்படி அதிகாலை 2:00 மணிக்கு (GMT காலை 6:00) தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்தபோது, அமெரிக்கப் படைகள் நகரத்திற்குள் நுழைந்தன. அமெரிக்க ராணுவத்தின் மிக உயர்ந்த சிறப்புப் படைப்பிரிவான டெல்டா ஃபோர்ஸ் உறுப்பினர்களும் இதில் அடங்குவர். அவர்கள் கனரக ஆயுதங்களுடன், மதுரோவின் வீட்டின் உலோகக் கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று கைது செய்தனர்.

தனது கூலிப்படை நடத்துகின்ற இந்த தாக்குதல்களை ரசிக்கின்ற மனோபாவம் கொண்ட அமெரிக்க அதிபர் ஆன டொனால்ட் டிரம்ப் வெள்ளை மாளிகை அறையிலிருந்து கண்காணிக்கவில்லை; புளோரிடாவின் மார்-அ-லாகோ கிளப்பில், ஆலோசகர்களுடன் அமர்ந்து சிஐஏ இயக்குனர் ஜான் ராட்க்ளிஃப், வெளியுறவுத்துறை செயலாளர் மார்க்கோ ரூபியோவுடன் நேரலையாக அதனை ரசித்துக் கொண்டிருந்தார்.

அமெரிக்கா நினைத்தால் எந்த தருணத்திலும் எந்த நாட்டிலும் உள்ளே நுழைந்து அந்த நாட்டின் அதிபரை ஒரு சில மணி நேரங்களில் கைது செய்ய முடியும் அல்லது படுகொலை நடத்த முடியும் என்பதை சமகாலத்தில் நடந்துள்ள இந்த பாசிச பயங்கரவாத நடவடிக்கையானது உலக மக்களுக்கு அறிவித்துள்ளது.

மதுரோ ஆட்சியை கலைப்பதற்கும் வெனிசுலாவின் எண்ணெய் வளத்தை சூறையாடுவதற்கும் தனக்கு உரிமை உள்ளது என்பதை வெளிப்படையாகவே அறிவித்துள்ள ட்ரம்புக்கு எதிராக உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் புரட்சிகர, ஜனநாயக சக்திகள் போராடுகின்றன.

அமெரிக்காவின் எண்ணெய் கார்ப்பரேட்டுகளான எக்ஸான் மோபில் (Exxon and mobil) போன்ற கனிமவள கொள்ளையர்களின் தேவைக்காக நடத்தப்பட்டுள்ள இந்த தாக்குதல்கள் அமெரிக்கா முன் வைக்கின்ற ஜனநாயகத்தின் யோக்கியதையை உலக மக்களுக்கு திரை கிழித்து காட்டியுள்ளது.

பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து இஸ்ரேல் நடத்தி வரும் பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் இன அழிப்பு போருக்கு எதிராக உலகம் முழுவதும் கண்டனக் குரல் எழுந்ததைப் போலவே தற்போது மதுரோ கைது நடவடிக்கையை கண்டித்து உலகம் முழுவதும் மக்கள் போராடுகிறார்கள்.

ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசான அமெரிக்காவின் கொடூரமான இறையாண்மைகளுக்கு எதிரான தாக்குதல்களை முறியடிப்பதற்கு சர்வதேச அளவில் பாட்டாளி மக்கள் இயக்கம் ஒன்றுபடுவதும், அதன் முதல் படியாக இந்தியாவில் உள்ள ஏகாதிபத்தியம் மற்றும் அது உருவாக்கியுள்ள கார்ப்பரேட் காவி பாசிசத்தை முறியடிப்பதற்கு ஓர் அணியில் திரள வேண்டும் என்பதுதான் தற்போதுள்ள முக்கிய கடமையாக மாறியுள்ளது.

● **நன்னிலம் சுப்பராயன்**

# டிசம்பர்-25: வெண்மணி தியாகிகள் நினைவு நாளில் ஓங்கட்டும் தொழிற்சங்க ஒற்றுமை! வெல்லட்டும் தொழிலாளர் உரிமை!

## மாநாட்டு தீர்மானங்கள்

1. ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்துள்ள நான்கு சட்டத் தொகுப்பானது தொழிலாளர்களின் பணி நிரந்தரத்தை ஒழித்து, சங்கம் வைக்கும் உரிமை, கூட்டுப்பேர உரிமை, போராடும் உரிமைகள் அனைத்தும் தொழிலாளர்களுக்கு விரோதமானது என்ற வகையில் சட்டத் தொகுப்பினை தமிழக அரசு அமல்படுத்தக்கூடாது. எந்த வகையிலும் தமிழக அரசு அனுமதிக்க கூடாது. ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கும் தொழிலாளர் சட்டத்தொகுப்புகளை தமிழகத்தில் எந்த காரணங்களுக்காகவும் எந்த சூழலிலும் அமல்படுத்த மாட்டோம் என தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

2. தமிழக அரசு மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களுக்கு தமிழகத்தில் சிலை வைக்க சட்டமன்ற விதி 110 ன் கீழ் தமிழக முதல்வர் கொண்டு வந்த தீர்மானத்தின்படி வேலைகள் நடைபெற்று வருவதை இம்மாநாடு நன்றி தெரிவித்து வாழ்த்துகிறது. அதே வேளையில் பாட்டாளி வர்க்க விடுதலைக்கு வித்திட்டு, தொழிலாளி உலகை ஆளமுடியும் என நடத்திக் காட்டிய ஆசான் தோழர் லெனின் அவர்களுக்கு திருச்சியில் சிலை வைக்க தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என இந்த மாநாடு கோருகிறது.

3. கிக் தொழிலாளர்களை டெலிவரி பார்ட்னர் என்ற பெயரில் உழைப்பினை ஒட்டச் சுரண்டுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க தொழிலாளர்களாக அங்கீகரிக்க வேண்டும். தொழிலாளர்களுக்கான அனைத்து சட்டப்பூர்வ உரிமைகளையும் பெறுவதற்கு தொழிலாளர் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்க வேண்டும். மேலும் கிக் தொழிலாளர்கள் வாகனங்களில் செல்லும்போது விபத்து ஏற்பட்டு மரணித்தால் அவர்கள் குடும்பத்திற்கு மாநில அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என இந்த மாநாடு கோருகிறது.

4. ஆட்டோ ஓட்டுனர்களுக்கு இடையே மோதலை ஏற்படுத்தாமல் தமிழகம் முழுவதும் நிலவுகின்ற விலைவாசிக்கு ஏற்ப மீட்டர் கட்டணத்தை நிர்ணயம் செய்து அமல்படுத்திட தமிழக அரசே ஆட்டோ செயலியை அறிமுகப்படுத்தி நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என இம்மாநாடு கோருகிறது.

5. சென்னையில் போராடி வரும் தூய்மைப்பணி தொழிலாளர்கள் போராடக்கூட அனுமதிக்காத திமுக அரசை மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சிகளில் தூய்மைப் பணி மற்றும் துப்புரவு வேலைகளை செய்து வரும் நான்கு வருடங்களுக்கு மேல் பணி புரிபவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கருவிகள் வழங்கிட வேண்டும் என இம்மாநாடு தமிழக அரசை வலியுறுத்துகிறது

6. தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளில் தரைக்கடை வியாபாரம் செய்வதற்கு தடையாக ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கும் வெண்டிங் கமிட்டி சட்டம், நகரை அழகுப்படுத்துவதாக கூறி தரைக்கடை வியாபாரிகள் ஆண்டாண்டு காலமாக வியாபாரம் செய்து வந்த இடத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டு வாழ்வாதாரம் ஒழிக்கப்படுகிறது. அவர்களை அப்புறப்படுத்திடும் நடவடிக்கையை எமது சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. தரைக்கடை வியாபாரிகளை பாதுகாக்க ஆண்டாண்டு காலமாக வியாபாரம் செய்த அதே இடத்தை வழங்கி அவர்கள் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய இம்மாநாடு தமிழக அரசை வலியுறுத்துகிறது.

7. தமிழகத்தில் அந்தந்த மாவட்டத்தில் நடைபெறும் அரசு சார்ந்த கட்டிட பணிகளுக்கு அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய எர்த் மூவர்ஸ் அசோசியேஷனிற்கு உட்பட்ட ஜே சி பி வாகன சங்கங்களுக்கு முன்னுரிமை தர வேண்டும். மேலும் வாகன கடன் கட்டவில்லை என்று வாகனங்களை குண்டர்களை வைத்து பறிமுதல் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை பறிக்கின்ற செயலை செய்யக்கூடாது என தமிழக அரசு கொண்டு வந்த தீர்மானத்தை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். வாகனங்களை பறிமுதல் செய்வதால் அவர்களின் வாழ்வாதாரம் பறிபோய் விடுகிறது. எனவே, நீதிமன்ற உத்தரவு பெற்ற பிறகுதான் கடனை வசூலிக்க வேண்டும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

8. ஜாதி மற்றும் மதத்தின் பெயரால் தமிழகம் எங்கும் கலவரத்தை தூண்டி அரசியல் ஆதாயம் அடையும் நோக்கில் சமூகத்தில் பதற்றத்தையும், கொந்தளிப்பையும் செய்து வரும் பாசிச பி.ஜே.பி - ஆர்.எஸ்.எஸ் சங்-பரிவார் கும்பலை தமிழகத்தில் ஒருபோதும் பாட்டாளி வர்க்கம்

காலூன்ற விடாமல் தடுக்கவேண்டும் என இம்மாநாடு உறுதியேற்கிறது. அதற்கேற்ற வகையிலான அனைத்து வித போராட்டங்களை எமது தொழிற்சங்கம் தனித்தும், பிற ஜனநாயக முற்போக்கு இயக்கங்கள், இடதுசாரி இயக்கங்களுடன் பாசிசத்தை ஆதரிக்கின்ற சக்திகளை எதிர்த்துப் போராட தொழிலாளர்களை ஓரணியில் திரட்டி பாசிச எதிர்ப்பு ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி (மக்கள் முன்னணி) கட்டியமைத்து ஜனநாயக கூட்டரசை நிறுவிட இம்மாநாடு உறுதியேற்கிறது.

9. மோடி அரசு கொண்டு வந்திருக்கும் விதை திருத்தச் சட்டம் 2025 பாரம்பரிய விதைகளை ஒழிப்பதுடன் விதை சந்தையை கார்ப்பரேட்டுக்கு தாரை வார்கிறது ஏற்கனவே கார்ப்பரேட்டுகள் மண்ணை மலடாக்கியது போல மனிதனை மலடாக்கும் மலட்டு தன்மை கொண்ட வீரிய ஒட்டுரக விதைகளை விவசாயத்தில் புகுத்துகிறது இந்த விதை திருத்த மசோதா. இந்த சட்டதிருத்தை எதிர்த்து போராடும் விவசாய சங்கங்களுக்கு எமது சங்கம் துணை நிற்கும்.ஒன்றிய பாஜக அரசு விதை திருத்த சட்டத்தை திரும்ப பெற வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

10. SIR எனும் சிறப்பு வாக்காளர் திருத்தம் என்பது தனக்கு எதிராக ஓட்டுப் போடுபவர்களின் ஓட்டு உரிமையை பறித்து தனது பாசிச அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டு கார்ப்பரேட்- காவி பாசிசத்தை முழுமையாக்குவதற்கே SIR அமல்படுத்தப்படுத்தப்படுகிறது.கர்நாடகா, அரியானா பீகாரைப்போல தமிழகத்திலும் மக்களின் வாக்குரிமையைப் பறித்து ஆட்சியை கைப்பற்றவே அவசரகதியில் SIR அமல்படுத்தி வரும் பாசிச பாஜகவை இந்த மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. SIR எதிராக பாசிச எதிர்ப்பாளர்கள், ஜனநாயக சக்திகள், முற்போக்காளார்கள், சமூக செயல்பாட்டாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து போராட அறை கூவி அழைக்கிறது.

11. உழைக்கும் மக்களின் குறைந்தபட்ச வாழ்வாதாரத்தை பாதுகாத்துவந்த மாகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்காமல் மோசடி செய்து வந்த பாசிச பா.ஜ.க, தற்போது திட்டத்தையே VB GRAMG என பெயர் மாற்றியுள்ளது. ஆண்டு தோறும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வந்த திட்டத்தை இல்லாமல் ஒழிப்பதற்காக வேலை நாட்களை குறைத்துள்ளது பாசிச பா.ஜ.க. இந்த மாநாடு பாசிச பாஜக வின் செயலை வன்மையாக கண்டிக்கிறது. கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பினை உறுதி செய்திட அனைத்து வகையிலான போராட்டங்களையும் கட்டியமைக்க அறைகூவல் விடுக்கிறது.

12. அமெரிக்க மேல்நிலை வல்லரசு நடத்தி வருகின்ற வர்த்தகப் போருக்கும் அதை எதிர்த்து முறியடிப்பதாக கூறிக் கொள்கின்ற சீனாவின் வரிக் கொள்கைகளுக்கும் இடையில் சிக்கிக் கொண்டு சுயசார்பு பொருளாதாரத்தையும், அரசியல் நிலைத் தன்மையையும், சொல்லிக் கொள்ளப்படும் இறையாண்மையையும் இந்தியா இழந்து நிற்கிறது. இதற்கு காரணமான பாசிச மோடி அரசு பதவி விலக வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

3. பல்வேறு இனங்கள், மொழிகள், கலாச்சாரங்கள், மதங்கள் கொண்ட நாட்டை, 'ஒரே மதம், ஒரே மொழி, ஒரே நாடு' என்ற இந்து, இந்தி, இந்தியா ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு ஆர்எஸ்எஸ் பாஜக கடந்த ஒரு நூற்றாண்டாக வேலை செய்து வருகிறது. 2014 ஆம் ஆண்டு முதல் நேரடியாக ஒன்றிய அரசின் அதிகாரத்தை குவித்துக் கொண்டு வெறித்தனமாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. இது மட்டுமின்றி 2029 ஆம் ஆண்டுக்குள் நாட்டை ஆரிய பார்ப்பன சாம்ராஜ்யமாக மாற்றும் எண்ணத்தில் மூர்க்கத்தனமாக செயல்படுகிறது. பாசிச பயங்கரவாத ஒடுக்கு முறைகளை எதிர்த்து முறியடிப்பதற்கு பாசிசத்தை வீழ்த்த வேண்டும் என்று போராடுகின்ற அனைத்து பிரிவு மக்கள் மத்தியில் ஐக்கியமும், குறிப்பிட்ட செயல் திட்டத்தின் கீழ் ஒற்றுமையும் பொது எதிரியான ஆர்எஸ்எஸ் பாஜகவை எதிர்த்து களமாடுகின்ற போர்க்குணமும் கொண்ட பாசிச எதிர்ப்பு ஜனநாயக மக்கள் முன்னணி கட்டியமைக்க வேண்டும் என அனைத்து உழைக்கும் மக்களையும் இம்மாநாடு அறை கூவி அழைக்கிறது.

14. விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்கள், சிறு குறு தொழில் முனைவர்கள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டு அனைத்து தரப்பு மக்களிடமும் செயல்படுவதற்கும், பாசிச பயங்கரவாதத்தின் பல்வேறு விதமான கொத்துக் குண்டு தாக்குதல்களை புரிய வைத்து ஓர் அணியின் கீழ் திரட்டுவதற்கு பாசிச எதிர்ப்பு ஜனநாயக மக்கள் முன்னணி கீழ் அனைத்து தொழிலாளர் அமைப்புகள் ஒன்றிணைய வேண்டும் என இம்மாநாடு அறை கூவி அழைக்கிறது.

15. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளான சங்கம் வைக்கும் உரிமை, கூட்டு பேர உரிமை வேலை நிறுத்த உரிமை ஆகியவை பாசிச பாஜக அரசு கொண்டு வந்திருக்கும் புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்பினால் இல்லாமல் ஒழிக்கப்பட்டுள்ளது. எனவே தொழிலாளர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க இனி தொழிற்சங்கங்கள் தனித்தனியே போராடினால் கார்ப்பரேட் - காவி பாசிசத்தை வீழ்த்த முடியாது. வீரிய ஒட்டு ரகமாக பரிணமித்துள்ள கார்ப்பரேட் காவி பாசிசத்தை வீழ்த்த தொழிற்சங்கங்களுக்கு இடையில் ஒற்றுமையை கட்டியமைப்பதற்கான வேலையை மாநாடு முன்னெடுக்கும். அதேவேளையில் இடதுசாரி சங்கங்கள் மற்றும் ஜனநாயக முற்போக்கு தொழிற்சங்கங்களுக்கு இடையில் ஒரு ஐக்கியத்தை உருவாக்கிட இந்த மாநாடு அறைகூவல் விடுக்கிறது.

இவண்,

**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,**

தமிழ்நாடு - புதுச்சேரி.

# டிசம்பர் 25: திருச்சியில், பு.ஜ.தொ.மு பேரணி – மாநாடு!

# ஓங்கட்டும் தொழிற்சங்க ஒற்றுமை! வெல்லட்டும் தொழிலாளர் உரிமை!

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி சார்பாக திருச்சியில் கடந்த 25.12.2025 மாலை 5 மணியளவில் மெகா ஸ்டார் தியேட்டர், பாஸ்போர்ட் அலுவலகம் அருகில் இருந்து பேரணி தொடங்கியது.இப்பேரணியை புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் திருச்சி மாவட்ட செயலாளர் தோழர் ஜீவா தலைமை தாங்கினார். பின்பு தோழரின் உரை அதனையடுத்து பறை இசை முழங்க பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். பேரணியில் தொழிலாளர் விரோத சட்டங்களை கண்டித்தும், மோடி அரசை கண்டித்தும், தொழிலாளர்கள் ஒற்றுமையை உயர்த்திப்பிடித்தும் முழக்கங்கள் எழுப்பியவாறு முழக்க பதாகைகள் மற்றும் செங்கொடி ஏந்தியவாறு நூற்றுக்கணக்கான தோழர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். இதில் தரைக்கடை வியாபாரிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், சுமைப்பணி தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள் வழக்கறிஞர்கள் என அனைத்து தரப்பு தோழர்களும் உற்சாகமாக பங்கேற்றனர்.

பேரணி மாநாட்டு திடலுக்கு வந்ததை அடுத்து தொடங்கப்பட்ட மாநாட்டிற்கு புஜதொமு மாநிலத் தலைவர் தோழர் இல.பழனி தலைமை தாங்கி நடத்தினார். கூட்டத்தில் உரையாற்றி தோழமை அமைப்பு தலைவர்களும் ஜனநாயக சக்திகளும் தொழிலாளி வர்க்கத்தை நவீன அடிமையாக்கும் பாசிச மோடி அரசை அம்பலப்படுத்திப் பேசினர். தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசும் போராடும் தொழிலாளர்களை கார்ப்பரேட் நலனுக்காக ஒடுக்குவது குறித்தும் அம்பலப்படுத்தினர். மேலும் தொழிலாளி வர்க்கம் பாசிச கும்பலை எதிர்த்து முறியடிக்க தொழிற்சங்க ஒற்றுமையின் அவசியம் குறித்தும் பேசினர்.

அகில இந்திய தொழிற்சங்கமான IFTU பொதுச் செயலாளர் தோழர் சீனிவாஸ் இந்த மாநாட்டில் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்.













# இதுதான் இன்றைய இந்தியா



உன்னாவ் பாலியல் வன்கொடுமை வழக்கில் பாஜகவின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குல்தீப் சிங் செங்காரின் ஆயுள் தண்டனை நிறுத்தி வைத்து, மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில் அவனுக்கு ஜாமீன் வழங்க டிசம்பர் 23, 2025 அன்று டெல்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பாலியல் வன்கொடுமையில் பாதிக்கப்பட்ட பெண்ணின் போராட்டத்தின் காரணமாக இந்த தீர்ப்பு கடுமையாக விமர்சிக்கப்படுவதோடு அவனது விடுதலைக்கெதிரான போராட்டங்களையும் தூண்டியுள்ளது. இந்தப் போராட்டங்களினால் அவனது ஜாமீன் ரத்து செய்யப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளான். ஆனால் இந்த வழக்கானது நீதித்துறையின் இரு வேறான முகங்களைக் காட்டுகிறது.

2017 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தின் உன்னாவில் சிறுமியை கடத்தி பாலியல் வல்லுறவு செய்து செய்த குற்றத்திற்காக அப்போது பாஜகவின் எம்எல்ஏவாக இருந்த குல்தீப் சிங் செங்கார் என்ற பாலியல் பொறுக்கி கைது செய்யப்பட்டான். 2019 ஆம் ஆண்டில் விசாரணை நீதிமன்றம் செங்கார் குற்றவாளி என்று தீர்ப்பளித்தது அரசு ஊழியர் ஒருவர் பாலியல் வன்கொடுமை குற்றத்தைச் செய்யும்போது, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 376(2)(b), போக்சோ சட்டத்தின் பிரிவு 5(C) ஆகியவற்றின் கீழ் தண்டனை விதிக்கப்படுகிறது. குல்தீப் செங்காரும் இதே பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட்டான்.

அதாவது போக்சோ சட்டத்தின் கீழ் கடுமையான குற்றத்திற்கு 20 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும். இது ஆயுள் தண்டனை வரை நீட்டிக்கப்படலாம். இதன் காரணமாக பாலியல் குற்றவாளி செங்காரின் குற்றத்தை கடுமையாக்கியது.

இப்போது இதைத்தான் நீதிமன்றம் கேள்விக்குள்ளாக்கி குற்றவாளியை தப்ப வைத்துள்ளது. அரசு ஊழியர்கள் என்றால் தண்டனை கடுமையாக்கப்படும், அரசு ஊழியர் இல்லை என்று சொல்லிவிட்டால்!? இந்த கிரிமினல்தனமான அணுகுமுறையைப் பயன்படுத்தியே குல்தீப் செங்கார் தப்ப வைக்கப்பட்டுள்ளான். அதாவது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 21 கீழ் அரசு ஊழியர் என்ற வார்த்தையின் வரையறையில் சட்டமன்ற உறுப்பினர்களை அரசு ஊழியர்கள் என்று சேர்க்கவில்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தீர்ப்பின்படி பார்த்தால் குறைந்தபட்சம் 7 ஆண்டுகள்தான் சிறை தண்டனை. அதனை செங்கார் ஏற்கனவே அனுபவித்து விட்டதால் இது போக்சோவின் பிரிவு 4-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தண்டனையை விட அதிகம் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. உச்சநீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள்காட்டி இது போன்ற சூழ்நிலைகளில் தொடர்ந்து தடுப்புக்காவல் நியாயமற்றது என்று பெஞ்ச் கூறியுள்ளது.

இவையெல்லாம் செங்காரை ஜாமீனில் விடுவிப்பதற்காக நீதிமன்றம் மேற்கொண்ட அயோக்கியத்தனங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த அளவுக்கு குற்றவாளிக்காக தீர்ப்பு எழுதியவர்கள் பாதிக்கப்பட்ட பெண்ணின் பக்கம் நின்று பார்க்கவே இல்லை. குல்தீப் செங்கார் மீது, நிருபிக்கப்பட்ட பாலியல் குற்றம் மட்டுமல்ல. பாதிக்கப்பட்ட பெண்ணை குடும்பத்தோடு கொலை செய்ய முயன்ற வழக்கும் நிலுவையில் உள்ளது. பாதிக்கப்பட்ட பெண் அவரது வழக்கறிஞர் மற்றும் உறவினர்களுடன் காரில் சென்றபோது லாரியை கொண்டு மோதச் செய்வதில் அவரின் இரண்டு அத்தைகள் கொல்லப்பட்டனர். வழக்கறிஞர் கடுமையாக காயமடைந்தார்.

இவையல்லாமல் சிறுமியின் தந்தையை போலீஸ்காவலில் தாக்கி பின்னர் அவர் உயிரிழக்க காரணமானதாக குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, இந்த தனி வழக்கில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வளவு மோசமான குற்றவாளியின் தண்டனையை தான் நீதிமன்றம் தற்போது நிறுத்தி வைத்துள்ளது.

டெல்லி உயர்நீதிமன்றத்தில் இந்த தீர்ப்பினை கண்டித்து செய்தியாளர்களிடம் பேசிய பாதிக்கப்பட்ட பெண், "ஜாமீன் உத்தரவு தனது குடும்பத்திற்கு மரணம் போன்றதே" எனக் கூறியுள்ளார். தனது குடும்பத்தின் பாதுகாப்பு குறித்த அச்சத்தையும் தீர்ப்பு வழங்குவதற்கு முன்பே பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பதாகவும் கூறி, உயர் நீதிமன்ற உத்தரவை உச்சநீதிமன்றத்தில் எதிர்த்து வழக்கு தொடரப் போவதாக அவர் கூறியுள்ளார்.

சமீப காலங்களில் நீதிமன்றத்தின் செயல்பாடுகள் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது நீதிமன்றங்கள் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நிற்காமல் குற்றவாளிகள் பக்கம் நிற்கிறது. இந்திய நீதிமன்றங்களின் நடத்தை மக்களிடத்தில் கேள்விக்குள்ளாகியுள்ளது.

பாலியல் குற்றவாளி குல்தீப் சிங் செங்காரை மட்டும் நீதிமன்றம் விடுதலை செய்யவில்லை இதற்கு முன்பு ஆசாராம் பாபு, குர்மீத் ராம்ரஹீம் சிங் உள்ளிட்ட மோசமான பாலியல் மற்றும் கொலை குற்றவாளிகளுக்கு ஜாமீன் வழங்கி உள்ளது. அதே நேரம் மக்கள் நலனுக்காக போராடிய இந்த தேசத்தின் உண்மையான போராளிகளை குற்றமே நிரூபிக்கப்படாமல் பல ஆண்டுகள் சிறையில் வைத்துள்ளது. அவர்களில் முன்னாள் ஜேஎன்யு பல்கலைக்கழக மாணவர் உமர் காலித் உள்ளிட்டவர்களும் அடங்குவர்.

பாலியல் குற்றவாளிகளை ஜாமீனில் விடுவிப்பதும்; விடுதலை செய்வதும்; அவர்களுக்காக தேசியக்கொடி ஊர்வலம் நடத்தும் இன்றைய இந்தியா தான் ஆர்எஸ்எஸ் பாஜக விரும்பும் ராமராஜ்யம், இந்துராஷ்டிரம். ■